



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS






MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

WEDNESDAY, 17TH SEPTEMBER 1958

VOLUME XV—No. 1


CONTENTS



GOVERNMENT OF MADRAS
1959

Legislature (Assembly) Department
Madras

PRICE, 37 *naye Paise*]



INDEX TO

MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

FOURTH SESSION OF THE SECOND LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

17th to 20th, 22nd to 25th and 29th and 30th September 1958.

Volume XV (Nos. 1 to 11)

TABLE OF CONTENTS.

Friday, 19th September 1958.

Saturday, 20*th September* 1958.

Monday, 22*nd September* 1958.


Tuesday, 23*rd September* 1958.

PAGES

Monday, 29th September 1958—cont.

Tuesday, 30th September 1958.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Wednesday, 17th September 1958.

The House met in the Assembly Chamber, Fort St. George, at eleven of the clock, Mr. Speaker (THE HON. DR. U. KRISHNA RAU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

MR. SPEAKER : The Hon. Minister for Local Administration wanted that the questions relating to her might be taken up ten minutes later. I have agreed to it.

Gramasevaks

* 151 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of candidates selected by the Madras Public Service Commission as Gramasevaks, Grade II, in 1957 ;

(*b*) the basis of their selection ; and

(*c*) the number of Harijan candidates among them?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 530 candidates.

(*b*) The candidates were selected by the Commission on the basis of the aptitude test conducted by the Joint Development Commissioner.

(*c*) Four candidates.

SRI M. JAGANNATHAN : May I know, Sir, whether information is available with the Hon. Minister regarding the number of Harijans who actually applied for these posts?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not have that information with me, Sir.

SRI A. GOVINDASAMY : கிராம சேவக் உத்தியோகத்திற்கு மனுச் செய்துக்கொண்ட பல பேர்கள் தங்களுடைய ஒரிஜினல் சர்டிபிகேட்களை அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுடைய சர்டிபிகேட்டுகள் இன்னும் திருப்பி அனுப்பப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கும், தேர்ந்தெடுக்கப்படாதவர்களுக்கும் அவர்களுடைய சர்டிபிகேட்களை உடனடியாக திருப்பி அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : பப்ளிக் சர்வீஸ் கமிஷனிடம் இந்த சர்டிபிகேட்கள் இருக்குமென்று நினைக்கிறேன். அதில் ஏதாவது தாமதம் இருக்குமானால் அந்த கவனித்து உடனடியாக அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

SRI P. G. MANICKAM : கிராம சேவக் உத்தியோகத்தில் சேர விரும்புவர்களின் படிப்பு, யோக்கியதை பற்றிய விவரங்களை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எஸ்.எஸ்.எல்.ஸி. பாஸ் செய்திருக்கவேண்டும்.

Sri T. T. DANIEL : May I know whether the Members of the Public Service Commission themselves actually interviewed the Gramasevaks or whether they nominated some other persons to interview the candidates?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir, they will not actually interview them. The Commission conduct the examination and the Joint Development Commissioner interviews the candidates.

Sri M. JAGANNATHAN : The Hon. Minister stated that only four Harijan candidates were selected out of about 530 selected. There seems to be something fishy about it. May I know the number of reserved vacancies for Harijans?

The Hon. Sri C. SUBRAMANIAM : There is nothing fishy. But every Harijan who passes the S.S.L.C. Examination thinks he should get a much higher job than the Gramasevak and so I am not surprised that only a few applied and a few got selected.

Presidency College, Madras

* 153 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the post of Professor of Sanskrit in the Presidency College, Madras, in the Madras Educational Service is vacant; and

(*b*) if so, the action taken so far to fill up that vacancy?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Thalavady hilly area

* 158 *Q.*—Sri P. G. MANICKAM : கனம் முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலிருக்கும் பவானிசாகர் தேசிய விஸ்தரிப்பு திட்ட பிரதேசத்திலிருக்கும் தாளவாடி மலைப் பிரதேசத்தைப் பிரித்து அப்பிரதேசத்துக்கு தனி திட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று ஜில்லா பிளானிங் போர்டு கூட்டத்திலும், பவானிசாகர் தேசிய விஸ்தரிப்புத் திட்ட ஆலோசனைக் கூட்டத்திலும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்பட்டிருகின்றனவா?

(ஆ) அவ்வாறு அனுப்பப்பட்டிருப்பின், இத் தீர்மானங்கள் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The question of constituting the Thalavadi firka into a separate block is under correspondence with the Government of India, whose decision is awaited.

Sri P. G. MANICKAM : பவானி சாகர் தேசீய விஸ்தரிப்புத் திட்ட பிரதேசத்திலிருந்து தாளவாடி மலைப் பிரதேசத்தை பிரிக்கவேண்டும், பொது மக்கள் கொடுக்கவேண்டிய தொகை கொடுக்க முடியாமல் கஷ்டப் படுகிறார்கள், அவர்கள் விஷயத்தை தனிமையாக கவனிக்க வேண்டும் என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவர்ன்மெண்டுக்கு தெரிவித்திருக்கிறார்களா? அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அதிகாரிகள் அதேமாதிரி தெரிவித்திருக்கிறார்களா என்பது தெரியாது. தாளவாடி மலைப் பிரதேசம் தனிப்பட்ட முறையில் கவனிக்கப்பட வேண்டும். அது ஒரு தனி டெவலெப்மெண்டு பிளாக்காக எடுக்கப்பட வேண்டும் என்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

17th September 1958]

Adult education

* 160 *Q*.—SRI K. VINAYAKAM (on behalf of Sri K. Ramachandran) : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of adult schools in the State.

(*b*) the strength of such schools;

(*c*) whether any target is fixed in this respect every year; and

(*d*) if so, the number of schools to be opened during 1958–59?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) 1,579 on 31st March 1958.

(*b*) 35,689.

(*c*) Yes, Sir.

(*d*) 60 schools.

* 161 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1957-ம் வருஷ ஆரம்பத்திலே எத்தனை முதியோர் வாசக சாலைகள் இருந்தன?

(ஆ) இவைகளில் எத்தனை பேர் படித்துக்கொண்டிருந்தார்கள் ?

(இ) ஷை வருஷத்தில் எத்தனை முதியோர் வாசக சாலைகள் மூடப் பட்டன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (அ) 1,644.

(ஆ) 45,850.

(இ) 260.

SRI P. G. MANICKAM : எழுதப்படிக்கத் தெரிந்து கொண்டார்களா என்பதை அறிவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மூலம் ஏதாவது பரீட்சை நடத்தப்படுகிறதா ? அம்மாதிரி பரீட்சை நடத்தப்பட்டால் எத்தனை பேர்களுக்கு சர்டிபிகேட்கள் வழங்கப்பட்டன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்த விவரம் என்னிடம் இல்லை.

SRI A. V. P. ASAITHAMBI : சென்னை நகரில் பல மன்றங்கள் முதியோர் கல்வியைப் பரப்புவதற்கு இரவு பள்ளிகளை நடத்துகிறார்கள். அந்தப் பள்ளிகளுக்கு அரசாங்கம் உதவி அளிக்க முன்வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : தேசிய விஸ்தரிப்பு திட்டம், சமுதாய நல அபிவிருத்தி திட்டம் நடக்கக்கூடிய இடங்களில் இந்த உதவி இப்பொழுது அளிக்கப்படுகின்றது. மற்ற இடங்களில் தனிப்பட்டவர்களின் முயற்சியால் நடந்துகொண்டு வருகிறது.

SRI P. S. CHINNADURAI : தொழிலாளர்கள் அதிகமாக வசிக்கின்ற பிரதேசங்களில் முதியோர் கல்விச்சாலைகளை அதிகப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது கவனிக்கப்படவேண்டிய விஷயம். அதற்காக ஒரு தனித் திட்டத்தை அங்கத்தினர் அவர்கள் சமர்ப்பித்தால், கட்டாயம் அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : அபிவிருத்தி வட்டாரங்களில் மாத்திரம் முதியோர் கல்விக்கு உதவி அளிக்கப்படுவதாகச் சொன்னார்கள். அபிவிருத்தி வட்டாரங்களில் சேராத பிரதேசங்களில் முதியோர் கல்வியை அமுலுக்குக் கொண்டுவராததற்கு அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : மற்ற இடங்களில் இது இப்பொழுது தனிப்பட்டவர்களின் முயற்சிக்கு விடப்பட்டிருக்கிறது. எல்லாப் பகுதிகளும் இந்த அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் வர இருப்பதால், அந்த சமயத்தில் முதியோர் கல்வித் திட்டம் எல்லா இடங்களிலும் அமுலுக்கு வரும்.

SRI K. ANBAZHAGAN : முதியோர் கல்வி பள்ளிக்கூடங்களில் சுமார் 260 மூடப்பட்டன என்ற கருத்தை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி மூடப்படுவதற்கு காரணம் என்ன? அந்த இடங்களில் எல்லா முதியோர்களும் கல்வி கற்றுவிட்டார்களா? அந்த இடங்களில் அவசியம் இல்லையா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இல்லை. 1954-ம் ஆண்டில் இந்த முதியோர் கல்வி திட்டத்தின் அடிப்படை மாற்றப்பட்டது. இதற்கு முன்பு 11 வயதிலிருந்து 45 வயது வரை இருக்கக்கூடிய எல்லோருக்கும் முதியோர் கல்வி அளிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் இந்த பள்ளிக்கூடங்கள் நடத்தப்பட்டன. அதற்கு பதிலாக, அதை மாற்றி ஆரம்ப காலத்திலே படிப்பு இல்லாமல் இருக்கக்கூடியவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களை படிக்க வைத்து விட்டால் பிறகு வயது வந்தவர்களில் படிக்காதவர்கள் இருக்கமுடியாது என்று கருதி, 8 அல்லது 9 வயதிலிருந்து 18 வயது வரையில் உள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவர்களுக்கு கல்வியை போதிக்கவேண்டுமென்ற முறையில் தேசீய விஸ்தரிப்புத் திட்டம், சமுதாய நல அபிவிருத்தி திட்டம் அமுலிலிருக்கும் பிரதேசங்களில் அதிகாரிகள் அதிகமாக இருக்கக்கூடிய காரணத்தினாலே அந்தப் பிரதேசங்களில் இந்த முதியோர் கல்வி திட்டம் பரப்பப்படுகிறது. இதனால் 260 பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டன.

SRI K. VINAYAKAM : Whereas it is considered that the amount spent on adult education is a criminal waste as the amount is spent on a dying generation, will the Government consider scrapping the whole of this scheme and concentrate more upon universal primary education which will solve our illiteracy problem sooner?

THE HON. SRI C. SUBRAMANIAM : I do not know whether it could be called a criminal waste. But we thought it was a waste and we are now concentrating on the age group of 9 to 18.

MR. SPEAKER : It is not advisable to use such strong language as 'criminal waste' and 'dying generation'.

SRI K. VINAYAKAM : I think it is not . . .

MR. SPEAKER : I only said that it was not advisable. The hon. Member may think it is right.

Community Development Scheme

* 165 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether he had received representations during his tour of Erode taluk during May 1958 that the Community Development Scheme should be extended to the whole of Erode taluk; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) & (*b*) No, Sir.

17th September 1958]

Sri N. K. PALANISAMI : இந்தப் பிரதேசம் மிகவும் பஞ்சப் பிரதேசமாக இருப்பதினால் அடுத்த வருஷத்தில் சமுதாய நல அபிவிருத்தி திட்டத்தை இந்தப் பிரதேசத்திற்கு விஸ்தரிப்பதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

Mr. SPEAKER : The main question of the hon. Member was whether the Hon. Minister had received any representation. Now the hon. Member is asking about something else. Next question.

Financial year

* 167 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have received any communication from the Central Government asking for the opinion of this Government about changing the financial year to begin from October 1st instead of the present April 1st?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir. The Government of India have recently re-examined the question and decided to continue the present arrangements.

Sri A. V. P. ASAITHAMBI : புதியதாக வகுக்கப்பட்ட சாகா ஆண்டு அமுலுக்கு வந்துவிட்டதா ? சாகா ஆண்டு வகுக்கப்படும்பொழுது ராஜ்ய சர்க்கார் உரிய முறையில் கலந்தாலோசிக்கப்பட்டதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அது காலெண்டரைப் பொறுத்தது. இது நிதி ஆண்டைப் பொறுத்தது.

Sri M. JAGANNATHAN : What were the reasons originally assigned by the Government of India to change the financial year?

The Hon. Sri C. SUBRAMANIAM : The Government of India never wanted to change the financial year. But proposals were made by the Bengal Government and a few other organizations that it should be changed. After full consideration the Government of India have come to the conclusion that it is not necessary to change it.

Fort St. George

* 205 *Q.*—Sri N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to shift the military stationed at the Fort St. George to the Government Estate, Mount Road, and to provide accommodation to Members of Legislature in the Fort St. George itself?

The Hon. Sri C. SUBRAMANIAM : No, Sir.

Sri N. R. THIAGARAJAN : மெம்பர்களுக்கு இங்கே இடம் கொடுக்க வேண்டியதற்காகவும், சர்க்கார் காரியாலயங்களை இங்கே வைப்பதற்கும், முதலில் மிலிட்டரியை இங்கிருந்து வேறு இடத்திற்கு மாற்றச் செய்ய சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த இடம் முதலில் மிலிட்டேரிக்குச் சேர்ந்தது. அவர்கள் இங்கிருந்து செல்ல ஒப்புக்கொள்ள வேண்டும். அதன் பிறகு காரியாலயங்களைக் கொண்டு வருவது பற்றி யோசிக்க வேண்டும். முதல் காரியமே நடைபெறாத போது மற்றவைகளைப்பற்றிப் பேசி என்ன பிரயோஜனம்.

SRI A. V. P. ASAITHAMBI: கனம் தியாகராஜன் அவர்கள் கேள்வி, சட்ட சபை அங்கத்தினர்களுக்கு இடவசதியில்லை என்பதுதான். சென்னை மவுண்ட் ரோட் சர்க்கார் மாளிகையில், விடுதிகள் தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜாராம் நாயுடு அவர்களுக்கும், காலம் சென்ற வரதராஜுலு நாயுடு அவர்கள் குடும்பத்தினருக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறதே, அதனால், எங்களுக்கு இடம் இல்லாமல் போகிறதே என்ற காரணத்திற்காக அவைகளை எங்களுக்கும் கொடுக்க சர்க்கார் முயற்சிக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: சட்ட சபை அங்கத்தினர்களுக்கு எத்தனை வீடுகள் ஒதுக்கப்பட்டிருக்கிறதோ அவற்றில் ஒரு வீடு கூட எடுத்துக்கொள்ளப்படவில்லை. ஸ்ரீ ராஜாராம் நாயுடு அவர்கள் ஸ்டேட் (பஞ்சாயத்து) யூனியன் பிரஸிடெண்ட் ஆக இருப்பதால், அவர்கள் யூனியன் காரியாலயத்தில் இருக்கிறார்கள்.

SRI A. A. RASHEED: Will the Government address the Union Government for shifting the military to some rural areas?

MR. SPEAKER: How does that question arise here? (Laughter.)

SRI M. KALYANASUNDARAM: இராணுவ இலாக்காவை வேறு இடத்திற்குப் போகச் சொல்லாவிட்டாலும், சர்க்கார் காரியாலயங்கள் பூராவையும், மவுண்ட்ரோட் பகுதிக்கு மாற்ற முயற்சி செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: எந்தப் புதிய இடத்திற்கு மாற்றுவதானாலும் கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்க வேண்டியிருக்கும். அதற்கு செலவாகும் கோடிக்கணக்கான ரூபாயை மற்ற திட்டங்கள் நிறைவேற்றப்படுவதில் செலவழிக்கலாம் என்று ஈடுபடுகிறோம்.

Annamalai University

*212 *Q.*—SRI N. K. PALANISAMI: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Annamalai University buildings were handed over to the Sub-Collector, Chidambaram, on 30th March 1957; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI: மாணவர்கள் குறைகளை சமாதான முறையிலேயே தீர்க்க வேண்டும் என்று, வைஸ் சான்ஸலரோடு பேசிக்கொண்டிருக்கும்போதே, கலெக்டரிடம் இவை கொடுக்கப்பட்டனவா?

MR. SPEAKER: No. The answer given was 'No'.

SRI M. KALYANASUNDARAM: கட்டிடத்தை விட்டு வெளியே போகவேண்டும் என்று மாணவர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதா? அவர்கள் திரும்பவும் சேர்த்துக்கொள்ளப்பட்டு விட்டார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM: யூனிவர்ஸிடியில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள் மீது இருந்த கேஸ்கள் வாபஸ் ஆகிவிட்டது.

17th September 1958]

Sri A. GOVINDASAMY : அண்ணுமலை பல்கலைக் கழக கட்டிடத்தை சப்-கலெக்டரிடம் விடாவிட்டாலும், மாவட்டக் கலெக்டரிடம் விடப்பட்டதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : முதலிலே, கேள்வியில் கொடுக் கப்பட்டிருக்கும் தேதியே தப்பு. 30—3—57 என்று இருக்கிறது. (சிரிப்பு.) 30—3—58 என்றே வைத்துக் கொண்டாலும், சப்-கலெக்டராளுலும், டிஸ்டிரிக்ட் கலெக்டர் என்றிருந்தாலும், அதே பதில்தான்.

Sri M. C. MUTHUKUMARASWAMY : கலவரத்தில் ஈடுபட்ட மாண வர்கள் 72 பேர்கள் மீது கேசுகள் போடப்பட்டன. அவர்கள் அம்மாதிரி ஈடுபட்டார்கள் என்ற விஷயத்தை ஸ்காலர்ஷிப் போர்டுக்கு தெரிவிக்கப் பட்டதா?

The Hon. Sri C. SUBRAMANIAM : அந்தக் கேள்வி சம்பந்தப்பட்ட மட்டில், அந்த 72 பேர்கள் மீது இருந்த கேஸ்கள் அவர்கள் வருத்தம் தெரிவித்த பிறகு, அவர்கள் மட்டும் அல்ல, அவர்கள் பெற்றோர்களும் வருத்தம் தெரிவித்து எழுதி கொடுத்த பிறகு—கேசுகளை வாபஸ் வாங்கி, அவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

Sri A. V. P. ASAITHAMBI : கடந்த 30-ம் தேதி, மார்ச்சு, நடை பெற்ற இந்த சம்பவம் பற்றி அறிக்கை வெளியிடும் போது, அமைச்சர் அவர்கள், அந்தக் கலவரத்திற்கு பரிகாரம் கண்டுபிடிக்கும்படி கேட்டிருந்தால், செய்திருப்பார்கள் என்று கூறினார்கள். 30-ம் தேதி இரவு, கல்வி அமைச்சர் பரிகாரம் தேட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப் பட்டார்களே, அவர்கள் என்ன முயற்சி எடுத்தார்கள் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : டி. எம். கேவினருக்கு எந்த அரசியல் நோக்கம் இருந்தாலும், என்னைப் பொறுத்த வரையில், அந்த சம்பவம் சுமுகமாக முடிவாகிவிட்டது. டி. எம். கே. அதைக் கிளப்பிவிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : கேள்விக்கு சம்பந்தமல்லாமல் உபகேள்வி கேட்டால் என்ன செய்வது? தனிக் கேள்வி கேட்கலாம். கட்டிடத்தைப் பற்றிய கேள்விகள் மேல், 30–ம் தேதி நிகழ்ச்சியைப் பற்றி கேள்வி கேட்டால் எப்படி?

Basic Education Training Schools

* 218 *Q.*—**Sri P. G. MANICKAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நம் மாகாணத்திலிருக்கும் உபாத்தியாயர்களுக்காக நடத்தப் படும் மூன்று மாதகால அடிப்படை கல்விப் பயிற்சி சாலைகள் 1957–58–ல் எத்தனை ஆரம்பிக்கப்பட்டது.?

(ஆ) என்னென்ன துறையில் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது?

(இ) 1957–58–ல் இப்பயிற்சிக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தொகை எவ் வளவு?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) 29

(*b*) A copy [a] of the scheme of work for three months' course of retraining in Basic Education is placed on the table of the House.

(*c*) Rs. 2,16,000.

Sri P. G. MANICKAM : அவ்வாறு ஆதாரக் கல்வி பயிற்சி உபாத்தியார்கள் இருக்கும் இடங்களிலெல்லாம், மாணவர்களுக்கு, தக் ளியும், ராட்டையும் சப்ளை செய்வதற்கு திட்டம் சர்க்காரிடம் இருக்கிறதா ?

---

[a] Printed as Appendix I on pages 84–87 infra.

THE HON. SRI C. SUBRAMANIAM : ஆதாரக் கல்வி எந்தப் பள்ளிக் கூடங்களில் இருக்கிறதோ அங்கெல்லாம் இவை சப்ளை செய்யப்படுகின்றன. ஆதாரக் கல்வி முறையில் அந்தப் பள்ளிகள் மாற்றப்படாமலிருந்தால் அந்தப் பள்ளிகளில் பயிற்சி பெற்ற உபாத்தியாயர்கள் இருந்தாலும், சப்ளை செய்யப்படுவதில்லை.

SRI A. VEDARATHNAM : இந்த மாகாணத்தில் உள்ள எல்லாப் பயிற்சி நிலயங்களும், ஆதாரப் பள்ளிகளாக ஏற்படவேண்டும் என்ற திட்டம் எந்த அளவில் நிறை வேற்றப்பட்டிருக்கிறது? சுற்றியுள்ள பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றவேண்டும், அங்குள்ள உபாத்தியாயர்களுக்கு ரீட்ரெயினிங், மறுபயிற்சி கொடுக்கவேண்டும் என்பது அமுலாக்கப்பட்டு வருகிறதா?

THE HON. SRI C. SUBRAMANIAM : முதல் கேள்வியைப் பொறுத்த வரையில், இந்த வருஷம் 8 பயிற்சி நிலயங்கள் ஆதாரப் பள்ளிகளாக மாற்றப்பட்டிருக்கின்றன. இரண்டாவது திட்டகாலத்திற்குள் எல்லாப் பயிற்சி நிலயங்களும் ஆதாரப் பள்ளிகளாக மாறிவிடும். இன்னொன்றுக்குத் தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI C. NATARAJA ODAYAR : அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி, ஆதாரப் பயிற்சி ஆசிரியர்களுக்கு ராட்டையும், தக்ளியும் அளிக்கப்படுவதால், கல்வித்தரம் குறைகிறது என்ற விஷயம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : 'கல்வி' என்பது என்ன என்பதை அங்கத்தினர் அவர்கள் சொல்வார்களானால், எந்த அளவுக்குக் குறைகிறது அல்லது இல்லை என்று சொல்ல முடியும். பரீக்ஷித்துப் பார்த்தவர்கள், அதிக அறிவு வளர்ச்சி இருப்பதாகவே சொல்லுகிறார்கள்.

Polytechnics

*224 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of Sri V. K. Kothandaraman) : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1952 முதல் 1957 வரை ஜில்லா வாரியாக எந்தெந்த ஊர்களில் என்னென்ன பாலிடெக்னிக் நிலயங்கள் நடைபெறுகின்றன ?

(ஆ) அவைகளுக்காக 1958–59–ல் ஒதுக்கப்பட்ட பணம் எவ்வளவு?

(இ) 1958–59–வது ஆண்டுகளில் எந்தெந்த ஊர்களில் பாலிடெக்னிக் நிலயங்கள் ஆரம்பிக்க ஏற்பாடாயிருக்கின்றன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*)

Name of district.	*Place where opened and name of the Polytechnic.*
Chingleput	A.M.M. Charities Polytechnic, Avadi (1957).
Tiruchirappalli ..	Seshasayee Institute of Technology, Tiruchirappalli (1952).
Coimbatore	Nachimuthu Polytechnic, Pollachi (1957).
Ramanathapuram ..	Alagappa Polytechnic, Karaikudi (1955).
	Annamalai Polytechnic, Chettinad (1956).

17th September 1958]

(b) Rs. 8,85,900.

(c) (1) Tanjore.

(2) Virudhunagar (Ramanathapuram district).

(3) Salem.

(4) Thalaiyuthu (Tirunelveli district).

SRI A. GOVINDASAMY : அம்மாதிரி தனியாரால் நடத்தப்படுவது அண்ணாமலை பாலிடெக்னிக்கா, அல்லது முத்தையா பாலிடெக்னிக்கா? அதற்கு எவ்வளவு மான்யம் சர்க்கார் கொடுக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : மற்ற நிலையங்களுக்குக் கொடுக்கப்படும்முறையில் தான் இதற்கும் கொடுக்கப்படுகிறது.

SRI N. S. RAMALINGAM : தஞ்சாவூர் நிலையம் நிரந்தரமாக நாகப்பட்டணத்தில் வைக்கவேண்டும் என்ற கோரிக்கை எந்த அளவில் இருக்கிறது?

THE HON. SRI C. SUBRAMANIAM : அது பரிசீலனையில் இருக்கிறது.

SRIMATHI T. N. ANANDANAYAKI : குடியாத்தத்தில் பாலிடெக்னிக் வைப்பது எந்த அளவில் இருக்கிறது?

MR. SPEAKER : The hon. Member may put a separate question as the supplementary question does not relate to the main question.

Madras Cabinet

* 229 Q.—SRI N. K. PALANISAMI (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் முதல் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) மந்திரி சபையில் மந்திரிகளை அதிகப்படுத்தும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அதற்கான காரணம் என்ன?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) No.

(b) Does not arise.

SRI V. SANKARAN : இப்பொழுது குறைவான எண்ணிக்கையே இருப்பதாலும், இதனால் ஒரு சிலருக்கு அதிகமான இலாக்காகள் இருப்பதாலும், பல இலாக்காக்களைப் பார்க்கவேண்டியவர்கள் பொறுப்பு, மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருப்பதாலும், எபிஷியென்ஸி குறைகிறதானாலும். . .

MR. SPEAKER : The hon. Member must not use argument when putting questions. Unless he rectifies it and puts it in the form of a question, I shall call upon the next Member.

SRI V. SANKARAN : It is only one sentence, Sir.

MR. SPEAKER : It is not a question of one sentence. It should not contain argument. It is different from the main question.

SRI V. SANKARAN : எபிஷியென்ஸி குறைகிறது என்பதை சர்க்கார் உணர்கிறதா, அதற்காக உடனடியாக நடவடிக்கைகள் அரசாங்கத்தார் எடுப்பார்களா ?

SRI K. ANBAZHAGAN : Sir, the question that was put was read from manuscript. Is reading from a manuscript permissible?

[17th September 1958

MR. SPEAKER : Any member may look into notes for purposes of asking questions. There is nothing wrong in it.

THE HON. SRI C. SUBRAMANIAM : அங்கத்தினர் வாதங்கள் பொருந்தாத வாதங்கள் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI A. V. P. ASAITHAMBI : அமைச்சர் அவையில் இஸ்லாமியருக்கு போதிய பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டுமென்ற அவசியம் இருப்பதால் அமைச்சர் அவையை விஸ்தரித்து அதில் இஸ்லாமியர் ஒருவரைப் போடுவதற்கு அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : யார் யாருக்கு எந்தெந்த சமயத்தில் மந்திரி சபையில் இடம் கொடுக்க வேண்டுமென்பதை முடிவு செய்யக்கூடிய விஷயம் கனம் முதல் மந்திரியினிடம் இருக்கிறது. மந்திரி சபையை விஸ்தரிக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் என்பதைப்பற்றி கனம் முதல் மந்திரி அவர்கள் முடிவு செய்வார்.

Civil Aviation Course

* 230 Q.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) the number of students belonging to Scheduled Castes and Scheduled Tribes who had applied for the Civil Aviation Course in the Madras Flying Club during the year 1956–57 and 1957–58; and

(b) the number of students selected for that course in each year?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) & (b) During 1956–57 and 1957–58 out of seven and nine Scheduled Castes candidates who applied for the scholarships, two and three respectively were selected for the award of scholarship. Of the three candidates selected in 1957–58, one did not accept the scholarship. Only one candidate belonging to the Scheduled Tribes applied for the scholarship in 1956–57 and he was selected. For 1957–58 no candidate belonging to the Scheduled Tribes applied for the scholarship.

SRI M. JAGANNATHAN : Sir, What is the quantum of financial aid given to the Civil Aviation Course?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, a fixed subsidy of Rs. 25,000 is offered to the Madras Flying Club. Besides that, twenty scholarships per year each of the value of Rs. 500 at the rate of Rs. 10 per flying hour for 50 hours, are given. (The Madras Flying Club will be able to get Rs. 40 per flying hour from the Government of India in respect of these scholarships.) In addition, the Government have also sanctioned four non-residential scholarships of Rs. 191 each to the members of Harijan and other Backward communities (two for Harijans and two for other Backward communities) so as to enable them to meet incidental expenses such as subscriptions, deposits, medical examination fees, etc.

17th September 1958]

"Kattabomman"

*231 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) the number of years the surviving descendant of Kattabomman is being paid allowances; and

(*b*) whether any steps have been taken to repair his fortress in Panchalakurichi?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Sri D. Subramania Dorai, the only surviving member of the Kattabomman family is being paid a compassionate allowance of Rs. 47-8-0 per mensem from 15th October 1935 and a temporary increase of Rs. 5 per mensem from 1st November 1944.

(*b*) The fortress of Kattabomman at Panchalakurichi is not in existence and hence the question of repairing it does not arise.

SRI S. B. ADITYAN : கட்டபொம்மன் காலத்திற்கு முன்னதாகவே வெள்ளைக்காரர்களை எதிர்த்துப் போராடிய புலித்தேவன் சந்ததியார்களுக்கும் ஏதாவது உதவி கொடுத்து ஆதரிக்கக் கூடாதா ?

MR. SPEAKER : The hon. Member may put a separate question.

SRI N. K. PALANISAMI : பிரட்டிஷ்காரர்கள் வேண்டுமென்றே கோட்டையை இடித்து தரை மட்டமாக்கி விட்டார்கள். அதன் காரணமாக . . . .

MR. SPEAKER : Is the hon. Member giving information or is he asking a question?

SRI N. K. PALANISAMI : சர்க்கார் அதே இடத்தில் மறுபடியும் ஒரு கோட்டையைக் கட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்படிக்கட்டுவதாக இருந்தால் எத்தனையோ கோட்டைகளைக் கட்டுவதாக இருக்கும். இப்படி எத்தனையோ கோட்டைகள் இடிக்கப்பட்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் கட்டுவதற்குத்தான் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இடம் இருக்கும்.

SRI M. KALYANASUNDARAM : கட்டபொம்மனுக்கு ஏதாவது நினைவு சின்னம் நிறுவுவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? அப்படி இருந்தால் அதை இந்த கோட்டைக்குள்ளேயே கட்டுவதற்கு ஏதாவது உத்தேசம் உண்டா ? அப்படிப்பட்ட ஒரு யோசனையை இந்த சர்க்கார் யோசிப்பார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்தக் கோட்டைக்குள் கட்டுவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் இல்லை.

SRI K. SATTANATHA KARAYALAR : கட்டபொம்மன் ஞாபகார்த்தமாக ஏதாவது நினைவு சின்னம் எழுப்பவேண்டும்என்று ஏதாவது வேண்டுகோள் சர்க்காரிடம் வந்திருக்கிறதா, அல்லது இருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது தகவல் இல்லை. சமீபத்தில் தான் பாளையங்கோட்டையில் ஒன்று வைக்கவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அது கனம் அங்கத்தினருக்குத் தெரியும்.

[17th September 1958

SRI K. ANBAZHAGAN : கட்ட பொம்மன் அவர்களுடைய பெரும் தொண்டைப்பற்றியும், தியாகத்தைப்பற்றியும் பல விதமான கருத்து வேறுபாடுகள் நாட்டில் உலாவி வருவதாக இருப்பதன் காரணத்தால் அதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு ஒரு குழுவை அமைத்து அதைப் பற்றி ஆராய்ச்சி செய்ய அரசாங்கம் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த ஆராய்ச்சி குழு முடிவு செய்ததைப்பற்றியும் ஆராய்ச்சி செய்ய வேறு ஒரு குழுவை அமைக்கும் படியாக இருக்கலாம். ஏனென்றால் அதைப்பற்றியும் மாறுபட்ட கருத்துக்கள் வரலாம். இப்படி ஆராய்ச்சி குழு ஏற்பட்டுக்கொண்டே யிருக்கும். அதனால் இதைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.

SRI K. VINAYAKAM : Sir, since the amount paid to the surviving descendants of Sri Kattabomman is tantalisingly negligible and paltry, will the Government think of the possibility of increasing it and also calling it not a 'compassionate allowance' but a 'deserving grant'?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, even this allowance will be stopped after the life-time of the present recipient and I do not think that we should go on undertaking liabilities based on past services and ancestral rights.

Homœopathy

* 232 *Q.*—SRIMATHI T. N. ANANDANYAKI AND SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(a) what the Diploma usually awarded for those who pass examination in Homoeopathy medicine is;

(b) whether those who are qualified in Homœopathy can call themselves as Doctors;

(c) whether the Government are aware of the fact that many persons after having taken postal tuition in Homœopathy affix Doctor before their names; and

(d) if so, the action proposed to be taken by the Government to stop this practice?

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) The Homœopathic system of medicine has not yet been recognized by this Government. The question of granting any diploma to those who pass the examination in the system does not therefore arise.

(b) & (c) The use of the title 'Dr.' by practitioners of any system of medicine is not statutorily prohibited.

(d) Does not arise.

* 233 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to state :—

(a) whether the Government are aware of the fact that many so-called doctors of medicine in homœopathy are practising without proper qualification and training; and

(b) if so, the action proposed to be taken by the Government to stop such practices?

17th September 1958]

THE HON. SRI M. A. MANICKAVELU : (a) & (b) The Homœopathic system of Medicine has not yet been recognized by this Government and as such the question of taking any action does not arise.

SRI A. A. RASHEED : Sir, is the Hon. Minister aware of the fact that the lives of many persons are put in danger because of these self-styled quacks?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, this Homœopathic system of treatment is simple though it takes a long time to cure the disease; I do not think that it would have caused any danger to lives.

SRIMATHI T. N. ANANDANAYAKI : ஐந்து வருஷங்கள் மருத்துவக் கல்லூரியில் படித்துவிட்டு டாக்டர் பட்டம் பெற்றவர்களும், மருத்துவர் கல்லூரியின் நிழலிலேயே கூட ஒதுங்காத சிலரும் டாக்டர் என்று பெயர் வைத்துக்கொண்டு இருப்பதால் மக்களிடத்தில் ஒரு குழப்பம் ஏற்பட்டிருக்கிறது என்பதை கனம் மந்திரி அவர்கள் அறிவாரா ? அந்தக் குழப்பத்தின் காரணமாக பல உயிர்கள் பலியிடப்படுவதை அவர் உணருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்பொழுது இருக்கிற இந்திய மெடிகல் டிக்கிரீஸ் ஆக்ட் பிரகாரம் அது முடிந்துவிட்டவுடன் டாக்டர் என்று பட்டம் வைத்துக்கொள்வது இல்லை. ஆனால் இந்த முறையில் அநேகம் உயிர்கள் பலியிடப்படுகின்றன என்பதை நான் ஒத்துக்கொள்ளவில்லை.

SRI K. ANBAZHAGAN : இந்த ஹோமியோபதி மருத்துவ முறையில் மூளை கோளாறுபட்டவர்களுக்கும் மனோ அமைதி இழந்தவர்களுக்கும் சில மருந்துகள் இருக்கின்றன என்பதையும் பல வைத்திய வல்லுநர்கள் தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட மருந்துகளை அதிகமாக மக்கள் அறியும்படி அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவார்களா ?

MR. SPEAKER : குறிப்பிட்ட இந்த இரண்டு வியாதிகளுக்கு மாத்திரம் தானா ? எல்லாவற்றிற்கும் தான்.

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த முறை பிரகாரம் இதில் குணமாகிறதோ இல்லையோ, ஒன்றும் கெடுதி ஏற்படுவதற்கு இடமில்லை.

• • • • •

Planning Board, Madurai

*234 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எல்லா ஜில்லாக்களிலும் புதியதாக ஜில்லா அட்வைசரி கமிட்டிகள் ஸ்தாபித்திருக்க மதுரை ஜில்லாவில் மட்டும் பழைய ப்ளானிங் போர்டே இன்னும் வேலை செய்துவரக் காரணம் என்ன ?

(ஆ) புதிய அமைப்பு அமைக்கும்படி தனக்கு உத்தரவு வரவில்லையென மதுரை ஜில்லா கலெக்டர் கூறுவது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) புதிய அட்வைசரி கமிட்டியின் அதிகாரங்கள் என்ன ?

* Expunged on a motion adopted by the House.

[17th September 1958

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) An Advisory Committee has been appointed to function in every district in the State excluding the Kanyakumari district and the Shencottah taluk of the Tirunelveli district. The Advisory Committees have been modelled on the lines of the District Planning Boards already functioning in the districts.

(*b*) The Government Order has been communicated to all District Collectors including the District Collector of Madurai and an Advisory Committee has already been formed in the district.

(*c*) The Committee has been appointed for the purpose of advising the Special Officer of the District Board in the discharge of his duties and functions as the District Board and its president. Its functions are purely advisory in character.

Road

* 235 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the plan to construct a road from Kolathakurichi to Naduvapatti has been revised ; and

(*b*) if so, the reasons therefor ?

* THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 236 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) what is the allotment of funds set apart by the Corporation of Madras in the Budget year, 1958–59, for improvement and laying out fresh roads in the extended areas in the City of Madras ;

(*b*) what is the loan applied for by the Corporation of Madras to the Government of Madras on this account ?

(*c*) whether it was granted ; and

(*d*) whether there was any proposal to increase ahe allotment ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (*a*) Nil.

(*b*) Rs. 2 lakhs.

(*c*) A loan of Rs. 50,000 will be sanctioned in 1958–59.

(*d*) No, Sir.

11-30 a.m. SRI K. VINAYAKAM : Sir, when the Corporation made a request for the loan of Rs. 2 lakhs for the improvement of these roads in the extended area, why were the Government so unkind as to refuse to grant the loan ?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : The Government are not unkind. But owing to the financial difficulty, they have granted only Rs. 50,000.

17th September 1958]

Tank Improvement Works

* 237 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of tank improvement works taken up in 1957–58;

(*b*) the number of acres of land benefited by them; and

(*c*) the number of cases in which the Government have levied betterment fees on the lands benefited by these works?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 925.

(*b*) 32,752.

(*c*) No betterment fee has been levied during the year 1957–58.

SRI M. JAGANNATHAN : Will the Government consider the desirability of undertaking a comprehensive scheme in order to reclaim some of the tanks in each district which are under disrepair and disuse?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I may tell the hon. Member that the Government are taking up this scheme in as comprehensive a manner as possible.

Pedigree Bulls

* 238 *Q.*—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether any high class pedigree bulls of the Frisian or Holstein type are maintained in any of the dairy forms and

(*b*) if so, where and how many?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

" Family Welfare Scheme "

* 239 *Q.*—SRI A. A. RASHEED : Will the Hon. the Minister for Revenue be pleased to place on the table of the House " Family Welfare Scheme " recommended by the Family Planning Board?

THE HON. SRI M. A. MANICKAVELU : A copy[a] of the Proceedings of the Government No. 1714 Health, dated 26th May 1958 in which " Public Employees Family Welfare Scheme " has been sanctioned in pursuance of the recommendation of the Family Planning Board is placed on the table of the House.

SRI A. A. RASHEED : Sir, is it a fact that the Union Government have discouraged ' Vasectomy ' and sterilisation of women, as a method of family planning?

THE HON. SRI M. A. MANICKAVELU : To my knowledge, I do not think they have discouraged it.

---

[a] Printed as Appendix II on pages 88–98 infra.

SRI A. V. P. ASAITHAMBI : தலைவர் அவர்களே, குடும்பக் கட்டுப்பாட்டு முறையைப் பரப்புவதற்காக அரசாங்கம் தீவிர முயற்சி எடுக்கும். இதே சமயத்தில் ஜனங்களிடத்தில் இருக்கும் அபிப்பிராயம் ஆண்டவனைக் பார்த்துக் கொடுப்பதினால் குழந்தை பிறக்கிறது என்று ஜனங்கள் நினைக்கிறார்கள். ஆகையால், சர்க்கார் எவ்வளவு தான் முயற்சி எடுத்தாலும் பயனற்றுப் போய்விடுகிறது. எனவே, குழந்தை பிறப்பதற்கும் ஆண்டவனுக்கும் சம்பந்தம் இல்லை என்ற பிரசாரத்தை இந்த போர்டின் மூலமாக ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த முறைப் பிரகாரம், குழந்தை வேண்டும் என்று ஆண்டவன் உத்தேசப்பதற்கு முன்பே ஒரு நடவடிக்கையை எடுத்துக்கொள்கிறோம்.

SRI K. VINAYAKAM : Sir, may I know whether any emoluments are given to the persons who subject themselves to this vasectomy operation? May I also know what is the physical reaction that is left upon the human being, as far as sexual relations are concerned, after the operation is effected upon?

THE HON. SRI M. A. MANICKAVELU : The amount given to the male person who undergoes this operation is Rs. 15 and that for the woman Rs. 25. This amount is given to meet the conveyance and other incidental charges. As to the after-effect of the operation, the hon. Member will go through the pamphlet placed on the table of the House. The operation has got good effect and, in fact, it is said that the persons improve very much in health after the operation.

SRI A. A. RASHEED : Sir, may I know the number of persons who have undergone vasectomy and sterilisation in the last two years?

THE HON. SRI M. A. MANICKAVELU : The hon. Member will please put a separate question. I have no information with me now.

House-sites

* 240 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state in how many places in the Tanjore district house-sites have been allotted to the teachers of the Harijan Welfare Schools?

THE HON. SRI P. KAKKAN : No house-sites have been allotted to teachers employed in Harijan Welfare Schools in Tanjore district.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த ஹரிஜனப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களை அடிக்கடி மாற்றுவதினால் புதிய இடங்களுக்குச் சென்று குடியேற வசதியில்லாமல் இருக்கிறது. அப்பொழுது அவர்கள் அதிகாரிகளிடத்தில் சென்று, பழைய இடங்களிலே போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளவேண்டி ஏற்படுகிறது. இதனால் கல்வித்தரம் பாதிக்கப்படுகிறது. ஆகையால், இனியாவது அம்மாதிரி மனைகளை ஒதுக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : தனிக் கேள்வி போட்டால், பரிசீலனை செய்யலாம்.

17th September 1958]

Political prisoners

* 241 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Government have received any representation from the political prisoners imprisoned in this State for their release;

(*b*) whether the Government have examined their cases individually; and

(*c*) if so, with what results?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) From time to time the Government have been receiving representations from 'political' prisoners for their premature release.

(*b*) Yes.

(*c*) Orders are passed on the merits of each case and sentences have been remitted in a few cases.

SRI N. K. PALANISAMI : அரசியல் கைதிகள் செய்த குற்றங்களை மன்னித்து சமீபத்தில் ஆந்திர சர்க்கார் கொலைக் குற்றம் செய்த கைதிகளைக்கூட மன்னித்து விடுதலை அளித்ததுபோல, இந்தச் சர்க்காரும், இருக்கும் குற்றவாளிகளை மன்னித்து விடுதலை செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கோர்ட்டார் தண்டனை கொடுத்துவிட்ட பிறகு மன்னிப்பதற்கு ஒன்றுமில்லை. மற்ற ராஜ்யங்கள் செய்து கொண்டு வருகிறார்கள் என்றால், இந்த ராஜ்ய சர்க்காரும் அவ்வப்போது இந்தப் பிரச்னையைக் கவனித்து வேண்டியதைச் செய்து கொண்டிருக்கிறது.

SRI A. A. RASHEED : Sir, may I know the number of political prisoners still undergoing imprisonment and what parties do they belong to?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I am sorry, Sir, I have no information.

SRI K. ANBAZHAGAN : அரசியல் போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்கள்—குறிப்பாக திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவர்கள்—மூன்று, நான்கு பேர்கள் அடிக்கடி நோய் வாய்ப்பட்டு இறந்துபோன காரணத்தால், அப்படிப்பட்டவர்களை, உடல் நிலை காரணத்தால் உடனடியாக விடுதலை செய்ய அரசாங்கம் யோசிக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அரசியல் கைதிகளின் உடல் நிலையும் அப்போதைக்கப்போது கவனிக்கப்பட்டு வருகிறது. சிகிச்சை செய்தும் பயன் இல்லை என்று ஏற்பட்டால், அவர்கள் விடுதலை செய்யப் படுகிறார்கள்.

Process-servers

* 242 *Q.*—SRI T. T. DANIEL : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the security allowance now given to the Process-servers in the Kanyakumari district will be continued;

(*b*) whether the rules governing the grant of dearness allowance to the employees of this State are applicable to Process-servers in the Kanyakumari district;

(c) the pay and allowance of Process-servers (i) in the Kanyakumari district and (ii) in the other districts;

(d) how the Process-servers are recruited;

(e) the minimum qualifications required;

(f) whether personal travelling allowance is given to Process-servers; and

(g) if so, what is the rate of the allowance and on what principle it is given?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) This question is under consideration of Government.

(b) No, Sir.

(c) (i) *Kanyakumari district* : Scales of pay : Rs. 25—1—35 per mensem; dearness allowance Rs. 25 for those who draw pay upto Rs. 30 per mensem and Rs. 27 for those who draw more than Rs. 30 per mensem.

(ii) *Other districts* : Scale of pay : Rs. 18—1—25 per mensem; dearness allowance Rs. 30 per mensem.

(d) In the erstwhile Travancore-Cochin State Process-servers were appointed by promotion from the seniormost peons of the State. After integration, appointment as Process-servers has been stayed in accordance with the ban imposed by the High Court.

(e) No minimum qualification is prescribed but the person must be literate.

(f) Yes, Sir.

(g) Rs. 15 per mensem provided they are employed on Process execution work for not less than 20 days, appropriate deductions being made for short touring.

SRI T. T. DANIEL : Sir, may I know from the Government whether they will promote such of those as have passed the school final examination at least as process servers?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The whole question of integration of these services is under examination.

SRI S. LAZAR : இதர ஜில்லாக்களின் ப்ராஸஸ் சர்வர்களுக்கு மாதச் சம்பளம் ரூ. 18 என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களுடைய சம்பளத்தை உயர்த்தவேண்டுமென்ற கோரிக்கை சர்க்காருக்கு வந்திருக்கிறதா? அதை சர்க்கார் எந்த அளவுக்கு அமுல் நடத்தியிருக்கிறது? அப்படியில்லையென்றாலும்கூட, இதற்கென்று கட்சிக்காரர்களிடமிருந்து வசூலிக்கக்கூடிய பாட்டா பணத்தையாவது ப்ராஸஸ் சர்வர்களுக்குக் கொடுக்கும்படியாக சர்க்கார் உத்தரவு பிறப்பிப்பார்களா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வியிலிருந்து உபகேள்வி எழவில்லை. தனியாக கேள்வி போட்டால், பார்த்து பதில் சொல்லலாம்.

17th September 1958]

Drinking Water

* 243 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லா, நன்னிலம் தாலுக்கா—நன்னிலம் மேஜர் பஞ்சாயத்து போர்டுக்கு உட்பட்ட மூலமங்கலம் ஆதி திராவிடத் தெருவில் மேற்படி பஞ்சாயத்து போர்டாரால் கட்டப்பட்டுள்ள குடி தண்ணீர் கிணற்றை பழுது பார்க்க வேண்டுமென எப்போது மேற்படி பஞ்சாயத்து போர்டாரால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ?

(ஆ) அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு ?

(இ) மேற்படி வேலே தாமதிக்க காரணமென்ன ?

(ஈ) இதன்மீது தணிக்கை அதிகாரிகள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டார்கள் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) The Nannilam Panchayat has not passed any resolution in the matter.

(*b*), (*c*) & (*d*) Do not arise.

SRI M. C. MUTHUKUMARASWAMY : மூலமங்கலம் ஆதி திராவிட தெருவில் கட்டப்பட்டிருக்கும் கிணற்றை நானே நேரில் போய்ப் பார்த்தேன். அதில் தண்ணீர் இல்லாமலும், ரிப்பேர் செய்யப்படாமலும் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது. அங்கு அதிகமாக குடிஜனங்கள் வசிப்பதால், இனியாவது நடவடிக்கை எடுத்து, கிணற்றை ரிப்பேர் செய்வதற்கு உத்தரவு பிறப்பிப்பார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எனக்கு வந்த தகவல்களிலிருந்து அங்கிருக்கும் கிணறு நல்ல மாதிரிதான், உபயோகிக்கக்கூடிய நிலைமையில்தான் இருக்கிறதாகத் தெரிகிறது.

Madras Farmers' tour

* 244 *Q.*—SRI N. K. PALANISAMI (on behalf of Sri V. K. Kothandaraman) : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) 1958 ஜூன் மாதத்தில் நமது ராஜ்யத்திலிருந்து அகில இந்திய விவசாய பிரதிநிதிகள் சுற்றுப் பிரயாணம் போனார்களா ?

(ஆ) எவ்வளவு பேர் ?

(இ) இதில் ஹரிஜனங்கள், ஹரிஜனரல்லாதவர்கள் எவ்வளவு பேர் ?

(ஈ) சுற்றுப்பிரயாணம் போகக்கூடியவர்களுக்குச் செலவாகும் பணம் சர்க்காரைச் சேர்ந்ததா அல்லது போகக்கூடியவர்களுடையதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) 323.

(*c*) Particulars are not available.

(*d*) The expenditure is borne by the tourists.

Madras Central Jail

* 245 *Q.*—SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there were transfers of some officers of Madras Central Jail to other Jails during the months of April and May of 1958; and

(*b*) if so, how many of such officers and to what places?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, Sir.

(*b*) One Jailor was transferred from Central Jail, Madras, to Central Jail, Cuddalore.

SRI A. A. RASHEED : Sir, is there any proposal to shift the Madras Central Jail to the outskirts of the City?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal at present.

Cart tyres

* 246 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of Sri **T. Veluchami**) : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

விவசாயிகளுக்கு வண்டிப்பட்டைகளும் கொழுக்கலப்பை இரும்புகளும் கோவாப்ரேடிவ் ஸ்தாபனங்கள் மூலமாக சப்ளை செய்ய ஏதேனும் உத்தேசமுண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : No Sir ; there is no such proposal at present.

Bulls

* 247 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the Scheduled Caste people following the Christian religion are benefited and given free grants for the purchase of bulls; and

(*b*) if not, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No free grant is given by the Animal Husbandry Department towards the purchase of bulls either to the people of the Scheduled Castes following the Christian religion or to any other caste following any other religion.

(*b*) The question does not arise.

SRI S. LAZAR : எந்த அடிப்படையிலே கடன் கொடுக்கப்படுகிறது ? பொருளாதாரத் துறையில் தாழ்ந்தவர்கள் என்ற காரணத்திற்காகக் கொடுக்கப்படுகிறது. அப்படியிருக்கும்போது, அதிலே மத வித்தியாசம் காண்பிக்கலாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கால்நடை இலாகா சார்பாக இம்மாதிரி ஒன்றும் நடைபெறுவது இல்லை என்று நான் சொன்னேன். ஆகையால் இந்த உப கேள்வி எழவில்லை.

SRI V. SANKARAN : கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களைப் பொறுத்தவரையில், அவர்களுக்கு ஹிந்து மதத்தில் இருக்கும் ஏற்றத் தாழ்வு இல்லை என்று சொல்லப்படுகிறது. அப்படியிருக்கும்போது, பழைய நிலையைக் குறிப்பிட்டு சொல்வது சரியா ? அப்படி யென்றால் அதை ஆஸ்பதமாகக்கொண்டு, அவர்களுக்குச் சலுகை கொடுக்கலாமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I may submit that this supplementary question does not arise at all. I have said that there are no such concessions given to any communities under the auspices of the Animal Husbandry Department.

17th September 1958]

Poramboke lands

* 248 *Q.*—Sri S. M. ANNAMALAI: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) how many acres of forest poramboke lands are available round about "Kuruthakunru" in Ganganavaram village of Polur taluk; and 11 a.m.

(*b*) whether there is any idea of granting these lands to the poor on 'patta'?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: (*a*) About 100 acres of forest poramboke land are available round about "Kuruthakunru" in Ganganavaram village of Polur taluk.

(*b*) There is no proposal to grant these lands to any one.

Sri S. M. ANNAMALAI: இந்தக் காட்டுப் புறம்போக்கு நிலங்களுக்கும், பக்கத்திலுள்ள காடுகளுக்கும் ஒரு மைல் தூரம் இருக்கும். ஆகையால் இது தனியாக இருக்கிறது. இப்படிப்பட்ட நிலத்தை சாதாரண ஜனங்களுக்குப் பட்டா செய்து கொடுக்க இந்தச் சர்க்கார் முன்வருமா?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: அம்மாதிரி மனுக்கள் வரும்போது கொடுக்கலாமா, கொடுக்கக்கூடாதா என்பதைப்பற்றி நன்கு யோசித்து முடிவு செய்யமுடியும்.

Sri T. T. DANIEL: Sir, may I know from the Hon. Minister whether the Government will, as a matter of policy, arrange to register such of the forest poramboke lands as are not put to use and which are in the possession of landless poor people who have been squatting on the same by constructing small huts?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: If it is a question of policy about which the hon. Member seeks information, he may put a separate question.

Sri M. JAGANNATHAN: Sir, the Government are not using their forest poramboke lands in question. Nor are they giving these lands to the poor landless agricultural labourers. Why should the Government adopt the dog-in-the-manger policy in this respect?

The Hon. Sri M. BHAKTAVATSALAM: I may tell the hon. Member that there is no dog-in-the-manger attitude on our part. If any area is useful for purposes of afforestation, Government take it up for purposes of afforestation. If it is not put to such use, it is available for landless poor people.

Mr. SPEAKER: The next three questions, viz., Question Nos. 249, 250 and 251 will be taken up together.

Drinking Water Scarcity

* 249 *Q.*—Sri M. KALYANASUNDARAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received any proposal from Tiruchirappalli Municipality this year for relieving the scarcity in the supply of drinking water to Tiruchirappalli town;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The proposals were mainly :—

(i) improvements to the existing infiltration wells, syphen pipes, plants, etc., and

(ii) provision of sedimentation tanks and mechanical filters.

(*c*) The Government have sanctioned the investigation of the improvements scheme for the Headworks of the Municipal water-supply system.

* 250 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a copy of the resolution passed by the Tiruchirappalli District Planning Board at its meeting held on 25th April 1958 making suggestions for improvement of water-supply to the City of Tiruchirappalli; and

(*b*) what action was taken by the Government?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

* 251 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware of water scarcity in the Municipal town of Tiruchirappalli;

(*b*) whether the Municipality (Tiruchirappalli) has submitted any scheme for sanction by the Government;

(*c*) if so, whether the scheme has been sanctioned;

(*d*) the assistance if any that has been sought before the Government;

(*e*) whether the assistance has been given;

(*f*) if not, the reasons therefor; and

(*g*) when the public of Tiruchirappalli will be getting adequate supply of water?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) The Municipal Council requested sanction for the investigation of a scheme of improvements to the Headworks of Municipal water-supply system.

(*c*) The investigation has been sanctioned.

17th September 1958]

(*d*) The Municipal Council has agreed to meet the cost from its own funds.

(*e*) & (*f*) Do not arise.

(*g*) It is now too soon to say when the water-supply for the Municipality can be improved.

Sri S. LAZAR : இந்தத் தண்ணீர் நெருக்கடி திருச்சி நகரத்தில் சென்ற ஒரு ஆண்டு காலமாக இருந்து வருகிறதென்பது தெரியுமா ? அப்படியிருந்தும் அரசாங்கத்தார் நடவடிக்கை எடுக்காததற்குக் காரணம் என்ன ? சட்டசபை அங்கத்தினர் அனைவரும் சேர்ந்து அரசாங்கத்திற்கு இதுபற்றி மனு கொடுத்திருக்கிறார்கள் அல்லவா ? அதன்பேரில் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுத்திருக்கிறது ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அம்மாதிரி தண்ணீர் கஷ்டம் இருக்கிறதென்று தான் இப்போது இன்வஸ்டிகேஷனுக்கு பத்தாயிரம் ரூபாய் செலவு சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. அங்கே திட்டம் பூராவும் விஸ்தரிக்கப்படவேண்டுமென்றால் 45 லட்சம் ரூபாய் வேண்டியிருக்கிறது. அவ்வளவு ரூபாய் செலவழிக்கக்கூடிய நிலையில் திருச்சியில் உள்ள முனிசிபல் கவுன்சில் இல்லை. ஆகையால் இப்போது 29 லட்சம் ரூபாயில் முதல் அடியாக ஒரு திட்டம் எடுத்துக்கொள்ள உத்தேசம். அதற்காகத்தான் பத்தாயிரம் ரூபாய் செலவில் இன்வஸ்டிகேஷனுக்கு உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

Sri M. KALYANASUNDARAM : இருபத்தொன்பதாயிரம் ரூபாய் செலவாகக்கூடிய திட்டத்திற்கு சர்க்கார் கடன உதவி செய்வார்களா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அம்மாதிரி கடன் உதவி இல்லாமல் முனிசிபல் கவுன்ஸிலே அச்செலவை ஏற்றுக்கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

Srimathi T. N. ANANDANAYAKI : மத்திய அரசாங்கம் அர்பன் வாடர் சப்ளை என்பதற்காகக் கொடுக்கக்கூடிய பணத்திலிருந்தாவது திருச்சி நகரத்திற்கு உதவி செய்ய முடியுமா என்று கேட்கிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் வரவில்லை. அதனால் முடியாது என்று நினைக்கிறேன்.

Sri K. ANBAZHAGAN : குடி தண்ணீர் திட்டத்தை நிறைவேற்ற ஓர் ஆண்டோ, இரண்டாண்டோ ஆகலாம் என்ற எண்ணம் இருப்பதால் இடையில் மக்களது துயரைத் தீர்ப்பதற்கு தண்ணீர் குழாய்கள் பொருத்த அரசாங்கம் ஏதேனும் திட்டம் இடுமா ? அப்படித் திட்டமிடப்பட்டிருந்தால் உதவி செய்யுமா ?

The Hon. Sri M. A. MANICKAVELU : அம்மாதிரி ஒரு சிறிய திட்டத்தை அமுலுக்குக்கொண்டு வரலாமென்று யோசனை செய்யப்பட்டது இரண்டு லட்சத்தில். இன்னும் விஸ்தாரமாக ஆராய்ந்ததில் இரண்டு லட்சம் போதாது. ப்த்து லட்சம் ஆகும் என்றும் அது முடியுமா என்று யோசனை செய்யப்பட்டு விடப்பட்டது.

Sri M. JAGANNATHAN : In view of the fact that the Tiruchirappalli town has been experiencing acute shortage of water for a period of one year or so, may I know whether any water-borne diseases have developed in that area and whether anybody died because of such diseases so far?

The Hon. Sri M. A. MANICKAVELU : Wherever there is water, we get water-borne diseases. (Laughter.)

[17th September 1958

Printing Press

MR. SPEAKER : The hon. Member Sri K. Ramachandran who has given notice of this question is not in his seat. So, this question and answer will be printed in the proceedings.

*252 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of printing presses run on co-operative basis;

(*b*) when they were started; and

(*c*) whether they are running on profit?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Eight.

(*b*) The dates on which they were started are :

1. Madras Central Co-operative Printing Press, Madras, 30th December 1919.

2. The Tanjore Co-operative Printing Press, Tanjore, 16th February 1927.

3. The Pudukkottai Co-operative Press, Pudukkottai, 13th March 1933.

4. Coimbatore Co-operative Printing Works, Coimbatore, 16th November 1933.

5. Salem Co-operative Printing Works, Limited, Salem, 29th May 1947.

6. Madurai Co-operative Printing Works, Madurai, 22nd December 1951.

7. North Arcot District Co-operative Printing Press, Vellore, 20th August 1953.

8. Ex-Servicemen Printing and Publishing Press, Nagercoil, 24th July 1955.

(*c*) Of the eight printing presses, four worked at a profit during 1956–57 as follows :—

1. Vellore Press	... ...	Profit	Rs. 1,605
2. Coimbatore Press	... ...	Profit	Rs. 12,175
3. Pudukkottai Press	... ...	Profit	Rs. 2,678
4. Salem Press	... ...	Profit	Rs. 4,236

The remaining four sustained loss during 1956–57 as follows :—

1. Madras Press	... ...	Loss	Rs. 12,467
2. Tanjore Press	... ...	Loss	Rs. 6,773
3. Nagercoil Press	... ...	Loss	Rs. 3,257
4. Madurai Press	... ...	Loss	Rs. 8,232.

17th September 1958]

Industrial Estate

* 253 *Q*.—SRI A. VEDARATNAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) ஜில்லா தோறும் ஒரு கைத்தொழில் பண்ணையை நிறுவும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

(ஆ) அப்படியானால் இத்திட்டம் எப்போது பூர்த்தியாகும் ?

(இ) தனியாரை இப்பண்ணைகள் ஆரம்பிக்க அரசாங்கம் அனுமதிக்குமா ?

(ஈ) அப்படியானால் அவர்களுக்கு அரசாங்கம் என்ன உதவி அளிக்கும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. But this depends upon the financial resources of the State and the response from private industrialists.

(*c*) Yes, Sir.

(*d*) There is no provision for the grant of financial assistance to private industrialists for the establishment of industrial estates. Necessary assistance in the selection or acquisition of suitable sites, in the preparation of plans and estimates and in getting power supply will be given by the Government.

SRI A. VEDARATHNAM : தஞ்சாவூர் ஜில்லாவில் இம்மாதிரி ஒரு கைத்தொழில் பண்ணை ஆரம்பிக்கும் உத்தேசம் இருந்ததே. அது என்ன நிலையில் இப்போது இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்த உத்தேசம் இன்னும் இருந்துகொண்டுதான் வருகிறது.

SRI A. GOVINDASAMY : தென்னார்காடு மாவட்டத்தில் நெல்லிக்குப்பம் பகுதியில் ஒரு கைத்தொழில் பண்ணை ஆரம்பிக்கப்போவதாகச் சொன்னார்கள். அது எந்த நிலையில் இருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : அந்தமாதிரி நான் சொன்னதாக ஞாபகம் இல்லை.

SRI K. S. G. HAJA SHERIFF : Sir, may I know the total cost as on date, the revenue per annum and the recurring expenditure per annum ?

THE HON. SRI R. VENKATARAMAN : All these Industrial Estates have not yet come to full working condition. So, if the hon. Member wants to know the financial results of any particular estate, I shall give the same if he puts a fresh question.

Harijan Welfare Committee

* 254 *Q*.—SRI M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the recommendations made by the State Harijan Welfare Committee at its meeting held recently; and

(*b*) whether the Government have accepted any of them?

THE HON. SRI P. KAKKAN : (*a*) A statement[a] is placed on the table of the House.

(*b*) The recommendations of the Committee are being examined by the Government in the Departments concerned.

---

[a] Printed as Appendix III on page 99 infra.

SRI M. JAGANNATHAN : May I know how long it will take for the Government to examine the recommendations of the Committee?

THE HON. SRI P. KAKKAN : எவ்வளவு நாள் வேண்டுமோ அவ்வளவு நாள் எடுத்துக் கொள்ளப்படும்.

Pumpsets

* 255 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of applications received by the Government, talukwise, in 1957–58, for the installation of pumpsets for the wells used for agricultural purposes in the Coimbatore district; and

(*b*) the number of pumpsets installed, talukwise?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) The attention of the hon. Member is invited to the statement[a] placed on the table of the House.

SRI P. G. MANICKAM : நானூற்றுநான்கு விண்ணப்பங்கள் அனுப்பப் பட்டதில் 88 பேர்களுக்கு மாத்திரம் பம்புசெட்டு வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. மற்றவர்களுக்கு ஏன் வழங்கப்படவில்லை என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கேட்டவர்களுக்கு எல்லாம் வழங்குவதற்கு முன்பு அவர்களுடைய நிதி நிலைமையைக் கவனிக்க வேண்டும். இரண்டாவது, இருப்பதைப் பகிர்ந்துதான் கொடுக்கவேண்டும்.

Misappropriation of Funds

* 256 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா —

(அ) மதுரை ஜில்லா பெரியகுளம் தாலுக்கா அன்னஞ்சி என்ற ஊஞ்சாம்பட்டி கூட்டுறவு சங்கத்திலும் கூட்டுறவு ஸ்டோரிலும் எவ்வளவு கையாடல் செய்யப்பட்டது ?

(ஆ) இன்னும் எவ்வளவு பாக்கி வசூலாகாமல் இருக்கிறது ?

(இ) இந்த சங்கங்களின் தற்போதய நிலையென்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There was misappropriation to the tune of Rs. 14,945·68 in the Oonjampatti Co-operative Society and Rs. 3,410·82 in the Oonjampatti Co-operative Stores.

(*b*) The entire amounts involved in the misappropriation have yet to be recovered.

(*c*) Both the societies are under liquidation. The total assets of the Oonjampatti Co-operative Society is Rs. 21,528·31 as against its total liabilities amounting to Rs. 20,854.50. The total assets of the Oonjampatti Co-operative Stores is Rs. 8,150·69 as against its liabilities amounting to Rs. 8,771·25. The liquidators are taking steps to realize the assets and pay off the liabilities.

---

[a] Printed as Appendix IV on page 100 infra.

17th September 1958]

Sri N. R. THIAGARAJAN: இந்த மோசடிக்காரர்கள் தாங்கள் தப்பிக்கொண்டுவிட்டதாகவும், கூட்டுறவு இலாகாவில் உள்ளவர்களைக் காக்காய் பிடித்து தங்களிடமிருந்து அந்தப் பணத்தை வசூல் செய்ய முடியாதபடி செய்துகொண்டு விட்டதாகவும் கூறிக்கொண்டிருக்கிறார்களே. அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து பாக்கித் தொகையை வசூல் செய்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN: பணமும் வசூலிக்கப்படும், அதற்கு மேற்கொண்டு சட்டப்படி நடவடிக்கையும் எடுக்கப்படும்.

Sri A. V. P. ASAITHAMBI: கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை; ' காக்காய் பிடித்தார்கள்', என்ற வார்த்தைகளை இந்த சபையில் உபயோகிக்கலாமா ? 11-50 a.m.

Mr. SPEAKER: There is nothing wrong, though it is not very desirable.

Sri M. JAGANNATHAN: May I know whether the Government have since fixed the responsibility for the misappropriation of these huge amounts?

The Hon. Sri R. VENKATARAMAN: The matter is being investigated.

Export of Chillies of Ceylon

*257 *Q.*—**Sri N. R. THIAGARAJAN:** கனம் தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) மதுரை ஜில்லாவில் மொத்த விற்பனை பண்டகசாலையாயிருந்து தற்போது சப்ளை அண்ட் மார்க்கெட்டிங் சொஸைட்டியாகவுள்ள ஸ்தாபனத்திற்கு மாதம் எவ்வளவு நஷ்டம் வருகிறது ?

(ஆ) நஷ்டம் வரக் காரணம் என்ன ?

(இ) இந்த ஸ்தாபனம் தேனி சேல்ஸ் சொஸைட்டிக்கு சிலோனுக்கு அனுப்பிய மிளகாய் வத்தலுக்காக ரூ. 2 லட்சம் தர மறுப்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN: (*a*) The audit of the accounts of the institution for the period from 1st January to 31st December 1957 is in progress. Profit or loss will be known only after completion of the audit.

(*b*) Does not arise.

(*c*) No, Sir; but the Government understand that there is some delay in the settlement of accounts.

Sri N. R. THIAGARAJAN: லட்சக்கணக்கில் லாபம் சம்பாதித்து வந்த இந்த ஸ்தாபனம் இப்போது பல லட்சக்கணக்கில் நஷ்டமடைந்திருக்கிறது என்று பொதுமக்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். எனவே அந்த ஸ்தாபனத்தை மூடுவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri R. VENKATARAMAN: அந்த ஸ்தாபனம் மிகவும் நஷ்டமடைந்துவிட்டதாக பொதுஜனங்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்று கனம் அங்கத்தினர் கூறினார். அத்தகைய அபிப்பிராயம் நிலவ வேண்டாம் என்பதற்காக நான் சில விவரங்களைக் கொடுக்கிறேன். நாம் இலங்கைக்கு வற்றல் ஏற்றுமதி செய்தோம். இலங்கைக்காரர்கள் நம் வற்றல் தரக் குறைவாக இருக்கிறது என்று சொல்லி அதன் விலையில் 12 சத விகிதம் குறைத்து விட்டார்கள். 12 சதவிகிதம் குறைக்க வேண்டாம் என்றும் 10 சதவிகிதம் குறைக்கலாம் என்றும் அங்கேயுள்ள நமது ஹை கமிஷனர் மூலம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அவ்வாறு கணக்குத் தீர்ப்பதற்கு

ஏற்பாடு செய்திருக்கிறோம். இவ்வாறு கணக்குத் தீர்ப்பதை மத்திய ஸ்டோர்ஸ்-ம் கூட்டுறவு மத்திய ஸொஸைடியும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அதற்கு அவைகள் இன்னும் கூட்டங்கள் கூடி முடிவு செய்யவில்லை. விஷயம் இவ்வளவுதான். எனவே, அந்த ஸ்தாபனத்திற்கு ஏராளமாக நஷ்டம் வந்து விட்டதாகக் கருதக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

*2-8 *Q.*—SRI A. V. P. ASAITHAMBI (on behalf of Sri P. U. Shanmugam) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு கிடங்கினின்று இலங்கைக்கு மிளகாய் ஏற்றுமதி சம்மந்தமாக சர்க்காருக்கு புகார் வந்ததுண்டா ?

(ஆ) சர்க்கார் அதன் பேரில் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir.

(*b*) The matter is under investigation.

SRI S. M. ANNAMALAI : மிளகாயின் விலை நாளுக்குநாள் ஏறிக்கொண்டே போவதால், வேறு நாடுகளுக்கு மிளகாய் ஏற்றுமதி யாவதைத் தடைசெய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இப்போது, வெளிநாடுகளுக்கு நாம் எவ்வளவுக் கெவ்வளவு சாமான்களை ஏற்றுமதி செய்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு நமது நாட்டுத் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கான வசதிகள் நமக்கு அதிகம் ஏற்படும். அவ்வாறு நாம் நினைக்கும்போது, மிளகாய் ஏற்றுமதியை—அதுவும், அது நன்ருக விர்டனையாக விவசாயிக்கு நல்ல பணம் கிடைக்கக்கூடிய நிலைமை இருக்கும்போது—தடுப்பதற்கு கனம் அங்கத்தினர் யோசனை கூறுவது அவ்வளவு பொருத்தமாகத் தென்படவில்லை.

SRI T. T. DANIEL : May I know from the Hon. the Minister the nature of the complaint ?

THE HON. SRI R. VENKATARAMAN : Here there is no complaint. But in the other case, there was a complaint about the quantity. கோயம்புத்தூர் சங்கத்தில், அவர்கள் ப்ரைமரி ஸொஸைடியிலிருந்து வாங்கவில்லை என்ற புகார் இருக்கிறதே தவிர, தரத்தை (க்வாலிடியை) பற்றிய புகார் இல்லை.

Agricultural Colleges

*259 *Q.*—SRI P. G. MANICKAM : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the places in which Agricultural Colleges are located in Madras State;

(*b*) how many candidates studied in these institutions during the years 1957 and 1958; and

(*c*) how many of them were Harijans?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) There is only one Agricultural College in the State at present and it is located at Coimbatore.

(*b*) The total number of students who studied in 1957 and 1958 in all the three B.Sc. (Ag.) degree classes was 364 and 393, respectively.

17th September 1958]

(c) The total number of Harijan students who studied in 1957 and 1958 in all the three B.Sc. (Ag.) degree classes was 7 and 8, respectively.

Sri P. G. MANICKAM : இப்போது குறிப்பிடப்பட்ட வருஷங்களில் இப்பயிற்சிக்காக எத்தனை ஹரிஜன மாணவர்கள் விண்ணப்பித்துக் கொண்டார்கள் ? அவர்களில் எத்தனை பேர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுபற்றிய விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

Sri K. VINAYAKAM : Since there is an unprecedented rush of students to such technical institutions, will the Government consider the possibility of having one or two more colleges? If that cannot be done immediately, will they at least increase the number of seats in the existing College at Coimbatore?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : The strength of the College has been increased to 162. The Annamalai University has also started an agricultural course quite recently.

Sri T. R. RAMAMIRTHA THONDAMAN : ஆடுதுறையில் ஒரு விவசாயப் பண்ணை நன்றாக நடந்துவருகிறது. மேலும், அங்கே கிராம சேவக்குகளுக்கு விவசாயப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க போதுமான வசதி இருப்பதால், அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வற்புறுத்தப்பட்டதா ? அங்கே ஒரு விவசாயக் கல்லூரியை நிறுவ சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் கல்லூரி அங்கே எப்போது நிறுவப்படும் ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அம்மாதிரி யோசனை கூறப்பட்டது. ஆனால், சிதம்பரத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இப்போது ஒரு விவசாயக் கல்லூரி துவக்கப்பட்டிருப்பதால் அந்த யோசனையை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதற்கில்லை.

Sri N. MARUDACHALAM : விவசாயக் கல்லூரியில் பயின்று வரும் மாணவர்கள், உரிய காலங்களில் தங்களுக்கு ஸ்காலர்ஷிப் பணம் கிடைக்கவில்லை என்று சர்க்காருக்கு புகார் செய்திருக்கிறார்களா ? சர்க்காருக்கு அவ்வாறு கடிதம் அனுப்பித்திருக்கிறார்களா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அதுபற்றி என்னிடம் தகவல் இல்லை.

Srimathi T. N. ANANDANAYAKI : இந்த ராஜ்யத்திலுள்ள விவசாயக் கல்லூரியில் இப்போது எத்தனை பெண்கள் படிக்கிறார்கள் ? பெண்கள் அக்கல்லூரிக்கு விண்ணப்பம் போட்டு சேர்க்கப்படவில்லையா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : அக்கல்லூரிக்கு தகுதியுடைய பெண்கள் விண்ணப்பம் போட்டிருந்தால் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பார்கள். பெண்கள் அக்கல்லூரியில் சேருவதற்குத் தடை இல்லை. அந்தக் கல்லூரியில் இப்போது சில பெண்கள் படிக்கிறார்கள். ஆனால் எத்தனை பெண்கள் படிக்கிறார்கள் என்ற விவரம் என்னிடம் இப்போது இல்லை.

Trade Disputes

*260 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) the number of trade disputes reported to Government for adjudication in 1957–58; and

(*b*) how many of them—

(i) were settled; and

(ii) are still pending?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) During the period from 1st April 1957 to 31st March 1958—

Number of disputes taken up for conciliation ...	1,013
Number of disputes settled by conciliation	632
Number of disputes referred for adjudication ...	272
Number of disputes where reference was refused.	82
Number of disputes pending consideration with Government	27

This is for the period from 1st April 1957 to 31st March 1958.

* 261 *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of labour disputes settled by conciliation in 1957; and

(*b*) the number of disputes pending settlement before the industrial tribunals?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 1,757.

(*b*) Eighty-eight disputes were pending before the Industrial Tribunal, Madras, and Labour Courts at Madras, Madurai and Coimbatore at the end of 1957.

SRI M. KALYANASUNDARAM : *மொத்தத் தகராறுகளில் எத்தனை தகராறுகளில், பழிவாங்கும் நோக்கத்துடன் தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர் என்ற புள்ளிவிவரம் சர்க்காரிடம் இருக்கிறதா ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *மூலக் கேள்வியில், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ் எத்தனை என்று கேட்கப்பட்டிருந்தது.* 1957-*ல்* " *இண்டிவிஜுவல் க்ரீவன்ஸ், இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ்* " *முதலிய எல்லாம் சேர்ந்து மொத்தம்* 8,592 " *க்ரிவன்ஸெஸ்* ". *அவைகளில்* 6,524 " *இண்டிவிஜுவல் கம்ப்ளெய்ண்ட்ஸ்* "; 1,757 *தான்* " *இண்டஸ்ட்ரியல் டிஸ்ப்யூட்ஸ்.* "

SRI S. LAZAR : What is the average time taken by the Government for the disposal of cases—from the time the matter is taken up by the Government for conciliation until it is disposed of by the Tribunal? Is there any proposal before the Government for reducing the time-limit?

THE HON. SRI R. VENKATARAMAN : In cases of individual disputes, it is three months. In cases of industrial disputes without complications, it is four to five months. But where there are rival unions and complications, it depends on the nature of the dispute.

SRI J. MATHA GOWDER : *முதலாளிகளும் சர்க்காரும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து முக்கூட்டுக் கூட்டம் நடத்தி சமரசத்தை ஏற்படுத்திய பிறகு, சர்க்கார் செய்த சிபாரிசை முதலாளிகள் சங்கம் அமுல் நடத்தாவிட்டால், சர்க்கார் என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள் ?*

17th September 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : சர்க்கார் "சிபாரிசு" தான் செய்கிறது. சிபாரிசை முதலாளிகள் ஒப்புக்கொள்ளாவிட்டால், "முதலாளிகள் சிபாரிசை ஒப்புக்கொள்ளவில்லை" என்று தான் சர்க்கார் சொல்ல முடியும் ; சர்க்கார் வேறு ஒன்றும் சொல்லமுடியாது.

SRI P. S. CHINNADURAI : தொழிலாளர்களுக்குச் சாதகமாக தொழில் கோர்ட்டுகள் வழங்கியுள்ள தீர்ப்பை எதிர்த்து எத்தனை வழக்குகளில் முதலாளிகள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள் ? சுப்ரீம் கோர்ட்டில் வாதாடுவதற்குரிய வசதியில்லாத நிலையில் தவிக்கும் தொழிற் சங்கங்களுக்காக வக்கீல் வைத்து வாதாடி தொழிலாளர்களுக்கு உதவ சர்க்கார் முன்வருவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : எத்தனை வழக்குகளில் சர்க்கார் வக்கீல் வைத்து வாதாடினார்கள் என்பதற்கு தனிக் கேள்வி கேட்டால் நான் அதற்கு விவரங்களுடன் பதில் சொல்கிறேன். எந்த எந்தத் தகராறுகளில் சர்க்கார் செய்த "ரெபெரென்ஸ்" தவறு என்று வாதாடப் படுகிறதோ, அந்த வழக்குகளிளெல்லாம், தாங்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கையை நிலைநாட்டுவதற்காக சர்க்கார் வக்கீல் வைக்கிறார்கள். மற்ற இடங்களில் சர்க்கார் வக்கீல் வைப்பதில்லை.

SRI K. B. S. MANI : தொழிற் சங்கத் தகராறுகளைப்பற்றிய ஆயிரக்கணக்கான வழக்குகள் கோர்ட்டில் நடந்திருப்பதாக கனம் மந்திரி தெரிவித்தார். தொழிலாளர்கள் நன்றாக வாழ வேண்டுமென்று கருதி அரசாங்கம் ஒரு சட்டத்தை இயற்றியிருக்கிறது. தொழில் தகராறுகள் சம்பந்தமாக, முதலாளிகளும் தொழிற் சங்கங்களும் சர்க்காரும் சேர்ந்த முக்கூட்டு மகாநாடுகள் கூடி நல்ல முடிவுகள் கண்டிருக்கின்றன. அப்படியிருக்கும்போது, ஆயிரக்கணக்கான தொழிற் தகராறு வழக்குகள் கோர்ட்டில் இருக்கின்றன என்றால், சட்டத்தை மதிக்காமல் நடந்து கொண்டிருப்பவர்கள் யார் ? சட்டத்தை மதிக்காமல் நடப்பவர்கள் பேரில் கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு வகைசெய்யும் முறையில் சட்டத்தைத் திருத்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் சொல்வது சரியல்ல. மொத்தம் நான்கு கோர்ட்டுகள் இருக்கின்றன. நான்கு கோர்ட்களிலுமாக மொத்தம் 88 வழக்குகள் தான் இப்போது "பெண்டிங்" காக இருக்கின்றன. மேலும் நான் முன்பு சொன்னபடி, 1,800 தகராறுகளில் நான் முன்பு குறிப்பிட்ட ஒரு வருட காலத்தில் 272 தான் கோர்ட்டுக்கு விடப்பட்டிருக்கின்றன. 272 வழக்குகளை ஆயிரக்கணக்கான வழக்குகள் என்று சொல்வது சரியாகாது என்று நினைக்கிறேன்.

MR. SPEAKER : There are five more questions. I will allow five more minutes and finish them. I think the House has no objection.

SRI K. SATTANATHA KARAYALAR : பஞ்சாலைத் துறையில் எத்தனை எத்தனை வழக்குகள் என்பதைப்பற்றி தனியான புள்ளிவிவரங்கள் உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : தனி கேள்வி வேண்டும்.

SRI M. JAGANNATHAN : Arising out of the answer of the Hon. Minister, it is seen that there are 21 cases pending before the Government for their consideration. May I know how long will the Government take to finally dispose of those cases?

THE HON. SRI R. VENKATARAMAN : They should have been disposed of long ago. On the given date, that is on the 31st March 1958, these cases were pending before the Government.

[17th September 1958

SRI M. KALYANASUNDARAM : தனிப்பட்ட தொழிலாளர்கள் பழி வாங்கப்படுவதின் எண்ணிக்கை அதிகமாக இருக்கிறபடியால் பழி வாங்கப்படும் வழக்குகள் நேரடியாகவே தொழிலாளர் கோர்ட்டுக்கு போகக் கூடிய வழியில் சட்டத்தைத் திருத்த சர்க்காருக்கு ஆலோசனை உண்டா ?

THE HON. SRI R. VENKATARAMAN : ஷாப் சட்டத்திலும், ஹோட்டல் சட்டத்திலும், நேற்று முன் தினம் விவாதித்த பீடித் தொழிலாளர் சட்டத்திலும் அந்தவிதமான உரிமை கொடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்ற உரிமை எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுத்து விட்டால் தொழில் தகராறுகள் கோர்ட்டுக்கு போவது குறைந்து விடும் என்று சர்க்கார் கருதுகிறது. அதுபற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

SRI C. NATARAJA ODAYAR : தொழில் தகராறு சம்பந்தமாக உதாரணமாக பஸ் கண்ட்ராக்டர் மாதிரியுள்ளவர்கள் இன்ஸ்பெக்டர் அவர்களிடம் கேஸ் கொடுத்தால் முடிவு தெரிய இரண்டு வருஷங்கள் ஆகிறது. காரணம், தொழில் அதிகாரிகள் முதலாளிகளுக்கு சம்மன்ஸ் அனுப்பினால் இரண்டு வருடங்கள் கழிந்தும்கூட அவர்கள் ஆஜராவதில்லை. அவர்கள் பேரில் நடவடிக்கைகள் எடுக்கும் அதிகாரம் அதிகாரிகளுக்கு இல்லையென்றும் சொல்லப்படுகிறது. ஆகவே இதைப்பற்றி ஆலோசித்து சர்க்கார் ஒருமுடிவிற்கு வருமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் அங்கத்தினர் அவர்கள் சொல்வது, ஒரு வருடத்திற்கு முன் உள்ள நிலையாக இருக்கலாம். இப்பொழுது முதலாளிகளுக்கு சம்மன்ஸ் அளித்து, அவர்கள் வராவிட்டால் உடன்டியாக லேபர் ஆபீசர்கள் அவர்களுடைய சிபார்சை சர்க்காருக்கு எழுதியனுப்பும்படி உத்திரவு போட்டிருக்கிறோம்.

Srivaikuntam Anicut

* 262 *Q.*—SRI M. K. SOMASUNDARAM (on behalf of Sri M. S. Selvarajan) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the quantity of water that flowed down the Srivaikuntam Anicut in the Tirunelveli district as waste water, for the last ten years, yearwar;

(*b*) the quantity of water that flowed down this year from the anicut, as waste, before the completion of the Manimuthur Project and after it; and

(*c*) whether any proposal for utilising this water for irrigation by constructing a bed dam near Kurangani or anywhere below in Tiruchendur taluk or diverting the water to flow into the Kudiraimozhitheri has been considered and worked upon?

THE HON. SRI P. KAKKAN : (*a*) *to* (*c*) The attention of the Member is invited to the paper[a] laid on the table of the House.

Wells

* 263 *Q.*—SRIMATHI T. N. ANANDANAYAKI : Will the Hon. the Minister for Home be pleased to state when the subsidy or loan given by the Government for digging wells for irrigational purposes by the Agriculturists was stopped and the reasons for the same?

---

[a] Printed as Appendix V on pages 100–101 infra.

17th September 1958]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Subsidy loans under the Well Subsidy Scheme were granted till the end of 1951–52 when the scheme was discontinued by the Government on the following considerations :—

(*a*) The Special Officer for Wells reported that though the well schemes might be deemed altogether to have been justified by the extreme urgency of a persistent drought for nearly 4 years, it was time to stop the scheme and consolidate the work already done as the water table had already gone down;

(*b*) The Government of India indicated that according to their revised policy, the State Governments were expected to allow a subsidy of 33–1/3 per cent of cost of well as against 50 per cent allowed till then; and

(*c*) Ryots who are keen on sinking wells can obtain Takkavi loans.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, Sir, is the Government aware of the fact that wells are the most effective and popular source of irrigation for the agriculturists in all States? If so, will the Government at least think of giving a subsidy of 50 per cent as usual again to the agriculturists? 12 noon.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, Government are quite well aware of the benefits of the scheme and they are now examining whether they should revive the scheme. But I may say they will not be able to give a subsidy of 50 per cent. It is now proposed that the subsidy should be limited to 25 per cent of the cost of the scheme instead of 50 per cent.

Slums

* 264 *Q*.—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சென்னை நகர ஸ்லம் கிளியரன்ஸ் அண்ட் டவன் பிளானிங் ஆக்டை முனிசிபல் நகரங்களிலும் மேஜர் பஞ்சாயத்து போர்டுகளிலும் அமுலுக்குக் கொண்டு வருவதற்கான திட்டம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திலே சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

(ஆ) சேர்க்கப்பட்டிருப்பின் எந்தெந்த நகரங்களிலே எந்த ஆண்டிலிருந்து இத் திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No Sir.

(*b*) Does not arise.

SRI P G. MANICKAM : மேற்கண்ட ஸ்லம் கிளியரன்ஸ் டவுன் பிளானிங் ஆக்ட் இரண்டும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் மற்ற இடங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமென்று இந்திய சர்க்காரால் வெளியிடப்பட்டிருக்கும் இரண்டாவது ஐந்தாண்டுப் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்குள் கொண்டுவா நமது சர்க்கார் எதாவது பரிசீலனை செய்யுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : சட்டத்தை விஸ்தரிப்பதற்கு கஷ்டமில்லை. ஆனல் இப்பொழுது நமக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியானது, சென்னை நகரத்தில் மட்டும்தான் ஸ்லம் க்ளியரன்ஸ்க்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதனல்தான் சட்டத்தை மட்டும் விஸ்தரிட்டதைப்பற்றி இப்பொழுது அதிகமான ஊக்கம் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

[17th September 1958

Advisory Committees for Industries

*265 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) எந்தெந்த தொழில்களைப் பற்றி பரிசீலனை செய்யவும், ஆலோசனை தெரிவிக்கவும், மேற்பார்வையிடவும், ஆலோசனைக் கமிட்டிகள் நிறுவப்பட்டிருக்கின்றன ?

(ஆ) இக்கமிட்டிகளிலே யார் யார் அங்கம் வகிக்கிறார்கள் ?

(இ) இக் கமிட்டிகளின் பரிசீலனைகளையும் ஆலோசனைகளையும் தெரியப் படுத்தும் ரிப்போர்டு ஒன்று அசெம்பிளி முன் சமர்ப்பிக்கப்படுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The Government have set up the State Industries Development Committee to undertake a detailed examination of the economic resources of the State and the collection of other data required for the preparation of project reports on different industries that are possible in the State. The Committee will generally advise the Government on the development of industries in the State and on specific matters that may be referred to it. It has appointed eight sub-committees, each to deal with the following groups of industries, viz. :—

1. Engineering Industries.
2. Electrical goods Industries.
3. Forest Industries.
4. Medium and small-scale Industries.
5. Leather Industries.
6. Ceramics and refractories Industries
7. Chemical Industries, and
8. Agro-Industries.

(*b*) A list[a] showing the names of the members of the State Industries Development Committee and the Sub-Committee constituted by it is placed on the table of the House.

(*c*) The Committee has not yet submitted its report.

Coir

*266 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் கைத்தொழிலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இம் மாகாணத்தில் எந்தெந்த இடங்களிலே கயிறு திரிக்கும் தொழில் நடைபெறுகின்றது ?

(ஆ) ஒரு வருஷத்தில் சராசரி எவ்வளவு கயிறு உற்பத்தியாகிறது ? அதில் விநியோகம் எவ்வளவு ?

(இ) புஷ்பவனத்தில் இத் தொழிலில் எத்தனை பேருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : A statement[b] is placed on the table of the House.

The average annual production and sales of the Coir Co-operatives is estimated at Rs. 4·03 lakhs and Rs. 3·91 lakhs respectively. Precise information regarding the quantity of coir produced and sold by private persons is not available.

---

[a] Printed as Appendix VI on pages 101–104 infra.

[b] Printed as Appendix VII on pages 104–105 infra.

17th September 1958]

Twenty persons are being trained in the Training-*cum*-Production Centre for Coir Industry at Pushpavanam.

Sri N. R. THIAGARAJAN : இந்த சர்க்காருக்கு எதிராகவும், மத்திய சர்க்காருக்கு எதிராகவும் ஒரு முதிர்ந்த அரசியல் வாதி கயிறு திரிக்கும் தொழிலை மேற்கொண்டிருப்பதால் அவருக்கும் ஏதாவது உபகாரச் சம்பளம் கொடுக்கப்படுகிறதா ? அவரைப்போல் வெளியாரும் சர்க்காருக்கு எதிராக கயிறு திரித்தால் அவர்களுக்கும் உபகாரச் சம்பளம் கொடுக்கப் படுமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : கயிறு உற்பத்தி செய்வதற்கு சர்க்கார் உதவி கொடுக்கும். கயிறு திரிப்பதற்கு யாரும் உதவி கொடுக்க மாட்டார்கள்.

Sri A. VEDARATHNAM : இம்மாகாணத்தில் முன்பிருந்த கயிற்றுத் தொழிற்சாலை இப்பொழுது மலையாளத்திற்கு போய்விட்டபடியாலும், நம் மாகாணத்தில் கயிற்று தேவை அதிகமாக இருப்பதாலும் தஞ்சை கடற் கரை பிரதேசத்தில் நிரம்ப தென்னைமரங்கள் இருக்கிற காரணத்தினால் அங்கு ஒரு கயிற்று தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ? அப்படியானால், எப்பொழுது, எங்கே ?

The Hon. Sri R. VENKATARAMAN : தஞ்சை ஜில்லாவில் மாத் திரம் எட்டு தொழிற்சாலைகள் ஆரம்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முக்கியமாக, அதிராம்பட்டினம், மல்லிப்பட்டினம், முத்துப்பேட்டை போன்ற கடலோரப் பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படும்.

Trustpuram, Kodambakkam

* 267 *Q*.—Sri K. VINAYAKAM : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government propose to drop the third stage of constructing Low Income Group houses which are constructed by the City Improvement Trust at Trustpuram, Kodambakkam;

(*b*) if not, the reasons for the delay in executing the third stage of construction of houses; and

(*c*) the amount that is to be given by the Government to the City Improvement Trust for this purpose?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Fresh lands required for the purpose have not yet been acquired. Certain survey records called for by the Collector of Madras in this connection from the Settlement Department are awaited by him.

(*c*) A provision of rupees three lakhs has been made in the current year's Budget for acquisition and development of lands in this area. The question of providing funds for construction of houses will be considered on receipt of the proposals from the Chairman, City Improvement Trust, after the lands are taken possession of by the Trust.

Sri K. VINAYAKAM : Whereas the principal reason for the delay in the execution of these schemes is the delay caused in the acquisition proceedings taken in respect of the lands required for the purpose, will the Hon. Minister for Housing pass on this

information to the Hon. Minister for Revenue and request him to instruct the Collectorate to hasten the acquisition proceedings?

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, we generally try to expedite acquisition proceedings. But private interests are involved in this and it is not proper to rush these proceedings without taking the precaution of giving notices, hearing objections and so forth.

MR. SPEAKER : Questions are over.

II.—CALLING ATTENTION TO THE EVICTION OF HUT-DWELLERS IN SANGANOOR PALLAM IN COIMBATORE DISTRICT.

MR. SPEAKER : I have received notice of a motion under Rule 40 of the Assembly Rules, from the hon. Member Sri N. Marudachalam.

SRI N. MARUDACHALAM : கனம் சபாநாயகர் அவர்களே, கழிந்த 1947-ம் வருடம் செப்டம்பர் மாதம் ஏற்பட்ட மழையின் காரணமாக, அங்கு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக, ஆயிரக்கணக்கான குடிசைகள் அழிந்துவிட்டன. அதை சமாளிப்பதற்காக அன்றைக்கு அங்கிருந்த கலெக்டர் அவர்களின் தலைமையில் ஒரு கமிட்டி நிறுவி நிவாரணம் அளிப்பதற்காக வேலை செய்யப்பட்டது. அந்த கமிட்டியின் சார்பில் அங்கு குடியிருந்த மக்களுக்கு குடிசைகளை புதிதாக கட்டிக்கொள்வதற்காக சங்கனூர் பள்ளத்திலிருக்கின்ற மனையை கொடுத்தார்கள். இதற்காக அப்போது கமிட்டியின் தலைவராக இருந்த கலக்டர் அவர்கள் உத்தரவும் போட்டிருக்கிறார்கள். அதன்பேரில் அங்குள்ள மக்கள் இப்போது அந்த இடத்தில் குடியிருந்து வருகிறார்கள். ஒவ்வொருவரும் அந்த இடத்தில் நூற்றுக் கணக்கான ரூபாய்களை அதில் செலவு செய்து அந்த இடத்தில் குடியிருந்து வருகிறார்கள். இப்போது கடைசியில் . . .

(The Hon. Minister was seen presumably searching for the file relating to the motion.)

12-10 a.m. MR. SPEAKER : I think notice has been given to the Hon. Minister about this motion. It has also been circulated to his Department. If the Hon. Minister is not ready with his statement to-day, he can make his statement to-morrow.

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, the motion can be taken up to-morrow.

MR. SPEAKER : The motion will be taken up to-morrow.

III.—GOVERNMENT MOTION—MOTION UNDER RULE 23 (1) OF THE ASSEMBLY RULES.

MR. SPEAKER : Now the Hon. the Leader of the House will move a motion under Rule 23 (1).

THE HON. SRI C. SUBRAMANIAM : Mr. Speaker, Sir, the Business Advisory Committee has decided that the House should transact Government business to-morrow. Therefore, I move—

'That Rule 23 (1) of the Assembly Rules be suspended and the House do resolve to transact Government business on Thursday, the 18th September 1958'.

The motion was put and carried.

IV.—ANNOUNCEMENT BY THE HON. SPEAKER *RE* THE HOURS OF SITTING.

MR. SPEAKER : According to the agreement arrived at to-day, we shall have general discussion on the Supplementary Statement of Expenditure for 1958–59 and Statement of Demands for Grants for Excess Expenditure in 1955–56, till 1-30 p.m. to-day, that is, one hour for discussion on the Supplementary Statement of Expenditure and 15 minutes for the discussion on the Demands for Grants for Excess Expenditure. The House will meet again at 3 p.m. to-day, when we shall take up the urgent Government Bill, viz., The Madras Cultivating Tenants Protection (Amendment) Bill. After that we shall have general discussion on the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958, till 5 p.m. to-day. I think the House is agreeable to it.

V.—GENERAL DISCUSSION ON FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1958–59 AND STATEMENT OF DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1955–56.

MR. SPEAKER : Now, the hon. Member Sri A. R. Marimuthu will speak. Before he speaks, I would like to know how long the Hon. Minister will take for his reply.

THE HON. SRI C. SUBRAMANIAM : Ten minutes, Sir.

* SRI A. R. MARIMUTHU : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த சர்க்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் உப மான்ய கோரிக்கையின் மீது சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். இன்றைக்கு நம் ராஜ்யத்தில் செட்டில்மெண்ட் நடத்துவதற்காக இதில் உபரித்தொகை கேட்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்த சர்க்காரால் எடுத்துக் கொள்ளப்பட்ட ஜமீன் இனாம் கிராமங்களில் செட்டில்மெண்ட் வேலைகள் இன்னும் சரியான விதத்தில் நடத்தப்படுவதாக தெரியவில்லை. ஆகவே அதை துரிதப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவ்விதம் சில கிராமங்களில் இன்னும் செட்டில்மெண்ட் செய்யப்படாமல் இருப்பதால் அங்குள்ள மக்கள் கூடுதல் வரி கொடுக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆகவே எவ்வளவு சீக்கிரமாக செட்டில்மெண்ட் வேலைகள் செய்யமுடியுமோ அவ்வளவு வேகமாக இந்த வேலைகள் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் புதிதாக செட்டில்மெண்ட் செய்யப்படும்பொழுது புதிதாக நீர்ப்பாசன வசதி செய்யப்பட்ட இடங்களை எல்லாம், அதாவது நஞ்சை கிராமங்களை எல்லாம் புஞ்சை பிரதேசமாக கிளாஸிபிக்கேஷன் செய்து செட்டில்மெண்ட் செய்யப்படுகிறது. இது சரியல்ல என்பதுதான் என் எண்ணம். மானாவாரி புஞ்சை என்று செட்டில்மெண்ட் செய்து கொண்டு போனால் விவசாயிக்கு தண்ணீர் தீர்வை வரி அதிகமாக செலுத்தவேண்டியிருக்கும். அதோடு இனிமேல் வரப்போகும் விவசாய வருமானவரி சட்டத்தின்படி யார் அதிகமாக நிலவரி செலுத்துகிறார்களோ அவர்கள்தான் வரி செலுத்தவேண்டிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை வரப்போகிறது. ஆகவே அவர்கள் தலையில் வரிபாரத்தை மேலும் போட வேண்டிய நிலைமை ஏற்படும். ஆகவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு அந்தந்த கிராமங்களில் எந்த நிலைமையில் விவசாயம் இருக்கிறது என்பதை பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் கிளாஸிபிக்கேஷன் செய்து செட்டில்மெண்ட் நடத்தவேண்டும் என்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். மேலும், இப்போது இர்ரிகேஷன் சம்பந்தமாக உபரித்தொகை கேட்கப்பட்டிருக்கிறது. ஸி.எம்.பி. (காவேரி-மேட்டூர் பிராஜக்ட்) பகுதிகளில் தண்ணீர் போதவில்லை என்கிற குறை எப்போதும்

இருந்து கொண்டிருக்கிறது. அதிகமாக ஸி.எம்.பி. ஏரியாகவாக இருக்கின்ற பட்டுக்கோட்டை தாலுகாவில் நீர்பாசனத்திற்கு எவ்வளவு தண்ணீர் விடப்படுகின்றது என்று பார்த்தால் பழைய டெல்டா நிலங்களுக்கு தண்ணீரைப்போல் ஒரு ஏக்கருக்கு மூன்றில் இரண்டு பங்கு வீதம்தான் தண்ணீர் விடப்படுகின்றது. மணல் பிரதேசங்களாகவும், களிமண் பிரதேசங்களாகவும் இருக்கின்ற இந்த பிரதேசங்களுக்கு தண்ணீர் தேவை அதிகமாக இருக்கிறது. ஆகவே இந்த நீர்பாசன அளவை அதிகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் சர்க்கார் ஜமீன் இனாம் கிராமங்களில் இன்னும் ஏரிகள் குளங்கள் சீர்திருத்தம் செய்யவில்லை. ஆகவே அவைகளை எல்லாம் உடனடியாக சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு இப்போது தஞ்சை ஜில்லாவில் ஆயக்கட்டை சேர்ந்த பல பிரதேசங்கள் சீர்திருத்தம் செய்ய வேண்டியிருக்கிறது. இதில் அநேகம் பேர்கள் தாங்களாகவே சீர்திருத்தம் செய்வதற்காக அங்குள்ள இஞ்சினியரிடம் கேட்டால் தகுந்த காலத்தில் "புல்டோஸர்" கிடைப்பதில்லை. தேவைக்கு தகுந்தபடி அங்கு புல்டோஸர்கள் வருவதில்லை. இதனால் தேவைக்கு தகுந்த காலத்தில் கிடைப்பது கஷ்டமாக இருக்கிறது. இவ்விதம் கேட்கின்றவர்களின் பெயர்களை எல்லாம் வரிசைக் கிரமமாக எழுதி வைத்துக்கொண்டு அந்த லிஸ்டின் வரிசைக் கிரமமாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இவ்விதம் ஒரு வருஷத்தில் பெயர் கொடுத்தால் அடுத்த வருடமாவது புல்டோஸர் கிடைக்குமா என்பது சந்தேகத்தில் இருக்கிறது. குறிப்பாக இந்த பிரதேசங்கள் எல்லாம் நஞ்சை பிரதேசமாக இருக்கிறது. ஆகவே இதை கவனத்தில் கொண்டு புல்டோஸர்கள் அதிகமாக கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

Sri M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த உப மான்ய கோரிக்கையைப் பார்க்கும்பொழுது எனக்கு முதலில் மனதில் படுவது என்ன வென்றால் நம்முடைய சர்க்காருக்கு, இந்த சபையில் மெஜாரிடி இருக்கிறது என்கிற காரணத்தால் எப்படி வேண்டுமானாலும் வரவு செலவு செய்து கொள்ளலாம், அதை சட்டசபைக்கு கொண்டுவரலாம் என்கிற எண்ணம் தான் மேலோங்கி இருக்கிறது என்றுதான் என் மனதில் படுகிறது. அதற்கு போதுமான ஆதாரம் இல்லாமல் அல்ல. அவர்கள் கொடுத்திருக்கக்கூடிய விவரங்களைப் பார்த்தால், அதாவது மூன்றாவது பக்கத்தில் "கண்டிஜென்ஸி" என்ற தலைப்பின் கீழ் கிட்டத்தட்ட 30 ஐட்டங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதில் நாற்பத்தி ஆறு லட்சத்து எண்பதினாயிரம் ரூபாய்க்கு மேலாக செலவு செய்யப்பட்டிருக்கிறது. இவைகளை செலவு செய்த பிறகு இங்கே கொண்டுவந்து இதற்கு அனுமதி கேட்கிறார்கள். 1954-வது வருடம் எதிர்பார்க்காத செலவு என்று இவ்வளவு தொகை ஒதுக்கப்படுகிறது. இந்த "கண்டிஜென்ஸி" என்பதற்கு அரசியல் சட்டத்தில் "unforeseen" என்று சொல்லப்பட்டிருக்கிறது. சாம்பர்ஸ் டிக்ஷனரியில் பார்த்ததிலும் "that which could not be foreseen or providential" என்றிருக்கிறது. நாம் எதிர்பார்க்க முடியாத அல்லது தெய்வாதீனமாக ஏற்படக்கூடிய செலவுகளை தவர்னருடைய உத்தரவோடு செலவு செய்யலாம் என்று இருக்கிறது. அப்படி இந்த விஷயங்களெல்லாம் சர்க்கார் முன் கூட்டியே எதிர் பார்க்க முடியாததா ? அல்லது எல்லாம் தெய்வாதீனமாக ஏற்பட்டதா ? இவைகளையெல்லாம் சர்க்கார் சக்திக்கு அப்பாற்பட்ட விஷயங்களா என்று பார்க்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது, அவைகளில் பெரும்பாலும் எதிர்பார்க்கக் கூடியவை. அதிலே சில, அடிப்படை கொள்கை சம்பந்தப்பட்டவை. கொள்கை சம்பந்தப்பட்ட செலவுகளையெல்லாம் செலவழித்து விட்டு, சபையில் ஆதரவு கொடுங்கள் என்று கேட்பது இந்தச் சபையை அவமதிப்பதாக ஆகும். இதை நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையாகக் கிளப்பலாம் என்று இருந்தேன். அதற்கு . . .

MR. SPEAKER: நான் பதில் சொல்லியிருப்பேன்.

SRI M. KALYANASUNDARAM: அதற்கு சபாநாயகர் பதில் சொல்லி விடுவார் என்பதும், என்ன பதில் சொல்வார் என்பதும் எனக்குத் தெரியும். இதற்கு எதிராக ஓட்டு அளியுங்கள் என்று சொல்லியிருப்பார் என்பதும் எனக்குத் தெரியும். அதனால்தான் நான் ஒரு ஒழுங்குப் பிரச்னையாகக் கிளப்பவில்லை. நான் முதலில் ஒன்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். சபையை இந்த மாதிரி அவமதிக்கக்கூடாது. இந்தச் சபைக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம்.

இதிலே, 8-வது பக்கத்தில், ஜில்லா நிர்வாகம் சம்பந்தமான விஷயம். 12–20 p.m.
கிட்டத்தட்ட ரூபாய் 1,28,000 ஏற்கெனவே செலவழிக்கப்பட்டுவிட்டது. ரூபாய் 2,54,000 செலவழிக்க வேண்டிய ஒரு திட்டம், இதை கோரிக்கையிலே சேர்த்து, சபை நிறைவேற்றவேண்டும் என்று சொல்கிறார்கள். இதை விவாதிப்பதற்கு ஒதுக்கப்படும் நேரமோ குறைவு. பிஸினெஸ் அட்வைஸரி கமிட்டியில் நிதியமைச்சர் என்ன சொல்கிறார்கள் என்றால், இதற்கு ½ மணி போதாதா என்று. இப்போது 1¼ மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. செலவழிக்கப்பட்ட தொகை எதிர்பாராத காரியங்களுக்காக என்றால் அப்படியே ஒத்துக் கொண்டு விடலாம். இது எதிர்பார்க்க முடியாதா?

"The Government have sanctioned a scheme for the appointment of suitable political sufferers or members of their families as Social Welfare Workers in the Community Development and National Extension Service Blocks at the rate of two per block."

என்று கண்டிருக்கிறது. அதாவது அரசியல் தியாகிகளுக்கும், அவர்களுடைய குடும்பத்தினருக்கும் போதுமான வேலை கொடுப்பதற்காக என்று சொல்லப்பட்டிருக்கிறது. அரசியல் தியாகிகளிடம் பெரிதும் மரியாதையுடையவன் நான். அவர்களுடைய தியாகம் அழியாமல் இருக்க வேண்டும். இதன் மூலமாக அவர்களுடைய பெயர் கெட்டு விடக்கூடும். ஏனென்றால் பதவி கிடைக்கிறது. எளிய நிலையில் இருப்பவர்களுக்கு பென்ஷன் வேண்டுமானால் கொடுக்கட்டும். அப்பேற்பட்ட குடும்பத்தினருக்கு பென்ஷன் கொடுக்கட்டும். அதைப்பற்றி ஆட்சேபணையில்லை. தியாகம் செய்தவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் உத்தியோகம் கொடுப்பது, ஒரு கட்சியை பலப்படுத்தும் கொள்கை, தியாகத்திற்கு மரியாதையாகாது என்று இவ்விடத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன். பல பல சபலங்களை ஏற்படுத்தி, தியாகிகளுக்கும் அவமரியாதையை ஏற்படுத்தும். அதை விட்டு, சமுதாய நலத் திட்டம், தேசிய விஸ்தரிப்புத் திட்டம் முதலிய திட்டங்களுக்கு உதவி அளிக்குமா என்பது சந்தேகம். 151 பிளாக்குகளிலே, 300 பேர்களுக்கு மேல் நியமிக்கப்பட்டு விட்டதாக இருக்கிறது. அதற்கு இப்படி செலவு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் கொஞ்சம் செய்யப் போகிறார்கள். இம்மாதிரியான அடிப்படைக் கொள்கை சம்பந்தப்பட்ட விஷயங்களை சர்வ சாதாரணமாகக் கொண்டு வந்து சபையின் அனுமதியைக் கோருவதை, சபையை அவமதிப்பதாகும் என்று சொல்லாமல் என்ன சொல்வது என்று புரியவில்லை.

இதே போன்று, சர்க்கார் தனி நபர்களுடைய கம்பெனிகளில் மூலதனம் போடுகிறார்கள். சர்க்கார் மூலதனம் போடுவது தொழில் வளர்ச்சிக்கென்றால் அதை ஒப்புக் கொள்ளவேண்டும். சர்க்கார் போட்ட கம்பெனிகளில் பல உருப்படவில்லை. உதாரணமாக சுதர்சன் ஆயில் மில் (கனம் ஸ்ரீ ஸி. சுப்பிரமணியம்: இதில் மூலதனம் போடவில்லை). சர்க்கார் கடன் கொடுத்தார்கள். இதைப்பற்றி தனியாக வருகிறது. அப்போது இதைப் பற்றி விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறேன். சர்க்கார் பல கம்பெனிகளில் மூலதனம் போட்டிருக்கிறார்கள். உதாரணமாக டிராவன்கோர் கெமிகல் அண்டு பெர்டிலைஸர்ஸ். இதிலே மூலதனம் போட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு வருஷமும் நஷ்டம், சர்க்காருக்கு டிவிடெண்ட் கொடுத்ததாகத் தெரியவில்லை. டிவிடெண்டே கொடுக்கப்படவில்லை. இது சம்பந்தமாக விவாதிக்க இந்த சபைக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. வரவு செலவு சம்பந்தமாகவும் விவாதிக்க சந்தர்ப்பம் இல்லை. பத்து லட்சம் 20 லட்சம் என்று தனி நபர்கள் தொழிலுக்கு மூலதனம் போடுகிறார்கள். போடும்போது ஜாக்கிரதையாகப் போடவேண்டும். தொழில் வளர்ச்சிக்காக என்றால் போடவேண்டும். கோவையில் காளீஸ்வரர் மில் மூடப்பட்டிருக்கிறது. அதைத் திறக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கு ஒன்றும் மூலதனம் வேண்டாம். ஒரு ரூபாய் செலவில் அதைத் திறந்து நடத்தலாம். அதற்கு என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரியவில்லை. தாரங்கதாரா கெமிகல்ஸுக்கு ஐந்து லட்ச ரூபாய் கொடுத்தாகிவிட்டது. முதலில் சர்க்கார் பிரதிநிதி பார்த்து விட்டு வேண்டாம் என்று சொல்லிவிட்டு, பிறகு அதே பிரதிநிதி பார்த்து விட்டு, எடுத்துக் கொள்கிறோம் என்று சொல்லி ஐந்து லட்ச ரூபாய் மூலதனம் போடப்பட்டிருக்கிறது. ராஜபாளையத்தில், மெட்ராஸ் சிமெண்டுக்கு பத்து லட்ச ரூபாய் அரசாங்கம் மூலதனம் போட்டிருக்கிறது. யார் இதற்கு முதலாளிகள், எவ்வளவு பங்கு போடுகிறார்கள், என்ற விஷயங்களையெல்லாம் சபை முன்பு வைத்து நம் அபிப்பிராயத்தைக் கேட்கவில்லை. ஒவ்வொரு அங்கத்தினரிடமும் யார் யார் ரிஜிஸ்டர் செய்து கொண்டிருக்கிறார்கள், யார் யார் லைசென்ஸ் வாங்கியிருக்கிறார்கள் என்ற பட்டியல் இருக்கிறதா? என்ன அனுகூலம் இருக்கிறது, என்ன பிரதிகூலம் இருக்கிறது என்று அபிப்பிராயம் கொடுக்க முடியுமா, இதைப் பற்றிய முழு விவரங்களில்லாமல் சப்ளிமெண்டரி எஸ்டிமேட்டில் போட்டு சபை சாங்ஷன் கொடுக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. இதைப்பற்றி நிதியமைச்சர் அவர்கள் டிபார்ட்மெண்டுக்கு யோசனை கூறவேண்டும். இது எதிர்பார்க்க முடியாதது அல்ல. அல்லது, மார்ச்-எப்ரலில பணம் கொடுத்தால் நஷ்டம் ஆகிவிடாது. உடனே தொழிலை ஆரம்பிப்பதற்காக பணம் வேண்டியிருக்கிறது என்று சொன்னால், என்ன காரணத்திற்காக அவசரம் என்று சொல்லப்படவில்லை. இந்த அறிக்கையிலிருந்து ஒன்றும் புரிந்து கொள்ளமுடியவில்லை.

கடன் கொடுப்பதில் கொள்கை எப்படி இருக்கிறது என்று பாருங்கள். ஆரூரான் மில்லுக்கு ஐந்து லட்ச ரூபாய் அவசரம். ஏழை நிலச் சீர்திருத்தம் வந்தால் பங்கு கொடுக்க வேண்டும் என்பதற்காக, ஆரூரான் மில்லுக்கு அலெட்டாக எழுதி வைத்து விட்டிருக்கும் அந்த மில்லுக்கு உரம் வாங்க ஐந்து லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. கொடுத்துவிட்டு சபைக்கு சாங்கஷனுக்கு வந்திருக்கிறார்கள். நாம் உணவு உற்பத்தி பெருக வேண்டுமென்று சொல்கிறோம். இந்த நிலையில் விவசாயிகள் 500 ரூபாய் சர்க்காரிடமிருந்து கடன் வாங்கவேண்டுமென்றால் பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. வசதி இருக்கிறவர்கள் நேரடியாக சர்க்காருடன் பேசி ஐந்து லட்ச ரூபாய் உரத்திற்காக கடன் வாங்கிக் கொள்கிறார்கள். சர்வ சாதாரணமாக வாங்க முடியும் என்பதைப் பார்க்க முடிகிறது. இம்மாதிரி 46 லட்ச ரூபாய்க்கு பல கணக்குகள் இருக்கின்றன. நேரம் குறைவாக இருப்பதால், மற்ற அங்கத்தினர்கள் பேச இருப்பதால், நானே பூரா நேரத்தையும் எடுத்துக் கொள்ளக்கூடாது என்று பேச்சை சீக்கிரமாக முடித்துக் கொண்டாலும், உப மான்யக் கோரிக்கையை சபையை அலட்சியப்படுத்தக் கூடிய முறையில் கொண்டு வராமல், உண்மையிலேயே எதிர்பாராத செலவுகள் விஷயத்தில் மட்டும் கொண்டு வரவேண்டுமென்று சர்க்காரைக் கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

* SRI T. T. DANIEL : Mr. Speaker, Sir, while supporting this demand, I like to point out some facts for the consideration of the Government. A provision of Rs. 6 lakhs is asked for under the Grant XXI—Industries and Cinchona, mainly for starting the

17th September 1958] [Sri T. T. Daniel]

third shift in the Government Mineral Concern, Manavalakurichi, and also for the introduction of Extensive Khadi Scheme in the National Extension Service Blocks. There are two concerns at Manavalakurichi. One is a private company called the ' Hopkins and Williams Company ' and the other is a Government concern. At present I understand that in the Government concern, the output per day of ilmenite is about 1½ tons only. The plant in Allepey which is processing the ilmenite produced at Manavalakurichi requires 3 tons of monazite per day. So the need for the Government to increase the monthly output from 45 tons to nearly 150 tons has become a necessity. Therefore, the Government have to increase the number of workers there and they have to start a third shift also. So far as this Government concern is concerned, the Government of Madras have 5 per cent of the shares and 50 per cent of the shares is held by the Government of India and 45 per cent is held by Kerala Government.. The profit is divided on the basis of 5 per cent for the Madras Government, 45 per cent for the Kerala Government and 50 per cent for the Central Government. Our Government are getting besides this profit a royalty for the magnesite and ilmenite that are taken from this place. The income last year was approximately Rs. 11 lakhs. I understand that very soon this mineral concern at Manavalakurichi will be taken over by the Central Government. When this takes place, sufficient protection must be given to the officers and labourers who are working in the mineral concern. We must see that our Government get some more profit or at any rate not less profit than what we are getting from this concern now. 12-30 p.m.

I must also bring to the notice of the Government that the company of Messrs. Hopkins and Williams, who are now working as a private concern, must be taken over by the Central Government, and steps must be taken to achieve this purpose. Otherwise, there would be competition between the Government concern and this private concern. I hear from the management that this company, which is a British sponsored company, is getting a good market in England. The ilmenite that is produced by the Government concern is not getting such a market in England. If this private company is nationalised, this difficulty will not arise, and there will not be unhealthy competition between the ilmenite that we are producing from our concern and that produced by the private company.

I would bring to the notice of the Government that it is really a wholesome step taken by the Government to conduct a resurvey of the entire Kanyakumari district. We know that several thousands of acres of forest lands are encroached upon by estate land owners. If a proper survey is conducted, the Government can recover these lands from the estate owners and also get a huge amount by way of prohibitive assessment for the encroachments that they have made on forest lands. So far as Kanyakumari district is concerned, there is no classification of lands on the basis of quality or the irrigation facilities afforded by the Government.

(Deputy Speaker in the Chair.)

In order that Kanyakumari district also may come to the level of the other districts, while we order resurvey, we must issue instructions to the authorities that they should classify the cultivable lands in that district on the same basis as they have classified cultivable lands in the other districts.

With these remarks, Sir, I resume my seat.

* **SRI M. JAGANNATHAN :** மதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது சர்க்கார் புதிய திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்பதற்காக 195 லட்சம் ரூபாய்க்கு ஒரு உப மான்யக் கோரிக்கையைக் கொண்டுவந்திருக்கிறார்கள். பல அயிட்டங்களுக்காக சர்க்கார் இந்தத் தொகையைக் கேட்கிறார்கள். இதிலே குறிப்பாக ஒன்றை மாத்திரம் நான் இந்தக் குறுகிய கால அளவிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தில் பல ஜில்லாக்களிலே தொழில் பயிற்சி பள்ளிக் கூடங்கள் (பாலிடெக்னிக்ஸ் பள்ளிகள்) நடத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக சேலம், கோயம்புத்தூர், பொள்ளாச்சி போன்ற இடங்களில் தனியார் நடத்துகிற தொழில் பயிற்சிப் பள்ளிக்கூடங்களுக்கு மான்யம் அளிப்பதற்காக இப்பொழுது இந்த உப மான்யக் கோரிக்கை மூலம் சர்க்கார் பணம் கேட்கிறார்கள். இப்பள்ளிகளைப் பற்றி நான் ஒரு சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். சமீபத்திலே நமது சென்னை மாநிலம் எங்கும் இருக்கிற தொழிற் பள்ளிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக அமைக்கப்பட்ட குழுவிலே ஒரு அங்கத்தினராக பணியாற்றும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. அப்பொழுது நான் நம்முடைய மாநிலத்தில் பல ஜில்லாக்களிலே இருக்கின்ற தொழில் பயிற்சிப் பள்ளிகளுக்கு விஜயம் செய்ய நேர்ந்தது. அந்தத் தேர்தல் குழுவிலே நான் அங்கத்தினராக இருந்த காரணத்தினால் பல ஆயிரக்கணக்கான மாணவர்களைப் பேட்டி கண்டு அவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இப்படி நான் பல ஊர்களுக்கு விஜயம் செய்த சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு எண்ணம் தோன்றியது. நம்முடைய நாட்டிலே பலவித தொழில்கள் ஆரம்பிக்கப்படவேண்டும், நம்முடைய நாடு தொழில் மயமாக்கப்படவேண்டுமென்று சொல்லுகின்ற நேரத்திலே, இந்த தொழில் பயிற்சிப் பள்ளிகளிலே சேர்வதற்காக விண்ணப்பம் செய்துகொண்ட மாணவர்களைச் சேர்ப்பதற்கு போதிய சந்தர்ப்பமும், வாய்ப்பும், வசதியும் அளிக்கப்படவில்லை என்பதை நினைக்கும்போது, சர்க்கார் சொல்லுவதற்கும் செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கிறது என்பதை நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பக்கத்தில் நம்முடைய நாட்டை தொழில் மயமாக்கவேண்டும், அதற்காக பல தொழில் ஸ்தாபனங்கள் நிறுவவேண்டும், பல தொழில் பயிற்சி பள்ளிகளை ஏற்படுத்தி, பெருவாரியான மாணவர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை வேலையில் அமர்த்தி, அதன் மூலமாக தொழில் மயமாக்கவேண்டும் என்ற ஒரு திட்டத்தை சர்க்கார் பிரசாரம் செய்கிறார்கள். ஆனால் அதே நேரத்தில் போதுமான தொழில் பயிற்சிப் பள்ளிகள் இல்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

THE HON. SRI R. VENKATARAMAN. பதினாறு பாலிடெக்னிக்ஸ் பள்ளிகள் இருக்கின்றன.

SRI M. JAGANNATHAN : கனம் அமைச்சர் அவர்கள் 16 தொழில் பயிற்சி பள்ளிகள். இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள். உண்மைதான். ஆனால் இந்த 16 பள்ளிக்கூடங்களில் சேருவதற்காக 16,000 மாணவர்கள் விண்ணப்பித்துக் கொள்கிறார்கள். மேலும், ஒரு தொழில் பயிற்சிப் பள்ளிக்கூடத்தில் ஏதோ குறிப்பிட்ட தொழில்கள்தான்

கற்றுக்கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு தொழிலையும் ஒரு "டிரேடு" என்று சொல்லுகிருர்கள். ஒவ்வொரு தொழிலுக்கும் 10 ஸ்தானங்கள் அல்லது கூடினுல் 15 ஸ்தானங்கள் தான் வைத்திருக்கிருர்கள். உதாரணமாக, **blacksmithy, carpentry, draftsmen (civil), draftsmen (mechanical), fitter**, போன்ற கைத்தொழில்களுக்கெல்லாம் அதிகப்படியான ஸ்தானங்களை ஒதுக்கி, ஏராளமான மாணவர்களை அதிலே சேர்த்து, நல்ல முறையில் பயிற்சி கொடுத்து, அவர்களை வேலையில் அமர்த்தி, அதன் மூலம் தொழில் மயமாக்கும் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தால், மாணவர்களிடையே இருக்கும் வேலையில்லாத்திண்டாட்டத்தை ஒழிப்பதோடு, சர்க்காருடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் அனுகூலமாகயிருக்கும். ஆனுல் நடைமுறையில் பார்க்கும்பொழுது, இதற்குமாருக, ஏராளமான மாணவர்களுக்கு இப்பள்ளிகளில் சேருவதற்கான வாய்ப்புகள் மறுதளிக்கப்படுகின்றன. தேர்தல்குழு மாணவர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்கவேண்டு மென்பதற்காக விதிகள் இருக்கின்றன. மாணவர்களுக்கு "personality test" வைக்கப்படுகிறது. அதன் பிறகு "General knowledge test" வைக்கப்படுகிறது. அதன் பிறகு அவர்களுடைய "extra curricular activities" ஐப் பற்றி ஒரு டெஸ்ட் வைக்கப்படுகிறது. இம்மாதிரி டெஸ்டுகள் வைப்பதில் ஒன்றும் குறைவு இல்லை. ஆனுல் இந்த டெஸ்டுகளுக்கு எல்லாம் பிறகு "இங்கே போதிய இடமில்லை, ஆகவே, தம்பி, வீட்டுக்குப் போ" என்று சொல்லக்கூடிய பரிதாபகாமான நிலைமை நம்முடைய மாநிலத்தில் இருக்கிறது.

தனியார் நடத்துகின்ற இம்மாதிரியான பாலிடெக்னிக் பள்ளிக்கூடங்களுக்கு மேலும் அதிகமாக மான்யம் கொடுத்து, இந்தப் பள்ளிக்கூடங்களை போதுமான அளவுக்கு விஸ்தரித்து, மாணவர்களுக்கு அதிகமான எண்ணிக்கையில் இப்பள்ளிக்கூடங்களில் சேர்ந்து படித்து, பயிற்சிபெற்று வெளி வரும் சந்தர்ப்பத்தை அளிக்க சர்க்கார் முன்வரவேண்டும். அப்படி அவர்கள் செய்யவில்லை என்ருல், நாட்டில் படித்த மாணவர்களிடையே ஏற்படுகின்ற வேலையில்லா திண்டாட்டம் அதிகமாக வளர்ந்துகொண்டுபோகும். அதே சமயத்தில் "நாட்டை தொழில் மயமாக்கவேண்டும்" என்று கூறுகிருர்களே அந்தப் பிரசாரம் அர்த்தமற்ற பிரசாரமாகப் போய்விடும். ஆகவே, சர்க்கார் இந்த விஷயத்திலே அதிக கவனம் செலுத்தி நம்முடைய மாநிலத்திலே பாலிடெக்னிகல் பள்ளிகள் சரியான முறையில் இயங்கும்படியும், மேலும் அதிலே அபிவிருத்தி ஏற்படும்படியும் செய்வதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன். 12-40 p.m.

Sri P. U. SHANMUGAM: சட்டமன்ற துணைத் தலைவர் அவர்களே, சர்க்காரின் துணை மான்யக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சர்க்கார் துணைமான்யக் கோரிக்கை கொண்டு வருவது சம்பிரதாயம் தான். சாதாரணமாக சர்க்கார் இடைக்காலத்தில் ஏற்படக்கூடிய செலவுக்காக இதுபோன்று சட்டமன்றத்தின் அனுமதியை கோருகிருர்கள். இம்மாதிரி சட்டமன்றத்தின் அனுமதியை பெற்றுக்கொள்ளலாம் என்று சர்க்கார் செலவுகளை மேற்கொள்ளும் முறை தவறு என்று சொல்லாவிட்டாலும், முன்பு பேசிய கனம் கலியாணசுந்தரம் அவர்கள் குறிப்பிட்டதுபோல் சர்க்கார் வரவு செலவு திட்டத்திலேயே இதைச் சேர்த்துக்கொண்டிருக்க முடியாதா, இதை இப்பொழுது ஏன் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்காவிட்டாலும், நான் ஒன்று கேட்பேன். சர்க்கார் 30 இனங்களை எடுத்துக்கொண்டு, இவைகளுக்காக புதியதாக இவ்வளவு செலவு செய்யப்படுகின்றது. இதற்கு சட்டமன்றம் அனுமதி அளிக்கவேண்டுமென்று கோரியிருக்கிருர்கள். சட்டமன்றத்தின் அனுமதி சர்க்காருக்கு தாராளமாக கிடைத்து விடும் என்ருலும், எதிர்க் கட்சியைச் சேர்ந்த நாங்கள் சொல்லுகின்ற கருத்துக்களுக்கும் கொஞ்சம் செவிமடுத்து, அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். 30 இனங்களுக்காக இவ்வளவு செலவு செய்யப்போகிறேம் என்று கொடுத்திருக்கிருர்கள். ஆனுல்

இவர்கள் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கியிருக்கும் தொகையை எதாவது நிறுத்திவிட்டார்களோ என்ற அச்சம் எனக்கு எற்படுகின்றது. அப்படி ஒன்றும் நிறுத்தாமல், சென்ற வரவு செலவு திட்டத்தில் சர்க்கார் உறுதி மொழி கொடுத்து இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பல திட்டங்களை நிறைவேற்றுவதுடன் இந்த திட்டங்களையும் நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். புதிய திட்டங்களை உருவாக்குவதன் மூலம், பழைய திட்டங்கள் மறையக்கூடாது. புதியனதான் புகுந்ததே, பழையன கழியக்கூடாதா என்று நிதி அமைச்சர் அவர்கள் சமாதானம் சொல்லிவிடக்கூடாது. உறுதிமொழி அளிக்கப்பட்ட பழைய திட்டங்களை நிறைவேற்றவேண்டும்.

அடுத்து, தேசிய தியாகிகளுக்கு 151 பிளாக்குகளில், பிளாக்குக்கு இரண்டு வீதம் 312 உத்தியோகங்கள் வழங்கப்பட்டன என்று 8-ம் பக்கத்தில் கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது அச்சுப் பிழையா அல்லது அப்படித்தான் நேர்ந்திருக்கிறதா என்பதை நிதி அமைச்சர் அவர்கள் எனக்கு பதில் சொல்லும் பொழுது விளக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். சென்ற வரவு செலவு திட்ட விவாதத்தின் போது அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும்பொழுது கருணாநிதி அவர்கள் 8 பக்கம் வரை நன்றாக படித்திருக்கிறார் என்று சொன்னமாதிரி பதில் கொடுக்காமல், நல்ல சமாதானத்தை நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுவார் என்று எதிர்பார்க்கிறேன். 8-வது பக்கத்தில் 151 பிளாக்குகளுக்கு, பிளாக்குக்கு இரண்டு பேர்கள் வீதம் 312 என்று ஆங்கிலத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது 312-ஆ அல்லது 302-ஆ என்று எனக்குப் புரியவில்லை. தயவு செய்து அமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டும். எண்ணிக்கை எப்படி இருந்தாலும், தியாகிகளுக்கு அந்த இடங்களில் உத்தியோகம் கொடுத்ததுபற்றி எனக்கு முன்பு பேசிய கம்யூனிஸ்டு தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தியாகிகளுக்கு நிலம் கொடுக்கப்பட்டபொழுது நாங்கள் அதனை பாராட்டினோம், எதிர்த்தோமில்லை. அவர்களுக்கு நிலம் கொடுத்த பிறகு, சர்க்கார் உத்தியோகங்கள் கொடுத்து ஆதரிக்கவேண்டிய நிலை என்ன, அது எப்படி எற்பட்டது என்பது எனக்குப் புரியவில்லை. அவர்கள் நாட்டிற்கு செய்த சேவைக்கு இதைத்தான் பரிசாக கொடுக்கிறார்களா என்று நமக்குப் புரியவில்லை. "ஒருவேளை நாட்டிற்கு சேவை செய்ததன் மூலம் வாழ்க்கைத் தரத்தில் பின்னடைந்து விட்டார்கள். அவர்களுக்கு உதவி செய்ய கடமைப்பட்டிருக்கிறோம்" என்று சமாதானம் கூற முடியும். அவர்களுக்கு வேறு எதாவது நல்லதாகக் கொடுத்திருக்கக்கூடாதா என்று நான் கேட்கிறேன். அவர்களுக்கு கம்யூனிடி டெவலப்மெண்டு பிளாக்குகளில் வேலை தரப்பட்டிருக்கிறது. சமுதாய நலத் திட்டங்களில் அவர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்ட வேலைகள் அரசியல் தியாகிகளுக்குக் கொடுப்பது நியாயம் தானா என்று அமைச்சர் அவர்கள் யோசித்து எனக்கு பதில் சொல்லவேண்டும்.

அடுத்து, கதர் அபிவிருத்தித் திட்டங்களுக்காக பணத்தை எராளமாக ஒதுக்கியிருக்கிறார்கள். நான் கதர் திட்டத்தை எதிர்க்கிறேன். எதிர்க்கட்சியில் இருப்பதற்காக குற்றம் சாட்டுகிறேன் என்று கருதவேண்டாம். இந்தத் திட்டத்தை சமுதாய நல அபிவிருத்தி இலாகாவில் புகுத்தியிருப்பது முறைதானா என்று எனக்குப் புரியவில்லை. இதை சர்க்கார் தயவு செய்து பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்குத் தெரிந்த அளவிலே சொல்லுகிறேன். இதை தவறு என்று மறுத்தால்கூட நான் எற்றுக்கொள்ள தயாராக இருக்கிறேன். நிலத்திற்கு எரு வாங்குவதற்கு விவசாயிகள் வந்தால், 120 ரூபாய் எருவுக்கு பணம் கொண்டு வந்தால், சமுதாய நல இலாகா அதிகாரிகள் விவசாயிகளின் தலையில் 25 ரூபாய்க்கு கதரை கட்டிவிடுகிறார்கள். நிலத்திற்கு எரு கேட்டால், உடலுக்கு துணியை கொடுத்து அனுப்புவது நியாயமா? கதர் வாங்குவதில் கட்டாயப்படுத்தக் கூடாது என்று சர்க்கார் அதிகாரிகளுக்கு உத்தரவு போடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்து, பனவெல்லம் காய்ச்சுவதற்காக ஒரு திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. வட ஆற்காடு மாவட்டத்தில் நடந்த மது விலக்கு ஆலோசனை கமிட்டிக் கூட்டத்தில்—எதிர்க்கட்சிக்காரர்கள் அல்ல, நான் பெயரைச் சொல்ல விரும்பவில்லை—காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த பல நண்பர்கள் பனவெல்லம் காய்ச்சும் திட்டத்தை பலமாக எதிர்த்து, அதற்காக ஒரு தீர்மானம் கூட உருவாக்கி அனுப்பியிருக்கிறார்கள். பனவெல்லம் காய்ச்சும் திட்டத்தின்கீழ் கள்ளச் சாராயம் காய்ச்சுவார்கள், பனவெல்லம் காய்ச்சப்படமாட்டாது என்று குற்றம் சாட்டி, தங்களுடைய ஆட்சேபணையை தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் புகாருக்கு இடம் இல்லாத வகையில் சர்க்கார் இந்தத் திட்டத்தை மேற்கொள்ளவேண்டும், கண்காணிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அமராவதி, லோயர் பவானி அணைக்கட்டு பிரதேசங்களிலுள்ள பூங்காவினை நிரந்தரமாக்குவதற்கு சர்க்கார் திட்டமிட்டிருக்கிறார்கள். சில மாதங்களுக்கு முன்பு நமது மாநிலத்து முதலமைச்சர் கனம் காமராஜ் அவர்கள் என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சாத்தனூர் அணைக்கட்டுக்கு வந்திருந்தபொழுது அதன் கீழ்ப்புறத்தில் அமைக்கப்பட்டிருந்த பூங்காவினைப் பார்த்து அதை நிரந்தரமான பூங்காவாக்கக்கூடாதா என்று கேட்டார்கள். அங்கிருந்த என்ஜினியர்கள் அதற்கான திட்டத்தை உருவாக்கி சர்க்காருக்கு அனுப்புவதாகச் சொன்னார்கள். "அனுப்புங்கள், நானும் அதற்கு வேண்டிய அனுமதி அளிக்கிறேன்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அமராவதி, லோயர் பவானி திட்டங்கள் தான் இதில் இடம் பெற்றிருக்கிறதே தவிர, சாத்தனூர் இடம் பெறவில்லை. இதற்குக் காரணம் எனக்குப் புரியவில்லை.

பாலிடெக்னிக் பள்ளிக்கூடங்களைப்பற்றி ஒரு வார்த்தை சொல்லுகின்றேன். வட ஆற்காட்டைச் சேர்ந்த ஒரு நபர் குடியாத்தத்தில் தொழில் கல்லூரி ஆரம்பிப்பதாகச் சொன்னார்கள். சென்ற கூட்டத்தில் அதைப்பற்றி கேள்வி கேட்கப்பட்டபொழுது உப கேள்விகளுக்கு பதில் அளிக்கையில் "ரெகரிங் எக்ஸ்பெண்டிசரை இவர் ஏற்றுக்கொள்வதாகத் தெரிந்துவிட்டது. அது சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது" என்று அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார். இது பற்றி சர்க்காரின் கொள்கை விளக்கப்படவேண்டும். தொழில் கல்லூரிகளை ஏற்படுத்துவது பற்றி அரசாங்கம் எந்த முறையை கையாளுகிறது, அதே முறை தான் வட ஆற்காடு மாவட்டத்திற்கும் கையாளப்படுகிறதா, அல்லது வேறு முறை கையாளப்படுகிறதா என்று நிதி அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதில் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். சென்றமுறை காமராஜ் அவர்கள் தேர்தலுக்கு நின்று வெற்றிபெற்ற குடியாத்தத்தில் ஒரு தொழில் கல்லூரி ஏற்படுவதில் காலதாமதம் ஏன் ஆகிறது என்பது எனக்குப் புரியவில்லை. அதை விரைவிலே ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri K. SATTANATHA KARAYALAR** : உதவி சபாநாயகர் அவர்களே, இந்த உபமான்யக் கோரிக்கையின் மீது ஒரு சில வார்த்தைகள் கூற அவா உருகின்றேன்.

முதலிலே, கோதையார் நீர்ப்பாசன திட்டத்திற்காக சுமார் ரூ. 2 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது அங்குள்ள கால்வாய் மராமத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கோதையார் திட்டம், பெச்சிப்பாரை, பெருஞ்சாணி திட்டங்களும் உள்ளிட்டது. 1908-ம் ஆண்டில் அதாவது 50 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள இந்தத் திட்டங்களில் பல தவறுகளும் குறைகளும் இருக்கின்றன. இதன் பாசனத்திலுள்ள சிறு குளங்கள் பலவும் "லில்ட்" அதாவது மண் அடிபட்டு மிகவும் பெரிய அளிவிலே வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால் துரதிர்ஷ்டவசமாக கடந்த பட்ஜெட் காலத்தில் இதற்காக குறிப்பிட்ட நிதி ஒன்றும் ஒதுக்கப்படவில்லை என்று கன்யா

12-50 p.m. குமாரி மாவட்ட நண்பர்கள் பலரும் குறிப்பிட்டார்கள். ஆனால் இன்று, இரண்டு லட்ச ரூபாய் செலவில், 30 மைலுக்கு மூன்று ரீச்சுகளாகப் பிரித்து, செமெண்ட் இட்டு வேலை செய்வதாகத் திட்டமிட்டிருக்கிறார்கள். ஆனால் கால்வாய் டெயில் எண்டுக்கு தண்ணீர் வருவது இல்லை என்பது இதற்கு முன்பே சொல்லப்பட்டுள்ளது. ஆனால் இந்த மராமத்து தீர யோசித்துப் போட்ட திட்டமா அல்லவா என்று தெரியவில்லை. இது வெறும் கண் துடைப்புத் திட்டமாய்த் தோன்றுகிறதே தவிர, அங்கே இருக்கும் நிலைமையை பாங்காக பரிசீலனை செய்து தீட்டியதாக தெரியவில்லை. செமெண்ட் ஸ்லேப்கள் இட்டு, கால்வாய் "பர்கொலேஷன்" தண்ணீர் வருவதை தவிர்த்து, கடைகோடிக்கு தண்ணீர் வரும் வண்ணம், முழுதும் பரிசீலனை செய்த திட்டமா, அல்லது ஆங்காங்கே ஏற்படும் கிளர்ச்சிகளுக்கு சமாதானம் தேடும் வகையில், தாற்காலிகமாகத் தீட்டப்பட்ட திட்டமா என்று தெரியவேண்டும்.

ஜீப் இனத்தில், ரெவினியு டிபார்ட்மெண்டுக்கு ஜீப் சப்ளை செய்வதற்காக மானியம் அவசரமாக என்று கோரப்பட்டிருக்கிறது. டிஸ்டிரிக்ட் பாரஸ்ட் ஆபீசர்கள், ஜீப் இல்லை என்று சொல்லி, பல் வேறு இடங்களுக்குப் போக முடியவில்லை. அவசரமாக ஜீப்கள் அவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று கோரப்பட்டிருந்தும், அவர்களுக்கு இல்லாமல், ஆர். டி. ஓ.களுக்கு மாத்திரம் கொடுக்கப்படவேண்டும் என்பது என்ன காரணத்தால் என்று தெரியவேண்டும்.

பாலிடெக்னிக்குகளுக்கு, உதவி மான்யம் அவசரமாகக் கோரப்பட்டுள்ளது. பாலிடெக்னிக்குகள் விஷயத்தில் ஒன்று சொல்ல அவா உறுகிறேன். இந்தப் பள்ளிக்கூடங்களிலே, மாணவர்களைச் சேர்ப்பது சம்பந்தமாக பெரும் புகார்கள் வருகின்றன. நாம் சர்க்காரிலிருந்து பெரும் தொகை இவர்களுக்கு கொடுக்கிறோம். அவர்கள், தங்கள் இஷ்டம் போல், தங்கள் செல்வாக்கை வளர்த்துக்கொள்ளப் பயன்படும் வகையில், மாணவர்களைச் சேர்க்கிறார்கள். மாகாண ரீதியாக ஒரு கமிட்டி போட்டு, மாணவர்களை அந்தக் கமிட்டி சிபாரிசுப்படி சேர்க்கவேண்டும் என்ற ஒரு நிபந்தனையைப் போடவேண்டும். குறிப்பாக, பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கே அதைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். ட்ரெயினிங் ஸ்கூல் தேர்வும் கூட இதில் சேர்க்கலாம். அவர்களுக்குச் சௌகரியம் இல்லாவிட்டால், பாலிடெக்னிக்குகளுக்கு மாணவர்கள் சேர்ப்பதை எதிர்க்கட்சி அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு கமிட்டி போட்டு, அதன் தீர்மானப்படி சேர்ப்பது சாலச் சிறந்தது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவ ஆராய்ச்சித்துறையில், ஆஸ்துமா, டையாபிடிஸ் முதலிய வியாதிகளுக்கு இண்டிஜினஸ் மெடிசினை ஆராய்ச்சி செய்வதற்காக மத்திய சர்க்காரிலிருந்து, மான்யம் வருகிறது என்ற அடிப்படையில் நாம் பணம் கொடுக்கவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. இந்த ஆஸ்துமா, டயாபிடிஸ் முதலிய வியாதிகள், சித்த வைத்திய முறையிலே, சிகிச்சை செய்யப்பட்டும் வருகிறது. இதற்காக 50 பெட்டுகள் அமைத்து, இந்த ஆராயச்சி நடத்துவதாகத் தெரிகிறது. பல்வேறு பகுதிகளிலும், சாதாரணமான வைத்தியர்கள் செய்யக்கூடிய சித்தமூலிகை வைத்திய முறைகள் இதற்கு உபயோகமாகும் என்ற அடிப்படையில் இந்த ஆராய்ச்சிகள் செய்யப்படுகிறதா என்று தெரியவேண்டும். மூலிகைகளை உபயோகப்படுத்தியும் புடம் இட்டு, மருந்துகள் மூலமாகவும், சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. ஆஸ்துமாவை டிராபிகோ இஸ்னுபீலிஸ், அலெர்ஜிக் என்று அலோபதிக் முறையிலே பிரிக்கிறார்கள். இண்டிஜினஸ் முறையிலே, இதே நோய்கள் குறிப்பிட்ட மூலிகைகள் மூலமாக குணப்படுத்தப்படுகின்றன. கிராமாந்திரங்களிலே பல்வேறு வைத்தியர்கள் பலவிதத்தில் வைத்தியம் செய்து வருகின்றனர். ஆனால், அவர்கள் இடையே, கோ-ஆர்டினேஷன் இல்லை. தனிப்பட்ட மனிதர்கள், தங்களுக்கு உகந்த முறைகளில், சிகிச்சை செய்து வருகிறார்கள். இவர்களையெல்லாம்கொண்ட ஒரு மகா நாடு கூட்டி, அவர்களோடு கலந்து ஆலோசித்து, சித்த முறையிலே ஒரு அடிப்படை

கொள்கையை வகுத்துக்கொள்வது ஆராய்ச்சியில் விசேஷ பயன் தரக் கூடியதாக ஆராய்ச்சி அமையவேண்டும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, அக்ரிகல்சர் காலேஜில் எம்.எஸ்.ஸி., பி.ஹெச். டி., டிகிரிகளுக்காக கோரப்பட்டிருக்கும் மான்யம். இந்த ஏற்பாடு மிக வரவேற்கத்தக்கது. இப்பொழுது, நமது கல்லூரிகளிலேயிருந்து வெளி வரும் மாணவர்கள், பி.எஸ்.ஸி., படித்தவர்கள், வெளியிடங்களிலே சென்று மேல் படிப்பு படிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இது வரையில் இருந்தது. ஆகவே, இந்த திட்டம் சாலச் சிறந்தது. இங்கே இருக்கும் பிரெசிடென்சி கல்லூரியிலோ, யூனிவர்சிட்டியிலோ இதுபோல் என்ன செய்ய முடியும் என்றும் யோசிக்கவேண்டும். விவசாயத் துறையில், பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. அவை, அக்ரிகல்சுரல் எக்னாமிக்ஸ், அக்ரிகல்சுரல் , டையரியிங், என்று பலவிதமான துறைகள் ஆகும். அவைகளைப் பிரித்து அவைகளெல்லாம் அபிவிருத்தி ஏற்படக்கூடியமுறையிலே இதை நிறுவவேண்டும். ஆராய்ச்சியாளர்களுக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பாம் குர், அல்லது பனை வெல்லம் செய்யக்கூடிய துறையில், பல கூட்டுறவு சங்கங்கள் வேலை செய்து வருகின்றன. கன்யாகுமரி மாவட்டத்தில் பல சொசைடிகள் நல்ல முறையிலே வேலை செய்யவில்லை. குறிப்பாக பனை வெல்லம் செய்பவர்கள், பவுண்ட் சுமார் ஆரரை அல்லது ஏழு அணுவுக்கு விற்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். நன்றாக சுத்தம் செய்யப்பட்ட வெல்லம் எட்டணு, எட்டரையணுவுக்கு மார்க்கெட்டில் விற்கிறது. இவர்கள் வெல்லம் அந்த விலைக்குப் போவது இல்லை. குறைந்த விலையில் விற்பதற்கு அவர்களுக்கு ஸப்ஸிடி கொடுத்து உதவினால் தான், அவர்கள் தொழில் நிற்க முடியும். உற்பத்தி செய்யும் வெல்லத்திற்கு, பவுண்டுக்கு ஒன்று அல்லது ஒன்றரை அணு உதவி தொகை கொடுத்தால் தான், இதர வெல்லத்திற்கு முன்பு அவர்கள் தொழில் நிற்க முடியும். இல்லையானல் பல பாம் குர் சொசைடிகள் கூடிய சீக்கிரம் தங்கள் அலுவல்களை நிறுத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே குறைந்தது சில குறிப்பிட்ட சொசைடிகளுக்காவது, கடனுகவாவது பணம் கொடுத்து உதவி செய்தாகவேண்டும்.

அடுத்தபடியாக, ராமனுதபுரம் ஜில்லாவில், ரோடுகளை அபிவிருத்தி செய்வதற்காக சுமார் ஏழு லட்சம் ரூபாய் அவசர அவசரமாகக் கோரப்படுகிறது. இப்பொழுது, அங்கு ரோடுகள் நல்ல முறையிலே போடப்படுவதில்லை, பெயரளவில் தான் ரோடுகளே தவிர வேறென்றுமில்லை. வெறுமனே, மண்ணைத் தூவி விட்டு, பெயரளவிலே ஒரு ரோடு என்று போட்டுவிட்டு, ரோடு போட்டுவிட்டோம் என்று பிரசாரத்திற்குத் தான் அது உபயோகப்படுகிறது. ஆகவே, இந்த ரோடுகள் நல்ல முறையிலே அமையவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த மதராஸ் ஸெமெண்ட்ஸ் என்ற ஸெமெண்ட் பாக்டரிக்கு "அண்டர் டெவலப்ட்டு" ஏரியா என்ற அடிப்படையில் ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள இந்த ஆலைக்குப் பணம் கேட்கப்படுகிறது. ராமநாதபுரத்தை "அண்டர் டெவலபிட்டு" ஏரியா என்று சொல்லிக்கொண்டு, கிழக்கு ராமநாதபுரம் பகுதிக்குக் கொடுக்காமல் மேற்கு ஏரியாவுக்குக் கொடுப்பது சரியல்ல. ராஜபாளையம் ஏரியாவை "பேக்வர்ட்" ஏரியா என்பதும் சரியல்ல.

காங் மஸ்டூர்களுக்கு வீடு அமைத்துக் கொடுக்கவேண்டுமென்று அந்த இனத்தில் பணம் கோரப்படுகிறது. உபயோகமில்லாமல் சிங்க் ஷீட்டுகள் இருந்தன. அவைகளைக்கொண்டு மஸ்தூர்கள் வசிக்க வீடுகள் கட்டிக் கொடுப்பது என்பது பிரயோசனம் இல்லை. உபயோகமில்லாத பொருள்களைக் கொண்டு செய்து கொடுப்பதில் என்ன லாபம்? ஏதோ பப்ளிக் அக்கௌண்ட்ஸ் கமிட்டி சிபாரிசு செய்த அடிப்படையில், சிங்க் ஷீட்டுகளை

பயன்படுத்த இதைச் செய்து கொடுத்து விடுவது போதாது. நல்ல முறையிலே அவர்களுக்கு உபயோகமாகும் முறையிலே, அவர்கள் வசிக்கக் கூடிய சௌகரியமாக இருக்கும் முறையிலே கட்டிக் கொடுக்கவேண்டும். இந்த திட்டம் அப்படிச் செய்வதாகத் தெரியவில்லை.

ஆரூரான் ஷுகர் மில்லுக்கு அவசர அவசரமாக ரூபாய் ஐந்து லட்சம் கடனுகக் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்கு அவசர அவசரமாக மானியம் கோரப்படுகிறது. இந்த ஆரூரான் ஷுகர் மில்லுக்கு மாத்திரம் பணம் கொடுக்கவேண்டியதன் அவசியத்தை அறிய அவா உறுகிறேன். இதன் பொருளாதார நிலைமைபற்றி சர்க்காருக்கே சந்தேகம் இருப்பதாகத் தெரி கிறது. பணம் சரியான காலத்தில் கொடுபடாவிட்டால், ஏழரை சதவிகிதம் அதிக வட்டியாக வசூலிக்கப்படும் என்றிருக்கிறது. இது ஒரு லூஸிங் கன்ஸர்ன் என்று ஏற்கனவே இந்த சபையிலேயே ஒரு விவாதத்தின் போது கூறியதாக என் நினைவு. அம்மாதிரி லூஸிங் கன்ஸர்ன் ஒன்றில் நாம் ஏன் முன் பணம் கொடுக்கவேண்டும் என்று தெரிய அவா உறுகிறேன்.

1 p.m. THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, முதன் முதலில், ஸ்ரீ கலியாணசுந்தரம் அவர்கள், இந்த மாதிரி பல உப மானிய கோரிக்கைகளைக் கொண்டு வருவதானது இந்த சட்டசபையை அவமதிப்பதாக ஆகும் என்கின்ற ஒரு கருத்தை வெளியிட்டார். நாம் எடுத்துக்கொண்டிருக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்கு எல்லா விதமான முயற்சிகளையும் நாம் செய்து கொண்டு வருகிறோம். இப்படி ஆரம்பிக்கப்படும் சில திட்டங்களுக்கு மத்திய அரசாங்கத்தினுடைய உதவியையும் நாம் பெற்று அவைகளை ஆரம்பிக்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி உதவி பெறுவதற்கு முன்னதாகவே சில திட்டங்களை எடுத்து நடத்த வேண்டியதாக இருக்கிறது. அப்படி உதவி பெறுவதற்கு முன்னதாகவே பட்ஜெட்டில் இதை சாங்கிஷன் செய்து அந்த திட்டங்களை எடுத்து நடத்தி விடலாம் என்று சொல்லிவிட முடியாது. ஆகையால்தான் பல திட்டங்களை மத்திய சர்க்காருடைய உதவி கிடைக்கும் என்கின்ற உறுதி கிடைத்தவுடனேயே அந்த திட்டங்களை யெல்லாம் எடுத்து நிறைவேற்ற வேண்டுமென்கின்ற முயற்சி செய்கிறோம். ஆனால் ஸ்ரீ கலியாணசுந்தரம் சொல்லுகிற வழியை பின்பற்றினால் இந்த திட்டங்களையெல்லாம் எடுத்து நடத்துவது என்பது சந்தேகம்தான். அப்படி இல்லாமல் மார்ச்சு மாதம் வரையில் காத்திருந்து அப்பொழுது அதைப்பற்றி ஆலோசனை செய்து அதன் பிறகு அடுத்த வருஷத்தில்தான் அவைகளை எடுத்துக்கொள்ள முடியும். அதனால் நாம் விரும்புகிற அவ்வளவு திட்டங்களும் எடுத்துக்கொள்ளப்படாமல் நின்று போய்விடும். பல புதிய திட்டங்கள் அவ்வப்போது எடுத்துக்கொண்டு உடனடியாக நிறை வேற்ற வேண்டியதாக இருக்கிறது. அந்த திட்டங்கள் எல்லாம் அவ்வப் போது சேர்க்கப்பட வேண்டியதாக இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்படிப்பட்ட கோரிக்கைகளை சபை வரவேற்பதற்கு பதி லாக குற்றம் சொல்வது என்றால் அது சரியல்ல என்பதை மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக கனம் ஷண்முகம் அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார். புதிய திட்டங்கள் வரும்போது பழைய திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படாமல் நின்று போய்விடுகின்றன என்று சொல்லுகிறார். ஏற்கெனவே எடுத்துக்கொண்ட திட்டங்கள் எல்லாம் எடுத்துக்கொள்ளப் பட்டு அவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டுக்கொண்டுதான் வருகின்றன. எல்லாவற்றையும் நிறைவேற்றுவதற்குத்தான் எல்லா விதமான முயற்சி யும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. அவைகளுக்கு ஏதாவது கால தாமதமோ அல்லது தடையோ ஏற்பட்டால் புதிய திட்டங்கள் ஏற்பட்டதன் காரணம் அல்ல, அவைகளினால் காலதாமதமும் தடையும் ஏற்பட்டிருக் காது, வேறு ஏதாவது இயற்கை காரணமாக இருக்கலாம். ஆகவே முன்னமேயே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திட்டங்கள் எல்லாம் புதிய திட்டங்களினால் தடைபடாது என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்ளு

கிறேன். ஆனால் அவர் பேசும்போது புதிய திட்டங்களினால் பழைய திட்டங்கள் எல்லாம் பாதிக்கப்படுகின்றன என்ற ரீதியில் பேசினார். எடுத்துக்கொள்ளப் பட்ட திட்டங்கள் எல்லாம் நல்ல முறையில் நிறைவேறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்துகொண்டுதான் வருகிறோம்.

பல தொழில்களை இங்கே நிறுவுவதற்கு பல ஏற்பாடுகள் செய்வதைப் பற்றியும் அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டு வரப்படுவது பற்றியும் அதில் சர்க்கார் சில முதலீடுகள் போடுவதைப்பற்றியும், அப்படி முதலீடு போடுவது குற்றமாகக் கருதி கனம் கலியாணசுந்தரம் அவர்கள் பேசும்போது அந்த ரீதியில் பேசினார். தொழிலபிவிருத்தி அடிப்படையில் முதலில் நாம் என்ன செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் சில தொழில் களை நாமே ஆரம்பிக்க வேண்டும் என்று ஒரு முடிவு செய்யப்பட்டிருக்கிறது. சில தொழில்கள் அதாவது இரும்பு, உருக்கு இவை போன்ற அடிபடைத் தொழில்களை சர்க்காரே எடுத்து நடத்துவது என்றும் தொழில் கொள்கை ஒன்று ஏற்கெனவே வரையறுக்கப்பட்டிருக்கிறது. சில தொழில்கள் தனி யார் துறையில் தனிப்பட்டவர்களை ஈடுபடுத்த வேண்டும் என்றும் வரை யறுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய முயற்சிகளையும் எடுத்துக் கொண்டு வருகிறோம். அதற்கு வேண்டிய முயற்சிகளையும் நாம் எடுத்துத் தான் ஆக வேண்டும். அந்த முறையில் தான் தாரங்கதாரா கெமிக்கல் இண்டஸ்ட்ரி இங்கே வர வேண்டும் என்று முயற்சி செய்து அது வரு வதற்கும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். நாம் ஏற்கெனவே வகுத்துக் கொண்டிருக்கிற தொழில் கொள்கை அடிப்படையில் இப்படி சில தனிப்பட்டவர்கள் இங்கே தொழிலை நடத்துவதற்கு முன் வந்தால் அவர்களுக்கு உதவி அளிக்க வேண்டும் என்று ஒரு கொள்கை வைத்துக் கொண்டிருக்கிறோம். அதைப் போலவேதான் பேசிக் கெமிக்கல் இண்டஸ் ட்ரிஸ் இவைகளுக்கும் நாம் உதவி செய்து கொண்டு வருகிறோம். அதன் மூலம் நாம் சில உப தொழில்களை ஆரம்பிக்க முடியும் என்ற அடிப் படையில் அவைகளை ஆரம்பிக்க தனிப்பட்டவர்களுக்கு நாம் உதவி செய்து கொண்டு வருகிறோம். அப்படிப்பட்ட தொழில்களையும் இங்கே கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்து கொண்டு வருகிறோம். இந்த மாகாணத்தில் இல்லாத ஒருவர் இங்கே வந்து தொழில் ஒன்றை ஆரம்பிக்க ஏற்பாடு செய்கிறோம் என்று சொன்னால் அவர்களுக்கு நம்முடைய உதவி இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் அவர்களுக்கு உதவி செய்து வருகிறோம். அவர்கள் இங்கே வந்து கோடிக் கணக்கான ரூபாய் முதலீடு போடும் போது அதற்கு நாம் பத்து லட்சம் ரூபாயாவது முதலீடு போடலாம் என்கிற முறையில் நாம் உதவி செய்கிறோம். அவர்கள் இங்கே வந்து தொழிலை நடத்துவதற்காக அவர்களுக்கு எல்லா விதமான உதவியையும் கொடுக்க வேண்டும் என்ற முறையிலும், அப்படி பத்து லட்சம் ரூபாய் முதலீடு போடுகிறோம். இந்த பத்து லட்சம் ரூபாயும் முதலிலேயே கொடுக்காமல் முதலில் ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்து விட்டு பிற்பட்டு ஐந்து லட்சம் ரூபாய் கொடுக்கப்படுகிறது.

இன்னும் சில தொழில்களை அமைப்பதற்கு போதிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகிறது. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்பதற்காக பெரும் முயற்சிகளைச் செய்தோம். அதற்காக லைசென்சும் வழங்கப்பட்டு, அதற்கான யந்திரங்களும் வெளி நாட்டிலிருந்து வர வழைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அப்படி இன்றைக்கு தனிப்பட்டவர்கள் முன் வந்து இங்கே தொழில்களை ஆரம்பிக்க முன் வரும்போது அவர் களுடைய தொழிலில் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு அவர்களும் அதில் முதலீடு செய்வதற்கு முடியும் என்கிற அடிப்படையில் அந்த தனிப்பட்டவர் களுக்கு எல்லா விதமான உதவியும் அளிக்கப்பட்டு வருகிறது. அதைப் பற்றி பரிசீலனை செய்து நல்ல தொழில் வளம் நம் ராஜ்யத்தில் ஏற்பட வேண்டும் என்றும், அது லாபகரமாக நடைபெற வேண்டும் என்றும், அது நம் நாட்டிற்கு அவசியமான தொழில்தானா என்றும் இப்படிப்பட்ட முக்கியமானவைகளையெல்லாம் பரிசீலனை செய்து அதன் பிறகு அவர் களுக்கு உதவி அளிக்கப்படுகிறது. அந்தத் தொழிலை ஆரம்பிக்க சர்க்கார்

ஓரளவு உதவி செய்கிறது என்கிற முறையில் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்க உதவி செய்கிறோம். அப்படிப்பட்ட தொழில்கள் அடுத்த வருஷத்திலேயே உற்பத்தியாகக்கூடிய முறையில் இன்றைக்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது. இப்படி பல தொழில்கள் இங்கே ஏற்பட வேண்டும் என்ற கொள்கையில் சர்க்கார் அவைகளுக்கு ஊக்கம் காட்டுகிறது. இந்த அடிப்படையில் தனிப்பட்டவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதற்காக, தொழிலை இங்கே ஆரம்பிக்க வேண்டும் என்று முன் வருகிறவர்களுக்கு உதவி செய்வது சரியல்ல என்ற கருத்துப் படும்படி இங்கே சொல்வது ஆச்சர்யத்தை கொடுக்கிறது. இன்றைக்கு நாம் யோசிக்க வேண்டியது, இங்கே நமக்கு தொழில் வேண்டியது அவசியம்தானா என்று பார்க்க வேண்டும். இங்கே தொழில் வளர வேண்டுமென்ற அடிப்படையில் தனியார்களுக்கு உதவி செய்து அவர்கள் மூலம் இங்கே தொழில் வளர வேண்டும், அதன் மூலம் நம் நாட்டில் பல உப தொழில்கள் ஏற்பட வேண்டும் என்ற அடிப்படையில் அப்படிப்பட்டவர்களுக்கு இங்கே எல்லா விதமான உதவிகளையும் சௌகரியங்களையும் செய்து கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. அதற்காக ஊக்கமும் அளிக்க வேண்டியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு கொள்கையை வகுத்து அந்த அடிப்படையில் இப்பொழுது தனிப்பட்டவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட கொள்கை வகுத்துக் கொண்டதற்குப் பிறகு நாட்டில் புதிய தொழில் ஏற்பட வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டு வரும். அந்த அடிப்படையில் இப்பொழுது முக்கியமாக ரயான் தொழிற்சாலை ஒன்று வரப்போகிறது. அதற்கு தனியார் சுமார் $4\frac{1}{2}$ கோடி ரூபாய் முதலீடு செய்ய தயாராக இருக்கிறார்கள். அதற்கு உதவி செய்ய வேண்டுமென்ற பிரச்னை இப்பொழுது ஆலோசனையில் இருக்கிறது. இதற்கு எந்த அளவில் உதவி செய்ய வேண்டும், தொழிற்சாலையோ ஏற்படுத்த வேண்டியதாக இருக்கிறது, அது நல்ல முறையில் ஆரம்பிக்கப்பட வேண்டும், அதற்கு எப்படி உதவி செய்வது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். அதேபோல் அலுமினியம் தொழிற்சாலை ஏற்பட போகிறது. அதையும் தனியார் துறைக்கு விட்டிருக்கிறார்கள். அதுவும் நல்ல முறையில் கூடிய சீக்கிரத்தில் வரும். அவைகளுக்கும் உதவி செய்ய வேண்டும் என்று அதுவும் கொள்கை அடிப்படையில் இருக்கிறது. கனம் அங்கத்தினர்கள் எல்லோரும் இப்படிப்பட்ட தொழில்கள் நமக்கு அவசியம்தானா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். தொழில் அமைக்க வேண்டும் என்ற கொள்கை அடிப்படையில் இப்படிப்பட்ட தொழில்கள் எல்லாம் அவசியம் என்றும், அதற்கு சர்க்கார் உதவி அளிக்க வேண்டியதும் அவசியம் என்றும் முடிவு செய்திருக்கிறார்கள். தொழில் அபிவிருத்தி அடைய வேண்டுமென்ற அடிப்படையில் இவைகளுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. அப்படி இல்லாமல் தனியார்களுக்கு பணத்தைக் கொடுத்து விட்டார்கள், முதலாளிகளுக்கு சலுகைகள் காட்ட வேண்டும் என்ற அடிப்படையில் சர்க்கார் பணத்தை எடுத்து அவர்களுக்குக் கொடுத்து விட்டார்கள் என்று சொல்வது சரியல்ல. சர்க்கார் பணத்தை எடுத்து முதலாளிகளுக்கு வழங்கி விட்டார்கள் என்கிற முறையில் கம்யூனிஸ்ட் கட்சி பிரசாரம் செய்தால்—அது வேறு இடங்களில் அதாவது கம்யூனிஸ்ட் கட்சி கடை பிடிக்கும் கொள்கை அடிப்படையில் நடக்கும் இடங்களில் அது பொருந்தும், இங்கே அது பொருந்தாது—அது நம் தேசத்திற்கு பொருந்தாது. நம் தேசத்தில் அப்படிப்பட்ட கம்யூனிஸ்ட் கொள்கையை அனுசரிக்க முடியாது. வேறு இடங்களில் வேண்டுமானால் அப்படிப்பட்ட கொள்கையைக் கடைப் பிடிக்கலாம், அங்கே அந்தக் கொள்கையை வலியுறுத்தலாம். இப்படி சர்க்காருடைய பணத்தை எடுத்து முதலாளிகளுக்குக் கொடுத்து விட்டார்கள் என்றும், முதலாளிகளுக்கு சாதகமாக இந்தச் சர்க்கார் இருக்கிறார்கள் என்றும் பிரசாரம் செய்ய ஆரம்பித்தால் அவர்கள், தமிழ் நாட்டில் தொழில் வளருவதற்கு, துரோகம் செய்தவர்களாவார்கள் என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ளுகிறேன். இந்த முறையில்தான் ஆரூரான் மில்லிற்கு ஐந்து லட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது தனிப்பட்டவருக்கு சர்க்கரை ஆலையை அமைப்

பதற்கு ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்து உதவி அளிக்கப்பட்டிருக்கிறது. ஐந்து லட்ச ரூபாய் எந்த முறையில் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ரூபாயாக கொடுக்கப்படவில்லை. இன்றைக்கு வெளியிலேயிருந்து நமக்கு உரம் வருகிறது. அந்த உரத்தை வாங்குவதற்காக மத்திய சர்க்கார் கடனுகக் கொடுக்கிறது. அதையெல்லாம் விற்று, பணம் வந்த பிறகுதான் பணத்தைத் திருப்பிக் கொடுக்கிறோம். ஆகையால், இந்த பெரும் அளவிலே உரம் முழுவதும் கடனுகத்தான் விற்கப்படுகிறது. ' இந்த முறையிலே ஆரூரன் சர்க்கரை ஆலேயிலே நாங்கள் அதிகப்படியாக கரும்பு வைக்க வேண்டியிருக்கிறது. அதற்கு வேண்டிய உரத்திற்காக நாங்கள் ஐந்து லட்சம் ரூபாய் கொடுத்து, அந்த அளவு உரம் வாங்க நிதி வசதி இல்லே, ஆதலாலே இதற்கு கடன் வசதி வேண்டும்' என்று கேட்டார்கள். அதுவும் நீண்ட காலக் கடன் வசதி இல்லே. 1959-ம் வருஷம் மார்ச்சு மாதம் 31-ந் தேதிக்குள், இந்த வருஷக் கணக்கு தீருவதற்குள், பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்ற முறையிலே கொடுத்திருக்கிறோம். 1-10 p.m.

ஒன்றை நாம் யோசித்துப் பார்க்க வேண்டும். கரும்பு உற்பத்தி அதிகமாகிறதென்றால், தனிப்பட்டவர்களுக்கு அது லாபம் வருகிறதே என்ற முறையிலே நாம் பார்க்க முடியாது. இன்றைக்கு அதன் மூலமாக சர்க்கரை உற்பத்தி அதிகமாகிறதா என்று பார்க்கிறோமே தவிர, எந்த மில்லுக்கு அதிக லாபம், அதிக உற்பத்தி ஆகிறது என்று பார்க்கவில்லே. இன்றைக்கு தமிழ் நாட்டில் எந்த அளவு உற்பத்தி அதிகமாகிறதோ—அது எந்தத் துறையாக இருந்தாலும்—அந்த அளவு நாட்டினுடைய வளம் வளருகிறது. அந்த முறையிலே பார்க்கும்போது, இன்றைக்குத் தனிப்பட்டவர்களுடைய முயற்சியும் சமுதாயத்தின் வளர்ச்சிக்காகத்தான் இருக்கிறது என்ற முறையிலேதான் இன்றைக்கு அமைப்பு இருக்கிறது. அவர்கள் எந்த அளவு லாபம் பெறலாம், அந்த லாபத்திலே எவ்வளவு பகுதி சர்க்காருக்குப் போகும் என்பது எல்லாம் வேறு விஷயம். வரி விதிப்புக் கொள்கைப் பிரகாரம், அதற்கு வேண்டிய விதிகளே வகுத்திருக்கிருர்கள். அதிலும் நாம் இன்றைக்கு சர்க்கரையை வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டுமென்று சொல்கிறோம். வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டுமானால், சர்க்கரை இங்கு எந்த அளவு உற்பத்தி ஆகிறதோ, அந்த அளவு நம்முடைய ராஜ்யத்திற்கு நல்ல சலுகை கிடைத்து இருக்கிறது. இது ஏதோ ஆரூரன் சர்க்கரை ஆலேக்கு ஐந்து லட்சம் கொடுத்துவிட்டார்கள். ஆகையால், காங்கிரஸ் சர்க்கார் ஏதோ தனிப்பட்ட முதலாளிகளுக்குச் சலுகை கொடுக்கிறது என்று பேசுவார்களானால், இன்றைக்கு எந்த முறையிலே உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற அடிப்படையைத் தெரியாமல் பேசுகிறவர்கள்தான் அவ்வாறு பேசுவார்களே தவிர, உண்மையாக நாட்டின் வளம், தொழில் வளம் பெருக வேண்டும், சர்க்கரை போன்ற பல பொருள்கள் இங்கே பெரும் அளவு உற்பத்தியாக வேண்டும் என்று நினேக்கின்றவர்கள் அவ்வாறு பேச மாட்டார்கள். தூங்குகிறவர்களேத் தட்டி எழுப்பலாம், விழித்துக் கொண்டே இருப்பவர்களே எவ்வளவுதான் தட்டினுலும் எழுந்திருக்க மாட்டார்கள் அல்லவா ? அதுபோல், வேண்டுமென்றே குதர்க்கம் பேசுகிறவர்களுக்கு எவ்வளவுதான் எடுத்துச் சொன்னுலும், அவர்கள் வழியைத் திருத்திக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இல்லே. குறைகளேச் சொல்லிக்கொண்டேதான் இருப்பார்கள்.

இந்தச் சபையிலே நான் உறுதி கொடுக்க விரும்புகிறேன். தனிப்பட்டவர்களுக்குச் சலுகை கொடுக்கும் முறையிலே எந்த விதத்திலேயும் இந்த சர்க்கார் நடந்து கொள்ளாது, நம்முடைய நாட்டில் தொழில் பெருக வேண்டும், விவசாயம் பெருக வேண்டும், உற்பத்தி பெருக வேண்டும், என்பதற்காக என்ன என்ன முயற்சிகளே யெல்லாம் எடுக்க வேண்டுமோ, அந்த முயற்சிகளே யெல்லாம் நாங்கள் எடுத்தே தீருவோம். என்ன அபத்தமாக கம்யூனிஸ்டு கட்சி அங்கத்தினர்கள் சொன்னுலும்

அதற்காக நாங்கள் கவலைப்படவில்லை. நாட்டின் வளம் குறைந்தால் தான் அவர்களுடைய கட்சி வளம் பெருக முடியும் என்ற அடிப்படையிலே எப்போதும் பஞ்சமும், பட்டினியும், குறையும் இருந்து கொண்டிருந்தால் தான், கம்யூனிஸ்டுகளுக்கு மேடை கிடைக்கும் என்ற அடிப்படையிலே அவர்கள் பேசுகிறார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ ப. உ. சண்முகம் அவர்கள், கதர் உற்பத்தியைப் பற்றி குறிப்பிட்டு, அதைக் கம்யூனிடி டெவலப்மெண்டோடு சேர்க்க வேண்டுமா என்று தெரிவித்தார்கள். இன்றைக்கு, கம்யூனிடி டெவலப் மெண்ட் எடுத்துக் கொண்டிருப்பது, அங்கு இருக்கும் சமுதாயம் எல்லாத் துறைகளிலும் வளருவதற்கு ஒரு முழு திட்டத்தை அங்கு ஏற்பாடு செய் வதற்காகத்தான். ஆகையால், வேலை இல்லாமல் இருக்கின்றார்களே, அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு இந்த கதர் இயக்கம் மூலமாக ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். அதுவும் முக்கியமாக வறண்ட பிரதேசங்களில், தாராபுரம் போன்ற பிரதேசங்களில் இருக்கும் மக்கள் நூற்பு மூலமாகவே அவர்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்று நாம் பார்க்க முடியும். ஆகையால்தான், காதி அபிவிருத்திக்கும் கம்யூ னிட்டி டெவலப்மெண்டுக்கும் முரண்பாடு இல்லை. இரண்டும் ஒன்றியிருக் கிறது. இதிலே செலவு செய்யக்கூடிய பொருள் செலவு அல்ல. உற்பத்தி செய்வதற்காக பணம் உடனடியாக கொடுக்க வேண்டியிருக்கிறது. பணத் தைப் பின்னாலே திருப்பிக் கொடுப்பதற்குச் சபை அனுமதி வேண்டும். அந்தத் தொகையைக் கேட்டிருக்கிறது. அந்தத் தொகை முழுவதும் செலவாகப் போவது இல்லை. திரும்பி வராமல் போகக் கூடியது அல்ல. முதலீடு மாதிரி. விற்பனை ஏற்பட்டு அதன் மூலமாக வந்துவிடப் போகிறது. இதற்காக காதி கமிஷனும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் தொகையைத்தான் உபயோகப்படுத்துகிறார்கள். வரவு வரு வதற்கு இந்தச் சபையினுடைய அனுமதி அவசியம் இல்லை. வரவு வந்து தீரும். ஆனால், ஒரு காரியத்திற்காக கொடுப்பதாக இருந்தாலும் இந்தச் சபையின் அனுமதி பெற்றுத்தான் கொடுக்க வேண்டும்.

பாலி டெக்னிக் பற்றி சொல்லப்பட்டது. குடியாத்தத்தில் என் வர வில்லை, என்று கேட்கப்பட்டது. குடியாத்தத்திலும், மற்ற இடங்களில் எந்த முறையிலே சலுகை கொடுக்கப்படுகிறதோ, அந்த முறையிலேதான் கொடுப்பதாக ஒத்துக்கொண்டிருக்கிறோம். அது வரையறுக்கப்பட்ட கொள்கை. ஆனால், இதில் முக்கியமான கஷ்டம் என்னவென்றால், அதிலே முதலீடு போடுவதிலேகூட அதிக கஷ்டம் இல்லை. மூன்று அல்லது மூன்றரை லட்சம் கொடுத்தால், பாக்கித் தொகையை மத்திய சர்க்காரும் சென்னை ராஜ்ய சர்க்காரும் கொடுத்து விடுகிறார்கள். சிக்கனமாகச் செலவு செய்தால், குறைத்துச் செய்யலாம். ஆனால், வருஷா வருஷம் ஆகும் அன்றாட செலவுகளுக்கு ஏற்பாடு செய்வதுதான் பெரும் கஷ்டமாக இருக் கிறது. குறைந்தது 30 ஆயிரம் ரூபாய் வருஷமொன்றுக்கு செலவு செய்யத் தயாராக இருந்தால், ஒரு பாலி டெக்னிக் ஏற்பாடு செய்ய முடியும். மத்திய சர்க்காரிடமிருந்தும் ராஜ்ய சர்க்காரிடமிருந்தும் கிடைக்கக் கூடிய உதவி போக, தனிப்பட்டவர்கள் 30 ஆயிரம் ரூபாய் செலவு செய்தால் பாலி டெக்னிக் ஏற்பாடு செய்ய முடியும். குடியாத்தத்தில் $3\frac{1}{2}$ லட்ச ரூபாய் கொடுக்கத் தயாராய் இருந்தார்கள். ஆனால், வருஷமொன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் ஏற்பாடு செய்வதில் தாமதம் இருந்தது. அதற்கும் இப்பொழுது ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆகையால், இப்பொழுது குடி யாத்தத்தில் ஏற்பாடு செய்வதற்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது. கூடிய சீக்கிரத்தில் அதற்கு அனுமதியும் கிடைக்கும்.

SRI V. K. KOTHANDARAMAN : சபாநாயகர் அவர்களே, சொந்த விளக்கம் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அன்றாட நடைமுறைச் செலவுக்குக் கொடுக்கிறதாக ஸ்ரீ ராஜகோபால் நாயுடு அவர்கள்

ஒப்புக்கொண்டு சர்க்காருக்கு எழுதியிருக்கிறார்கள். அப்படி எழுதி பல மாதங்கள் ஆய்விட்டன. அம்மாதிரி அன்றுடச் செலவுக்காக 25 சத விகிதத்தை ஏற்றுக்கொள்வதாக ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிறார்கள். அப்படி ஒப்புக்கொண்டிருந்தும் நான்கு பாலி டெக்னிக்குகள் மற்ற ஜில்லாக்களுக்குப் போயிருக்கின்றன. ஆனால், பிற்பட்ட ஜில்லாவாகிய வடாற்காடு ஜில்லாவுக்கு ஒன்றுமே வரவில்லை யென்றால், எந்த அளவுக்கு அந்த ஜில்லா கவனிக்கப்பட்டிருக்கிறது என்பதை நாம் யோசிக்கவேண்டும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் சொல்வது வாஸ்தவம்தான். இரண்டு மாதங்களுக்கு முன்னமேயே 30 ஆயிரம் ரூபாய் வருஷமொன்றுக்கு ஏற்பாடு செய்வதாகத் தெரிவிக்கப் பட்டது. ஆனால், மற்றவர்களெல்லாம் ஒரு வருஷத்திற்கு முன்னமேயே ஏற்பாடு செய்து விண்ணப்பம் போட்டிருந்தார்கள். அந்த விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, தயாராக இருந்தன. அதனால் அந்த இடங்களில் ஆரம்பிப்பது முடிந்தது. நான் முன்பே குறிப்பிட்டேன். இப்பொழுது 30 ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், அது பரிசீலனையில் இருக்கிறது. இது யாருடைய குறையும் அல்ல. வருஷமொன்றுக்கு 30 ஆயிரம் ரூபாய் கொடுப்பதென்றால் யாருக்கும் கஷ்டமாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட கஷ்டத்தை நிவர்த்திக்க முன் வந்ததைப் பாராட்டுகிறேன். இப்பொழுது அதை ஏற்று அடுத்த வருஷத்திலாவது பாலி டெக்னிக் ஏற்பாடு செய்வதற்குச் சர்க்கார் எல்லா விதமான முயற்சிகளும் செய்துகொண்டு வருகிறது.

கன்யாகுமரி ஜில்லாவிலும் ஒரு பாலி டெக்னிக் ஏற்பாடு செய்ய முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதுபற்றி ஸ்ரீ ஜகன்னுதன் அவர்கள் கூறினார்கள். ஏதோ குறைகள் சொல்லலாம். மாணவர்கள் சேர்ந்து படிக்கிறார்கள். அதுவும் அவர்கள் நம் ராஜ்ய மாணவர்கள்தான். அந்த அளவு நமக்குத் திருப்தி கொடுக்க வேண்டும். இனிமேல் ஓரளவு தகுதியுள்ளவர்கள்தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று சில விதிகளை ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதைப்பற்றி இப்பொழுது பரிசீலனை இருந்து வருகிறது. ஆகவே, ஏதோ வேண்டியவர்களை எல்லாம்—தகுதி இருந்தாலும், தகுதி இல்லாவிட்டாலும் எடுத்துக் கொள்வது என்றில்லாமல் தகுதியுள்ளவர்கள் என்று நிர்ணயித்துவிட்டு, அவர்களுக்குள்ளே யாரை வேண்டுமானாலும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற விதி ஏற்பாடு செய்யலாமா என்ற யோசனை இருக்கிறது. அதற்கான விதிகளும் செய்ய வேண்டும்.

சப்ளிமெண்டரி எஸ்டிமேட் வந்திருக்கிறது. நாம் பட்ஜெட்டில் ஏற்பாடு செய்திருப்பதைவிட இன்னும் புதிய புதிய திட்டங்கள் நிறைவேற்றி அப்பொழுது ஏற்பட்டிருக்கும் அளவைவிட இன்னும் கொஞ்சம் அதிகமாக செலவு செய்வதற்காக இந்தப் புதிய திட்டங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த முறையிலே இன்னொரு சப்ளிமெண்டரி எஸ்டிமேட் மார்ச் மாதத்திலே வருவதற்கு இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எண்ணிக்கையிலே தவறு இருப்பதுபற்றி சொல்லப்பட்டது. முன்னூற்றிரண்டுக்கு 312 என்று போட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. நூற்றைம்பத்தொன்றை இரண்டால் பெருக்கினால் 302 வருகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். முன்னூற்று பன்னிரண்டு என்று குறிப்பிட்டிருந்தால், அது தவறு. அதைத் திருத்திக்கொண்டுவிடலாம்.

கடைசியாக, ஒரே ஒரு வார்த்தை, அரசியல் தியாகிகளுடைய குடும்பங்களுக்கு உத்தியோகம் கொடுப்பதுபற்றி குறிப்பிட விரும்புகிறேன். மான்யம் கொடுப்பது தவறு என்பது என்னுடைய கருத்து. யாராக இருந்தாலும், வேலை செய்வதற்கு வாய்ப்பு அளித்துவிட்டால், ஊதியம் கிடைத்துவிடும்.

வேலைக்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதுதான் சர்க்காருடைய கொள்கை. ஆகையால், தியாகிகள் என்று இருந்தாலும், அவர்களுடைய குடும்பமாக இருந்தாலும், அவர்களுக்கும் ஒரு தகுதி, ஒரு படிப்பு ஏற்படுத்தி, அதற்கான பயிற்சி கொடுத்து, அதற்குப் பிறகு ஏற்பாடு செய்யவேண்டும். பென்ஷன் போன்று கொடுத்துவிட முடியாது. கட்டபொம்மன் சந்ததியாருக்குக் கொடுத்துக் கொண்டிருப்பதைப்போல், பென்ஷன் கொடுப்பதற்குப் பதிலாக, நல்ல வேலை செய்யக்கூடிய தகுதி உள்ளவர்களாக இருக்கும்போது, அவர்களுக்கு வேலை செய்யக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பதுதான் அவர்களுக்கு நல்ல முறையிலே செய்வது. எந்தக் கட்சியில் இன்றைக்கு இருக்கிறார்கள் என்ற கணக்கு இல்லாமல், சுதந்திர இயக்கத்திலே யார் ஈடுபட்டிருந்தாலும், அவர்கள் இன்றைக்கு எந்தக் கட்சியில் இருந்தாலும், கட்சிப் பாகுபாடு இன்றி, அந்த அடிப்படையிலே கொடுக்கிறோமே அன்றி, எந்தக் கட்சியில் இருக்கிறார்கள் என்று பார்த்துக் கொடுப்பதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதிலே எந்த விதமான கொள்கை மாறுதலும் இல்லை. முன்பே வகுக்கப்பட்ட கொள்கை. செலவு இன்றைக்கு ஏற்படவில்லை. இந்தச் செலவு பற்றி முன்னமேயே வாதித்து விட்டோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மான்யத்தை இந்தச் சபை ஏற்றுக்கொள்ளும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தனி மான்யங்கள் ஒவ்வொன்றாக விவாதத்திற்கு வரும்போது, எதாவது ஒரு மான்யத்தை எடுத்து, அதை பொறுத்து விவாதம் நடத்தலாம் என்று கட்சித் தலைவர்கள் முன்பே தெரிவித்தார்கள். எந்த மான்யத்தை எடுத்துக்கொள்ளப்போகிறார்கள் என்று தெரிவித்தால், அதைப் பற்றி விவாதம் செய்து, இந்தச் சபை ஏக மனதாக இதற்கு வேண்டிய பணத்தை ஒதுக்கும் என்ற நம்பிக்கையோடு என்னுடைய பதிலை முடித்துக் கொள்கிறேன்.

DEPUTY SPEAKER : The House will now rise and meet again at 3 p.m.

The House then adjourned.

(After Lunch—3 p.m.)

(Mr. Speaker in the Chair.)

VI.—GOVERNMENT BILLS.

(1) THE MADRAS CULTIVATING TENANTS PROTECTION (AMENDMENT) BILL, 1958 (L.A. BILL NO. 26 OF 1958).

MR. SPEAKER : We shall now take up for consideration the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1958. If we finish the consideration of this Bill before 5 p.m., we will take up the Madras Plantations Agricultural Income-tax (Amendment) Bill, 1958.

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, I move—

"That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 26 of 1958) be taken into consideration".

17th September 1958] [Sri M. A. Manickavelu]

The life of the Madras Cultivating Tenants Protection Act is due to expire on the 26th September 1958. The question of giving relief to small landowners is now engaging the attention of the Government and it is proposed to undertake the necessary legislation very shortly. In the meantime, it has become necessary to extend the life of the Act for a short period. The Bill accordingly provides for the extension of the life of the Act for another year more.

Sir, there is no provision now in the Madras Cultivating Tenants Protection Act for the transfer of petitions filed under section 4 of the Act from the court of one Revenue Divisional Officer to that of another. There have been cases in which the same Revenue Divisional Officer who had passed orders under section 145, Criminal Procedure Code, had to enquire subsequently into petitions from cultivating tenants for restoration of possession in respect of the same land under section 4 of the Madras Cultivating Tenants Protection Act. In such cases, the parties affected by the proceedings under section 145, Criminal Procedure Code, can apprehend that the opinion formed already by the Revenue Divisional Officer will prejudicially affect their interest in the subsequent enquiry under the Act. It is true that such an apprehension is not unreasonable and that it will be proper to transfer such cases from the court of one Revenue Divisional Officer to that of another within the same district. It is proposed to empower the High Court to order *suo motu* or on representation of parties to transfer cases from the file of one Revenue Divisional Officer to that of another within the district. Clause 3 of the Bill accordingly provides for this.

I request the House to accept the motion.

MR. SPEAKER: Motion moved:

"That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 26 of 1958) be taken into consideration".

SRI N. K. PALANISAMI: Sir, I move—

"That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 26 of 1958) be referred to a Select Committee consisting of . . . . members of the Assembly".

SRI S. M. ANNAMALAI: I second the amendment.

MR. SPEAKER: The motion and the amendment are before the House for discussion.

SRI N. K. PALANISAMI: கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டுவந்திருக்கக் கூடிய மசோதாவானது, டிஸம்பர் மாதம் வரையில் தான் நீடிக்கப்பட்டிருக்கிறது. இதில் உள்ள குறைபாடுகளைப் பற்றி நாங்கள் ஏற்கெனவே இந்த சபையில் அடிக்கடி எடுத்துச் சொல்லியிருக்கிறோம். சர்க்காருக்கு வேண்டிய அவகாசம் இருந்தும்கூட அக்குறைபாடுகளை எல்லாம் நீக்கி சரியானபடி, விவசாயிகளுக்கு உண்மையிலே பாதுகாப்புக் கொடுக்கும்படியான முறையிலே இந்த மசோதாவைக் கொண்டு வந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். உதாரணமாக, விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கும்படியான முறையிலே இந்த சபையிலே பல யோசனைகள் சொல்லப்பட்டது. ஏற்கெனவே குத்தகைதாரர்கள் பாது

காப்புச் சட்டம் வந்திருந்தும் லட்சக் கணக்கான விவசாயிகள் இன்றும்கூட பூமியிலிருந்து வெளியேற்றப்படுகிறார்கள் என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும். அதுபோல் சிறு நில விவசாய பாதுகாப்புச் சட்டம் என்று நாம் விவசாயிகளுக்கு நன்மை செய்ய ஒரு சட்டம் கொண்டு வரும்போது இன்னும் லட்சக்கணக்கான விவசாயிகள் நிலங்களில் இருந்து வெளியேற்றப்படுவார்கள். வழக்கமாக, இருந்து வருவது, வாய் முறையில், வாய் ஒப்பந்தம் மூலந்தான் குத்தகைக்காரர்கள் பூமி குத்தகைக்கு கொடுத்து வந்தார்கள். குத்தகைக்கு உழுதவர்களை, பூமியில் இருந்து வெளியேற்றி விட்டார்கள் என்று ஆர். டி. ஓ. கோர்ட்டிற்கு போய் சொன்னால் மிராசுதார் சார்பில் மணியம், கர்ணம் போன்றவர்கள் சொல்கிறார்கள், இவர்கள் கூலிக்குத்தான் உழுதார்களே தவிர குத்தகைக்கு உழவில்லை என்று சொல்லி வாதாடப்படுகிறது. குத்தகைதார் பேரில் நியாயம் இருந்து அவர்களுக்கு சாதகமாக தீர்ப்பு வரும்போது, மிராசுதார் ஹைகோர்ட்டிற்குப் போகிறார்கள். அப்படி அதே சமயம், குத்தகை பாக்கி என்று முன்சீப் கோர்ட்டிலும் விவசாயிகள் மீது வழக்கு போடுகிறார்கள், மிராசுதார்கள். சாதாரண ஒரு விவசாயி எப்படி முன்சீப் கோர்ட்டிற்கும், ஹைகோர்ட்டிற்கும் சென்று வாதாட முடியும்? அவனிடம் அதற்கு வேண்டிய பணம் வேண்டாமா? மிராசுதார், ஒரு நூறு ரூபாய் கொடுத்து விடுகிறேன், நீபோய்விடு என்று சொன்னால் விவசாயி போய் விடுகிறான். ஒரு விவசாயி குத்தகைதாரரா இல்லையா என்று ஆர். டி. ஓ. கோர்ட்டில் இருந்தோ, அல்லது ஹைகோர்ட்டிலும் இருந்தோ முடிவு தெரியும்வரையில் குத்தகை பாக்கிக்கு முன்சீப் கோர்ட்டில் கேஸ் போடக் கூடாது என்று சட்டத்தை திருத்த வேண்டும். அது மட்டுமல்ல. கிராமங்களில் கர்ணம் இருக்கிறார், அவர் மாதா மாதம் ஒவ்வொரு பூமியிலும் இன்னின்ன விளைந்தது என்று ஒரு " க்ராப் ரிபோர்ட் " கொடுக்கிறார். அப்படி கொடுக்கும்போது குத்தகைதார் பேரை விட்டு விட்டு மிராசுதார் பேரில்தான் கணக்கு கொடுக்கிறார், இன்னார் பூமியில்தான் இன்னின்ன வெள்ளாமை விளைந்தது என்று. அதற்குப் பதிலாக, இன்னார்தான் குத்தகை பார்க்கிறார், அந்த பூமியில் இவ்வளவு விளைந்தது என்று கிராப் ரிபோர்ட் கொடுக்கும்படியான விதத்தில் மாறுதல் செய்யப்படவேண்டும். ஆர்.டி.ஓ. தான் இதில் அப்பலெட் ட்ரிப்யூனலாய் இருக்கிறார். அவர் பக்கத்தில் உள்ளவர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. ஆகவே அவரிடமிருந்து சரியான நியாயம் கிடைக்க வழியில்லை. ஆகவே, அப்பலெட் ட்ரிப்யூனல், டிஸ்டிரிக்ட் கலெக்டராக இருந்தால் மிகவும் நலமாக யிருக்கும். ஹைக் கோர்ட்டிற்கு எப்பொழுது வேண்டுமானாலும், எந்த நடவடிக்கையையும் ஒரு ஆர்.டி.ஓ. யிடமிருந்து அதே டிஸ்ட்ரிக்ட்டில் உள்ள இன்னொரு ஆர்.டி.ஓ. விடம் மாற்ற அதிகாரம் இருக்கிறது. ஆகவே, நான் சொல்வது என்னவென்றால், அப்பலெட் ட்ரிப்யூனல், டிஸ்ட்ரிக்ட் கலெக்டராக இருந்தால் ஹைக்கோர்ட்டிற்கு போகும் செலவை ஓரளவு குறைக்க முடியும் என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை ஒரு செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று எனது திருத்தத்தைப் பிரேரேபிக்கிறேன்.

*SRI S. M. ANNAMALAI : சட்டமன்ற தலைவர் அவர்களே, இந்த வாரம் பயிரிடுவோர் பாதுகாப்புச் சட்டத்தை நான் செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று சொல்வதற்குள்ள முக்கியமான காரணம், இச்சட்டம் பிற மாவட்டங்களில் இருக்கிறதா இல்லையா என்று கூட தெரியாமல் இருக்கிறது. குறிப்பாக இரண்டாவது க்ளாஸில்,"

" Cultivating tenant means a person who cultivates, by his own labour or by that of any other member of his family or by hired labour under his supervision and control, any land belonging to another under a tenancy agreement, express or implied and includes . . ."

என்று கொடுத்திருக்கிறது. அதில் " விவசாயிகள் " என்பவர் யார் என்று திட்டமாக இந்த செக்ஷனில் சொல்லவில்லை. அது, வழவழ கொழகொழ என்று இருக்கின்றது. திட்டமான கொள்கையை எந்தயிடத்திலும் சொல்லவில்லை. ஆகவே, இக்கொள்கையை வரையறுக்க வேண்டுமென்று

17th September 1958] [Sri S. M. Annamalai]

இதற்குமுன் இந்த சட்ட மன்றத்தில் ஏற்கெனவே நான் பலமுறை பேசியிருக்கிறேன். அதை வரையறுக்கவும், "டெனன்ஸி எக்ரிமெண்ட்" என்பது சாதாரண வாரந்தார், வாரக்காவல் என்று ஒன்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எக்ரிமெண்ட் என்பது பற்றி மிராசுதார்கள், "It is only a permission and not an agreement" என்று சொல்கிறார்கள். ஆகவே, "எக்ரிமென்ட்" என்றால் என்ன என்பதை இம்மசோதாவில் விளக்கமாக சொல்ல வேண்டும். அப்படி அதை விளக்கமாகச் சொன்னால்தான் அது நிலத்தில் பயிரிடும் வாரந்தார்களுக்கு சற்று பாதுகாப்பு அளிப்பதாக இருக்கும். ஆகவே "எக்ரிமெண்ட்" என்றால் என்ன என்பதை வரையறுக்க வேண்டும். சிறுநில சொந்தக்காரர்களின் பாதுகாப்பிற்காக வேண்டிய, அவர்களுக்கு எப்படி விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்பதைப்பற்றி பரிசீலனை செய்து சீக்கிரத்தில் இந்த மசோதாவை பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ளப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். வரவேற்பதோடு மட்டுமல்ல, இதை எவ்வளவு சீக்கிரத்தில் பரிசீலனை செய்வார்கள் என்று திட்டவட்டமாக சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல, இப்போது சர்க்கார் கொடுத்திருக்கின்ற திருத்தம் இன்னும் ஒரு ஆண்டுக்கு இதை நீட்டுவதாக இருக்கிறது. நானும் என் திருத்தத்தில் இதை 1959-ம் வருஷம் டிஸம்பர் மாதம் வரை இருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன். இதிலிருந்து என்னுடைய திருத்தம் ஒருவாறு ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதுகிறேன். மேலும் இப்போது ஆர்.டி.ஓ.க்களின் முன்பாக நடைபெறும் வழக்குகள் எல்லாம் மூன்று மாதத்திற்குள் தீர்ப்பு கிடைக்க வேண்டும் என்று இன்னொரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். இன்றைய நிலைமையில் வாரம் பயிரிடுபவன் ஒருவன் ஒரு வழக்கை கொடுத்தால் அதனுடைய தீர்ப்பு கிடைப்பதற்கு ஓராண்டு, ஈராண்டு காலமாகிறது. ஆகவே இந்த காலதாமதம் இல்லாமல் மூன்று மாதத்திற்குள், அந்த வழக்கு எப்படிப்பட்ட வழக்காக இருந்தாலும்கூட பரிசீலனை செய்து முடிவு சொல்ல வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறேன். ஆகவே இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் நான் கூறியிருப்பதன் காரணம், முக்கியமாக இதில் சொல்லப்பட்டிருக்கும் விவசாயி யார் என்பதை நிர்ணயிக்க வேண்டும், அதோடு நான் முன்னால் சொன்ன காரணங்களுக்காகவும் இதில் பல திருத்தங்கள் செய்யவேண்டியிருப்பதால் இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்லியிருப்பதுபோல் இதை கூடிய சீக்கிரத்தில், ஒரு காலவரையறைக்குள் பரிசீலனை செய்யலாம் என்று உறுதியளித்தால் சர்க்காருடைய திருத்தத்தை ஆதரிக்கலாம் என்பதையும் கூறிக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். 3-20 p.m.

SRI S. LAZAR: கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது விவசாய பாதுகாப்பு சட்டத்தை திருத்தும் நோக்கத்துடன் அரசாங்கம் கொண்டு வந்திருக்கும் திருத்தத்தை ஆதரித்து ஒரு சில கருத்துக்களை சொல்ல ஆசைப்படுகிறேன். அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த திருத்தமானது, ஏற்கெனவே இருந்துவரக்கூடிய இந்த சட்டத்தை இன்னும் சில காலத்திற்கு நீடிப்பதோடுகூட இதில் நடைமுறையில் வரக்கூடிய ஒரு கஷ்டத்தை ஹைக்கோர்ட்டு எடுத்துக் காண்பிப்பதின் மூலம் அதை மாற்றவேண்டும் என்ற நோக்கத்தோடும் இந்த திருத்தம் கொண்டு வந்திருப்பதால் இதை நான் பாராட்டுகின்றேன். ஆனால், இந்த சட்டத்தில் மிக முக்கியமான சில குறைகள் இருக்கின்றன. அவைகளை நீக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். முதலாவதாக இப்போது இருக்கக்கூடிய சட்டத்திலே, விவசாயி ஒருவன் உழுது கொண்டே வருவானேயானால், அவனை நிலத்திலிருந்து அப்புறப்படுத்திக் கொள்ள வேண்டுமேயானால், புதிதாக கொண்டு வருபவனுடைய நிலைமை என்ன என்பதைப் பற்றி இதுவரை தெளிவாக சொல்லப்படவில்லை. அது காரணமாக நாட்டில் பல கஷ்டங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. ராமசாமி என்று ஒருவன் உழுது கொண்டிருக்கின்றான் என்றால் நாளையதினம் குப்புசாமி என்று

ஒருவன் புதிதாக வந்துவிடுகின்ற காரணத்தால் நிலத்தின் சொந்தக் காரன் எப்படி அவனை அப்புறப்படுத்துவது என்பதைப்பற்றி குறிப்பாக சொல்ல வில்லே. சட்டத்தில் இருப்பது implied or expressed என்றிருக்கிறது. ஆனால் implied or express under whom என்று குறிப் பிடப்படவில்லை. இதனால் பல தொல்லைகளும் கஷ்டங்களும் நாட்டில் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்தில் நிலக்காரர் சட்டத்திலே இருக்கின்ற சில காரணங்களுக்காக வெளியேற்றவேண்டுமென்று நினைத் தால் அவரால் வெளியேற்ற முடிவதில்லை. அதே நேரத்தில் குத்தகைக்கு உழுதுகொண்டிருக்கக்கூடியவனுக்கு சட்டத்தின்படி சில பாதுகாப்புக் கிடைக்கவேண்டும் என்று நீதி ஸ்தலத்தில் வந்து கேட்கின்ற சமயத்தில் அவனுக்கும் நீதி கிடைப்பதற்கு வழியில்லாமல் இருக்கிறது. ஆகவே இந்த பெருங்குறையை மாற்றவேண்டுமென்று திருத்தம் கொண்டுவந் திருந்த போதிலும் கூட Specific lessees யார் என்பதை குறிப்பிட்டு சொல்லியாகவேண்டும். அடுத்தபடியாக இப்போது இந்த சட்டம் அமுலில் இருக்கின்ற காரணத்தால் வாழை, கொடிக்கால் விவசாயிகள் பல கஷ்டங் களை அனுபவிக்கிறார்கள். இன்றையதினம் கொடிக்கால் விவசாயம் செய்யும் ஒரு ஏக்கர் நிலத்தில் 25 நபர்கள் வேலை செய்கிறார்கள். இந்த கொடிக்கால் விவசாயம் குறைந்தது மூன்று வருடங்களாவது நடக் கும். இவ்விதம் மூன்று வருடங்கள் கழிந்த பிறகு அதில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிக்கு வெளியே வந்த உடன் ஒரு நிலம் பயிரிடுவ தற்கு கொடுத்தாக வேண்டும். இப்போது இருக்கின்ற சட்டத்தின்படி அவர்களுக்கு விசேஷமான பாதுகாப்பு ஒன்றுமில்லை. குறிப்பாக நம் மாகாணத்தில் லட்சக்கணக்கானவர்கள் இந்த கொடிக்கால் விவசா யத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் குறைகளை நிவர்த் திக்கவேண்டும் என்று அரசாங்கத்திற்கு பல மனுக்கள் கொடுத்திருக் கிறார்கள். குறிப்பாக லால்குடி பக்கத்திலுள்ளவர்கள் அரசாங்கத்திற்கு மனு கொடுத்திருக்கின்றார்கள் என்று அறிகிறேன். இப்போது இருக்கின்ற சட்டத்தின்படி வாழை கொடிக்கால் விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்க முடியாது என்றிருந்த போதிலும்கூட இந்த விவசாயம் பெருவாரியாக இருக்கும் சில இடங்களை மாத்திரம் தனியாக தெரிந்தெடுத்து Specifially setting apart for these purposes அந்த இடங்களை ஒதுக்கி வைத்து அந்த இடங்களிலுள்ள விவசாயிகளுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டியது மிக அவசியம் என்பதை வற்புறுத்தி சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கு அடுத்தபடியாக இப்போது கொண்டு வந் திருக்கின்ற திருத்தமானது மிக அவசரமும் அவசியமானதும் கூட என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். வெகு நாட்களாக சிறு நில மிராசுதார்கள், அதாவது இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர், ஐந்து ஏக்கர் என்று வைத்திருப்பவர்கள், அவர்களுடைய நிலங்களை தாங் களே விவசாயம் செய்யவேண்டும் என்றுள்ள ஆசை ஏற்படுமானால், அந்த அடிப்படையான உரிமையை கொடுப்பதற்கு இதிலிருந்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்று வற்புறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்த சிறு நில மிராசுதார்கள் தாங்கள் எத்தனை ஏக்கர் நிலம் வைத்திருந் தாலும், அதாவது நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் வைத்திருந்தாலும் தனக்கென்று ஐந்து ஏக்கர் விவசாயம் செய்யவேண்டும் என்று நினைப்பா ரானால் அவருக்கு அதை எடுத்துக்கொள்வதற்கு, அதை அவருடைய அடிப்படை உரிமை என்ற காரணத்தின் பேரில் கொடுக்கவேண்டும். சொத்துக்கு உரிமையாளர் என்கிற முறையில் அதை இஷ்டப்படுத்திக் கொள்ள உரிமை உண்டு. பாதுகாப்பு என்ற எண்ணத்தின் பேரில் மற்ற வர்களுடைய நிலத்தில் விவசாயம் செய்வதற்கு உரிமை கொடுப்பதற்கு சட்டம் கொண்டுவருவது வரவேற்கத்தக்கதுதான். இருப்பினும் நிலச் சொந்தக்காரரின் அடிப்படை உரிமை என்றளவில் அவருக்கு ஒருசில ஏக்கர்கள் அதாவது ஐந்து ஏக்கர் வரை கொடுக்க வேண்டியது மிக மிக அவசியம் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னும் ஒரு சில இடங்களில், அதிலும் குறிப்பாக சில தாலுகாகளில் இது சம்பந்தமான வழக்குகள் கோர்டில் வருகின்ற சமயத்தில், அதன் பேரில் வாதாடுகின்ற நேரத்தில் இதில் சில டெக்னிகல் பாயிண்ட்ஸ் இல்லை என்ற காரணத்தின் பேரில் அங்கு கொடுக்கப்படும் சாட்சியத்தை ஒப்புக்கொள்வதில்லை.

இதற்காக யார், யார் எந்தெந்த நிலங்களில் உழுது சாகுபடி செய்கிறார்கள் என்கிற ஒரு தனிப்பட்ட ரெஜிஸ்டரை அரசாங்கம் வைத்துக்கொள்ளுமானால் இது போன்ற ஒரு கஷ்டம் ஏற்படாது, எந்த நோக்கத்தோடு அரசாங்கம் இந்த சட்டம் கொண்டு வந்ததோ அதை நிறைவேற்றுவதாக இருக்கும் என்பதை சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக பாதுகாப்பு உரிமை கொடுக்கவேண்டும் என்கிற காரணத்திற்காக கோர்ட்டில் சட்ட ரீதியாக மனுக்கள் கொடுக்கும்போது, ஒரு சில இடங்களில் சரியான அளவுக்கு உத்தியோகஸ்தர்கள் இல்லாத காரணத்தினாலும், சில இடங்களில் உத்தியோகஸ்தர்கள் இருந்தும் கூட அதிகப்படியான கேஸ்கள் பல சூழ்நிலையின் காரணமாக பலமாதங்களாக ஒத்திப் போடப்படுகிறது. இதன் காரணமாக அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பரிகாரம் கிடைப்பதற்கு காலதாமதம் ஆகிறது. சட்டரீதியாக ஒருவனுக்கு நீதி கிடைக்க வேண்டிய சமயத்தில் கிடைக்கவில்லை என்றால் நீதி கிடைக்காததற்கு சமம் என்று சொல்லுவது போல் காலதாமதம் ஆவதால் பல கஷ்டங்களும் ஏற்படுகிறது. ஆகவே அவர்களுக்கு சீக்கிரமாக பரிகாரம் ஏற்படுவதற்கு தகுந்த முறையில் அவர்களுக்கு நீதி கிடைப்பதற்கு வேண்டிய வழக்குகளை சீக்கிரமாக பைசல் செய்ய வேண்டும். இதற்கு பதில் சொல்லுகின்ற முறையில் அல்லது, முடிவு சொல்லுவதற்கு, ஒரு காலவரையறையை நிர்ணயித்து இது போன்ற வழக்குகளுக்கு முடிவு சொல்லவேண்டும் என்ற நல்லதொரு திருத்தத்தை கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

* **Sri R. SRINIVASA IYER**: சபாநாயகர் அவர்களே, சர்க்காரால் கொண்டுவரப்பட்ட இந்தத் திருத்த மசோதாவை ஆதரித்தும், இதை செலக்ட் கமிட்டிக்கு விடவேண்டுமென்று கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையை எதிர்த்தும் பேச விரும்புகிறேன். 3-20 p.m.

இரண்டு விஷயங்களுக்காக இந்தத் திருத்த மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு செப்டம்பர் 17-ம் தேதி. 26-ம் தேதியோடு இப்போதிருக்கும் 1955-ம் வருஷத்திய 25-வது சட்டத்தின் காலவரை முடிவாகப் போகிறது. இடையிலே உள்ளது எட்டு நாட்கள். இந்த எட்டு நாட்களுக்குள், திருத்தம் சம்பந்தப்படாத பல விஷயங்களைப் பற்றி ஆராய்ந்து திருத்தங்கள் கொண்டுவரவோ, அல்லது இந்தச் சட்டத்திலேயுள்ள குறைகள் 3 வருஷங்களாக இருந்த போதிலும், அதைப்பற்றி ஆராய்ந்து பார்க்க இப்போது செலக்ட் கமிட்டிக்கு இந்த மசோதாவை விட வேண்டும் என்று சொல்வது—இதற்குத் திருத்தங்கள் கொண்டு வராமல் இருந்த போதிலும்—இந்தக் காலத்துடனாவது, இப்பொழுதாவது இந்தச் சட்டத்தை நீடிக்கவேண்டுமென்று அரசாங்கம் முடிவு செய்து கொண்டு வந்திருக்கும்போது, இந்தச் சட்டத்தை கால தாமதப்படுத்த வேண்டுமென்று பல குறைகளைச் சொல்லிப் பேசுவது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.

தவிர, முதலில் மூன்று மாதங்களுக்கு மட்டிலும் நீடிக்கவேண்டுமென்று மசோதா கொண்டு வந்து, இப்போது சர்க்கார் திருத்தத்தில் ஒரு வருஷத்திற்கு நீடிக்க வேண்டுமென்று இருக்கிறது. ஆகவே, 1958-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 26-ந் தேதியிலிருந்து 1959-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 26-ந் தேதி வரையில் இந்தச் சட்டம் நீடித்திருக்கும் என்று எதிர்பார்க்கிறேன்.

சீரான முறையில் முடிவு காணமுடியவில்லை, அதனால் ஹைக்கோர்ட்டுக்குப் போகிறார்கள் என்று சொல்லப்பட்டது. ஆனால் அதற்கு புள்ளி விவரம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. சென்னை ராஜதானியில், நமது மாகாணத்தில் குத்தகைக்காரர்கள் எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள், வார சாகுபடியாளர்கள் எவ்வளவு, ஒப்பந்தம் மூலமாகவோ, வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ, சாகுபடி செய்கிறவர்கள் எத்தனை லட்சம்பேர், அப்புறப்படுத்தப்பட்டவர்கள் எத்தனை பேர், அப்புறப்படுத்தப்பட்டாலும், அதை ஆட்சேபித்து மனுக் கொடுத்தவர்கள் எத்தனை பேர், எத்தனை பேருக்கு சாதகமாகத் தீர்ப்பு கொடுக்கப்பட்டது, எத்தனை பேர்களுடைய மனுக்கள் தள்ளப்பட்டது, என்று பார்த்தால் ஒரு சதவீதம் இருக்கலாம்—அதுவும் இருக்குமோ, இருக்காதோ என்பது சந்தேகம்.

இன்றைக்கு நான் இதைச் சொல்லும்போது சாகுபடியாளர்களுக்கு விரோத மாகப் பேசுகிறதாகவோ, அல்லது மிராசுதார்களுக்கு சாதகமாகப் பேசுகிறதாகவோ நினைக்கவேண்டாம். இந்தச் சட்டசபைக்கு வந்து பேசியதில் எப்போதும் சாகுப்படியாளர்களை ஆதரித்தே பேசியவன் நான். சாகுபடியாளர்களுக்கு நிச்சயமாக பலன் கிடைக்கவேண்டும் என்று அபிப்பிராயப்பட்டவர்கள், எந்தெந்த முறையில் சட்டம் தவறுத லாக நடத்தப்படுகிறது, எந்த முறையில் பலன் அளித்திருக்கிறது என்பதைப்பற்றி இந்த சபையிலும் பேசியிருக்கிறார்கள், முந்தின சட்ட சபையிலும் பேசியிருக்கிறார்கள். இதைப்பற்றி விமோசனம் இல்லை. நான் ஒரு விஷயம் சொல்ல ஆசைப்படுகிறேன். வாய்மொழியாக குத்தகை என்று சொல்லி ஒருவன் மனுக்கொடுப்பானானால், இல்லை என்று லேண்ட்-ஹோல்டர் ஆட்சேபித்து மனுக்கொடுத்து ஹைக்கோர்ட்டுக்கு கொண்டு போகப்படுகிறது. இது உண்மை. வாய்மொழியாக சாகுபடி செய்கிறேன் என்று ஒப்பந்தம் இருக்கிறது என்று சொல்லி, நிலச்சுவாந்தாருடைய நிலத்தில் ஆக்கிரமித்து சாகுபடி செய்கிறான். அந்த மாதிரி கேஸ்கள் கோர்ட்டில் எத்தனை வந்திருக்கிறது என்பதை யார் ஆராய்ந்து பார்த்தார் கள். அந்த மாதிரி கேஸ்களில் லேண்ட்-ஹோல்டர்கள் ஹைக்கோர்ட்டுக்குப் போகிறார்கள். ஏனென்றால் வேறு ஒரு கோர்ட்டுக்கும் போவதற்கு, அப் பீல் செய்வதற்கு விதி ஏற்படுத்தப்படவில்லை. ஆகையால் கோர்ட்டில் சரியான தீர்மானம் ஏற்படவில்லை என்று குடியானவனோ, அல்லது நிலச் சுவாந்தாரோ எண்ணினால் அப்பீல் செய்ய மேலே ஒரு இடம் இருப்பதால் போகிறார்கள்.

இரண்டாவதாக, "அக்ரிமெண்ட்" என்றால் அது சரியானபடி இதில் விவரிக்கப்படவில்லை, இந்த டெபெனிஷனில் சொல்லப்படவில்லை என்றெல் லாம் விவாதிக்கப்பட்டது. "அக்ரிமெண்ட்" என்றால் உலகம் அறிந்த விஷயம். வாய்மொழியாகவோ, அல்லது எழுத்து மூலமாகவோ பிரதிப் பிரயோஜனத்திற்காக செய்து கொள்ளப்படும் ஒப்பந்தத்திற்கு "அக்ரி மெண்ட்" என்று பெயர். எழுத்து மூலமாக ஒரு அக்ரிமெண்ட் இருந் தால் நல்ல முறையில் ருசுப்படுத்தக் கூடியதாக இருக்கும். இல்லையென் றால், இரு தரப்பினரும் பொய் சொல்லுவதாக இருக்கக்கூடியது. இதில் யார் பொய் சொல்லுகிறார்கள் என்று எப்படிச் சொல்ல முடியும். . .

ஸ்ரீ எ. கோவிந்தசாமி எழுந்தார்—

Sri R. SRINIVASA IYER: (Is he rising on a point of order, Sir ? Two hon. Members should not stand at the same time.)

Mr. SPEAKER: நான் எத்தனையோ தடவைகள் சொல்லியிருக் கிறேன். கனம் அங்கத்தினர் மறந்து போய்விட்டாற்போல இருக்கிறது. கனம் அங்கத்தினர் "பொய்" என்ற வார்த்தையை உபயோகித்ததற்காக எழுந்திருக்கிறார் என்று நினைக்கிறேன். அதில் பாயிண்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை. கனம் அங்கத்தினர் சீனிவாச அய்யர் தொடர்ந்து பேசலாம்.

Sri R. SRINIVASA IYER: அதனால், இந்தச் சட்டம் வழ-வழா என் றிருக்கிறது, கொழ-கொழா என்றிருக்கிறது, ஒன்றுமே அர்த்தம் புரியவில்லை என்றெல்லாம் சொல்லப்பட்டது. அநேக விதமாக சாகுபடியாளரையும், குத்தகைதாரர்களையும் பாதிக்கிற முறையில் ஏற்பட்டு நடந்து வருகிறது என்றும் சொல்லப்பட்டது. எங்கேயோ ஒரு இடத்தில் நல்ல மிராசுதார் கள் இல்லாமல், ஜமீந்தார்கள் போல கடுமையாக நடத்தியிருக்கலாம். நான்கு, ஐந்து பேர்கள் கார்கோடன்களாக இருந்திருக்கலாம். இந்த சட்டங்கள் யெல்லாம் அதனால்தான் வந்திருக்கிறது. உலக மனப்பான் மையை உத்தேசித்து ஒற்றுமையாகப் போயிருந்தால் இந்தச் சட்டம், போலீஸ், நடவடிக்கை, அப்பீல், குற்றச்சாட்டுகள் எல்லாம் வந்திருக்காது. போலீஸ்காரர்கள் நிலச்சுவாந்தார்களுக்குச் சாதகமாக நடந்து வருகிறார் கள் என்ற குற்றச்சாட்டுகளுக்கு இடமில்லாமல் போயிருக்கும். இரண் டொருவர் செய்கிறதற்காக, எல்லா லேண்ட்-ஹோல்டர்களும் கொடுந்தன் மைப் பண்ணுகிறார்கள், சாகுபடியாளர்களுக்கு கெடுதல் செய்கிறார்கள், அப்புறப்படுத்துகிறார்கள் என்று சொல்வதற்கில்லை. அந்த வகையில்

17th September 1958] [Sri R. Srinivasa Iyer]

இந்த அக்ரிமெண்ட் "இம்ப்ளெய்ட் ஆர் எக்ஸ்பிரஸ்" சரியானபடி அர்த்தம் புரியவில்லை என்றால் அதற்கு ஒரு தனி மசோதாவைக் கொண்டு வரலாம். சர்க்காரிலே அப்படிப்பட்ட யோசனை செய்திருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை.

இரண்டு காரணங்களுக்காக இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒன்று டிரான்ஸ்பர் ஆப் பவர். நான் ஒரு சிறு திருத்தம் கொடுத்திருக்கிறேன். குடியானவர்களுக்கு என்று பேசுகிறவர்கள் கூட, ஹைகோர்ட்டுக்கு ரிவிஷன் பெடிஷன் கொடுப்பதற்கு பதிலாக, டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கு விடவேண்டுமென்று சொன்னார்கள். ஆக, இதிலேயும் டிலேதான் ஆகும். அப்படியும் நான்கு, ஐந்து, ஆறு மாதங்கள் ஆகும். எந்தத் தீர்ப்பானாலும், சர்க்காரிலே எந்த நீதிபதியானாலும் தப்புத் தீர்ப்பு எழுத பாத்தியம் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதைத் திருத்தம் செய்யும் முறையில் அதிகாரம் இருக்கவேண்டும். ஹைகோர்ட் என்றால், அவர்கள் உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள், பாகுபாடு இல்லாமல் செய்வார்கள் என்று ரிவிஷன் பவர் கொடுக்கப்பட்டிருக்கிறது. டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கு பதிலாக டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் இருக்கலாம் என்று நான் சொல்லியிருக்கிறேன். தவிர, குடியானவர்கள் விஷயத்தில் ஒரு குடியானவன் திருநெல்வேலியில் இருப்பவனாக இருக்கலாம், அவன் ஹைகோர்ட்டுக்கு வரவேண்டுமென்றால், சென்னைக்கு வரவேண்டும். ரிவிஷன் பெடிஷன் செலவு, தகராறு சம்பந்தப்பட்ட தொகை எவ்வளவோ அதைப்போல் ஐந்து, ஆறு பங்கு ஆகிவிடக் கூடும். ஆகையால் தான் ஜில்லா கோர்ட் ஆக இருக்க வேண்டும் என்று நான் ஒரு திருத்தம் கொடுத்திருக்கிறேன். அந்த முறையிலே, இன்னொரு புரொவிஷன் டிரான்ஸ்பர் பெடிஷன். கீழ் கோர்ட்டில் நியாயம் கிடைக்கவில்லையென்றால் ஹைகோர்ட்டுக்கு பெடிஷன் கொடுக்கவேண்டும். அந்தத் தீர்ப்பை லேண்ட்-ஹோல்டர் எதிர்த்தாலும் இங்கு வரவேண்டும், குடியானவனும் இங்கு வரவேண்டும். குடியானவனுக்கு சௌகரியமாக இருக்கும் என்று என்னுடைய திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். ஸ்டேட்மெண்ட் ஆப் ஆப்ஜெக்ட்ஸ் அண்டு ரீஸன்ஸில் சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு நிவாரணம் அளிப்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பேர் ரெண்ட் ஆக்ட், கல்டிவேடிங் டெனெண்ட்ஸ் ஆக்ட் வந்ததிலிருந்து சிறு நிலச் சொந்தக்காரர்களுக்கு நிவாரணம் அளிக்கவேண்டுமென்று எல்லாக் கட்சிகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. அது இன்னும் ஆலோசனையில் இருக்கிறது. தஞ்சாவூர் டெனெண்ட்ஸ் அண்டு பண்ணையாள் ப்ரொடெக்ஷன் ஆக்டில் 1 வேலி நிலம், அதாவது 6.66 எக்கர், சொந்த சாகுபடிக்கு வைத்துக் கொள்ளலாம் என்று புரொவிஷன் இருக்கிறது. அந்த ஆக்ட் இப்போது இரண்டொரு ஜில்லாவில்தான் அமுலில் இருக்கிறது. அதை பாக்கி ஜில்லாக்களுக்கும் எக்ஸ்டெண்ட் பண்ணினால் எல்லாக் கட்சிக்காரர்களும் ஒப்புக்கொள்வார்கள் என்று எண்ணுகிறேன். இதற்காக ஒரு வருஷ காலம் நீடிக்கவேண்டிய அவசியம் இல்லை. அதையும் இதிலே ஒன்று அல்லது இரண்டு பிரிவுகள் போட்டு சேர்த்திருக்கலாம். இதற்குப் பெரிய ஆலோசனை தேவையில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. அதையும் சீக்கிரத்திலே கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். 3-30 p.m.

அடுத்தபடியாக, இந்த 60 : 40 சட்டம் வந்த பிறகு எல்லாம் சுமுகமாகத்தான் நடந்து வருகிறது என்று நினைக்கிறேன். நாற்பது வாங்கிக்கொண்டிருந்த குடியானவனுடைய வாரம் அறுபது ஆனபிறகு நிலச்சுவான்தாருக்கும், குடியானவனுக்கும், எந்தவிதமான தகராறும் இல்லை. 1952-க்கு முன்னால் தஞ்சை ஜில்லாவிலும், மற்ற ஜில்லாக்களிலும் இருந்தது போல கலகங்களையோ, குற்றச்சாட்டுகளையோ நாம் பார்க்கவில்லை. நிலச்சுவான்தாரும் சரி, குடியானவனும் சரி, இரண்டு பேரும் திருப்தியாகத்தான் இருந்து வருகிறார்கள். ஆனால் உத்தேசித்திருக்கிற ஆறு எக்கர் சொச்சம் ஜாஸ்தி என்று தோன்றினால், ஐந்து எக்கராகவாவது வைத்துக்கொள்ளலாம். நிறைவேற்றப்படும் சட்டங்கள் எல்லாம் உணவு

உற்பத்தியை அதிகரிக்குமா, அல்லது உற்பத்தியைக் குறைக்குமா என்ற விஷயத்தில் மேலிடத்திலிருந்து கீழிடம் வரை—மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்து வருகின்றன என்பதை நாம் பார்க்கிறோம். (குறுக்கீடு : உங்களுடைய அபிப்பிராயம் என்ன ?) நான் வேறு சமயத்திலே இதைப் பற்றி பேசுகிறேன். புள்ளி விவரங்களுடன் பேசுவதற்கு இதுவரையிலும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இனிமேல் கிடைத்தால் பேசுகிறேன். ஆகவே சிறிய நிலச்சுவான்தார்களுக்கு பரிகாரம் அளிக்கவேண்டியது அவசியம். சர்க்காரும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தப் பிரச்னை ஆலோசனையில் இருந்து வருகிறது என்று சொல்லுகிறார்கள். இதையும் இந்த மசோதாவிலேயே சேர்த்துக்கொண்டு வந்திருக்கலாம். ஒரு சிறிய திருத்தத்திற்காக இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை. ஒரு வருஷத்திற்கு இதை நீடிக்கவேண்டும் என்று தோன்றவில்லை. ஆனால் மூன்று வருஷமாக இருந்தது 'இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடிப்பதைப் பற்றி ஒன்றும் இல்லை. இதற்கிடையில் அடுத்த மகசூல் சாகுபடி ஆரம்பமாவதற்கு முன்னால், அதாவது 1959. வருஷம் ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் இந்தச் சிறு நிலச்சுவான்தார்களுக்கு அளிக்கவேண்டிய பரிகாரத்தைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

SRI M. KALYANASUNDARAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவை இவ்வளவு காலம் தாழ்த்திக் கொண்டுவரவேண்டிய அவசியம் என்ன என்று எனக்குப் புரியவில்லை. அசல் சட்டம் காலாவதியாவதற்கு இன்னும் எட்டு தினங்கள் இருக்கும்பொழுதுதான் இது வெளியிடப்படுகிறது. ஒன்று, "நமக்குத்தான் மெஜாரிடி இருக்கிறதே, எப்பொழுது கொண்டுவந்தால் என்ன" என்று அமைச்சர் நினைத்திருக்கலாம். அல்லது டிபார்ட்மெண்ட் தூங்கிக்கொண்டிருக்க வேண்டும். இதற்கு யார் பொறுப்பாளி என்று தெரியவில்லை. சிறிய திருத்தம்தான் என்று சொன்னாலும், போதுமான அவகாசம் கொடுத்திருந்தால் இந்த சபையிலுள்ள அங்கத்தினர்கள் தமது கருத்துக்களை எடுத்துச் சொல்ல போதுமான சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். நியாயம் என்று ஒப்புக்கொள்வதையாவது பரிசீலனை செய்வதற்கு அவகாசம் ஏற்பட்டிருக்கும். இப்பொழுது எதிர்கட்சியினருக்கும் ஒரு சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. பல திருத்தங்கள் கொண்டு வரவேண்டியிருந்தும், இந்த மசோதா காலாவதியாகி விடக்கூடாதே என்ற சங்கடமான நிலையில் இது எப்படியாவது நிறைவேற்றப்படட்டும் என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, சர்க்கார் வேண்டுமென்றே இப்படிச் செய்திருக்கிறார்களோ என்றுதான் சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் "இந்தத் திருத்தங்களுக்கு எல்லாம் அவசியம் இருக்கிறது, எதிர்கட்சியினர் வேறு யாரும் கொண்டுவரவில்லை, சாகுபடியாளர்களிடத்தில் அக்கரை உள்ளவர்களே கொண்டுவரவில்லை" என்று சில அங்கத்தினர்களை அவர் சுட்டிக்காட்டினார். இதற்கு முன்பு இந்த சபையிலே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இங்கே பேசப்பட்ட விஷயத்தை அங்கத்தினர் கவனத்திருந்தால் இந்தக் குற்றச்சாட்டை சொல்லியிருக்கமாட்டார். ஆகவே கவனிக்காமல் சொல்லக்கூடிய குற்றச்சாட்டு அல்ல இது. தெரிந்து கொண்டேதான் இந்தக் குற்றச்சாட்டை சொல்லுகிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல தடவைகள் இந்த சபையில் ஆதாரங்களோடு, எப்படி இந்த சட்டம் வந்தபிறகு, நிலப் பிரபுக்கள், குத்தகைச் சீட்டை கூலிக்கு சாகுபடி செய்வதாக எழுதி வாங்கியிருக்கிறார்கள் என்பதை படித்தும் காண்பித்திருக்கிறேன். கனம் பக்தவச்சலம் அவர்கள் குளித்தலைக்கு வந்தபொழுது, அவர்களிடத்தில் இம்மாதிரி நூற்றுக்கணக்கான ஒப்பந்தங்கள் காண்பிக்கப்பட்டன. அவர் அவைகளைப் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டார். ரெவின்யூ அமைச்சர் அவர்களும் பார்த்திருக்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது, சுட்டிக்காட்டவில்லை என்று சொன்னது ஆச்சரியமாயிருக்கிறது. அதைத் திருத்தவேண்டுமென்று யோசனை சொல்லியிருக்கிறோம். இந்த மாதிரி எழுதி வாங்கிவிட்டு முன்சீப் கோர்ட்டுக்குப் போய் "ஸ்டே" வாங்கிவிடுகிறார்கள். இதனால் விவசாயி நிலத்திலே இறங்க முடியவில்லை. குளித்தலை முன்சிப் கோர்ட்டில் 300-க்கு மேல் ஸ்டே மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு ஸ்டே கொடுக்கப்பட்டிருக்கிறது.

17th September 1958] [Sri M. Kalyanasundaram]

திருச்சி ஜில்லாவில் முசிரி, குளித்தலை தாலுக்காக்களில்மட்டும் 300–க்கு மேற்பட்ட சாகுபடியாளர் மீது குத்தகைச் சீட்டு வாங்கிக்கொண்டிருந்தவர்கள் இப்படி குத்தகை சீட்டுகளை மாற்றி எழுதி வாங்கிக்கொண்டு, ஸ்டே மனுக்கள் போட்டு ஸ்டே வாங்கி இருக்கிறார்கள். இதைப்பற்றி சபையிலேயும் சொல்லப்பட்டிருக்கிறது. செக்ஷன் 6 (ஏ)–ஐத் திருத்தவேண்டுமென்ற யோசனையும் கொடுத்திருக்கிறேன். அந்த செக்ஷனில் "If in any suit before any Court for possession of or injunction in relation to any land, it is proved by affidavit or otherwise .. .. .. " என்று சொல்லப்பட்டிருக்கிறது. அபிடவிட்மட்டும் போட்டால் நிரூபித்துவிட்டதாக ஆகாது என்று கோர்ட்டுகள் கருதி சாகுபடியாளர் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாமல், நிலச்சுவான்தார்கள் சொல்வதை ஏற்றுக்கொண்டு, சாகுபடியாளர்களை நிலத்திலிருந்து வெளியேற்றுகிறார்கள். முசிரிக்குப் பக்கத்திலுள்ள கிராமங்களில் இந்த மாதிரி உத்தரவு வாங்கப்பட்டு விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள். இதற்கு பொறுப்பு ரெவென்யூ டிபார்ட்மெண்டுதான். சட்டத்தின்படி குத்தகை முச்சிலிக்காவை நிலப்பிரபுக்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் மூன்று நகல்கள் எடுத்து அனுப்பவேண்டும். ஒன்றை தாசில்தார் ரெஜிஸ்தார் பண்ணவேண்டுமென்று இருக்கிறது. ஒரு தாசில்தார்கூட இதைப் பதிவு செய்வது கிடையாது. கோர்ட்டில் சாட்சியமாக தாக்கல் செய்யப்படவேண்டுமென்று சொன்னால், ஒரு தாசில்தார் ஆபீசிலிருந்தாவது ரிக்கார்டு வருவது கிடையாது. எந்த ரிக்கார்டுகளை அந்த ஆபீசில் ஒழுங்காக வைத்திருக்கிறார்கள்? எல்லாம் வேஸ்டுபேப்பர் பாஸ்கெட்டுக்குத்தான் போகிறது. நிலப்பிரபுக்கள் இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொண்டு, தாலுகா ஆபீசில் சொல்லி அதைப் பதிவு செய்யாமல் தடுத்து முன்சீப் கோர்ட்டில் மனுப் போட்டு விவசாயிகளை வெளியேற்றுவிடுகிறார்கள். ஆகவே செக்ஷன் 6–ஏஐத் திருத்தவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இடைத்தாரர்கள் முச்சிலிக்கா எடுத்துக்கொண்டிருந்தால், அந்த முச்சிலிக்காவை ரத்து செய்துவிட்டால் அவர் கீழ் குத்தகை எடுக்கக்கூடிய விவசாயிக்கு உரிமை கிடையாது என்று ஹைகோர்ட் சொல்லியிருக்கிறது. கையேறு மாட்டேறு சட்டம் வந்தபோது இம் மாதிரிப் பகுதி சேர்க்கப்பட்டிருந்தது. இந்த மசோதா இவ்வளவு காலம் தாழ்த்தி தயாரிக்கப்பட்டிருந்தும்கூட ஏன் அந்த மாதிரி ஷரத்து சேர்க்கப்படவில்லை என்று புரிந்து கொள்ள முடியவில்லை. இந்த இரண்டும் சேர்க்கப்பட்டிருக்குமேயானால், அக்கிரமமான நில வெளியேற்றங்களை தடுத்து நிருத்தியிருக்கலாம். அமைச்சர் அவர்கள் பொறுமையோடு கவனிக்கவில்லை என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. இலாக்காவில் இருக்கும் அதிகாரிகளுக்கு புரிந்து கொள்ள சக்தியில்லை என்று நான் சொல்ல மாட்டேன், ஆனால் பொறுமையில்லை என்றுதான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த சட்டத்தை இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடிப்பது என்பது ஆட்சேபனைக்குரிய விஷயம் அல்ல. இன்னும் ஒரு வருஷத்திற்கு நீடித்துத்தான் ஆக வேண்டும். இம்மாதிரி திருத்தங்களைச் செய்து அதை நீடித்தால்தான் பயனுடையதாக இருக்கும் என்பதை கனம் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். பல விடங்களில் நில வெளியேற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று நான் சொல்லும் பொழுது, புள்ளி விவரம் கொடுக்கமுடியுமா என்று கேட்டார்கள். ஏற்கெனவே கொடுத்தும் இருக்கிறேன். தஞ்சை, திருச்சி, மற்ற ஜில்லாக்களைப் பற்றியும் புள்ளி விவரங்கள் கொடுக்க முடியும். சிறு நிலச்சுவான்தார்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்பதற்காக "விதி விலக்கு" மட்டும் கொடுத்து, சட்டம் வருமேயானால், நில வெளியேற்றம் தான் அதிகரிக்குமே தவிர, இந்த நிலச் சீர்திருத்தம் பூரணமாகாது. நிலச் சீர்திருத்தத்தை பூரணமாகச் செய்யப் போகிறோம் என்று சொல்லி, இதுவரையிலும் செய்த சட்டங்களையும் கொஞ்சம் கொஞ்சமாக ரத்து செய்து விடுவார்களோ என்றுதான் நினைக்கவேண்டியிருக்கிறது. குத்தகை விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்று திட்டம் 1955–ம் வருஷத்திலேயே இருந்தது. நியாய வாரத்தை நிர்ணயிக்கிறோம் என்று வாக்குறுதி கொடுத்தார்கள். அதற்குப் பிறகு நில உடமைக்கு வரம்பு,

கட்டி, சொந்த சாகுபடிக்கு எவ்வளவு வைத்துக்கொள்ளலாம் என்று நிர்ணயம் செய்து, அதைவிட அதிகமாகச் சாகுபடி செய்து கொண்டிருப்ப வர்கள் விவசாயிகளுக்கு பங்கிட்டுக் கொடுக்கவேண்டுமென்று 1954-ம் வருட கவர்னர் உரையில் இருக்கிறது. இதுதான் அரசாங்கத்தின் கொ
3-40 p.m. ள்கை என்று அமைச்சர் அவர்களும் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார் கள். ஆனால் இப்பொழுது 3 வருஷங்கள் ஆகியும் கூட இன்னும் இந்தக் கஷ்டங்கள் போகவில்லை. அதற்குப் பதிலாக, கொடுத்த பாது காப்பை எப்படி எப்படிப் பரிக்கலாம் என்கின்ற நிலைமைதான் ஏற்பட்டி ருக்கிறது.

அடுத்தப்படியாக, நில உடமைக்கு வரம்பு கட்டி, அதிகமாக இருக்கக் கூடிய நிலத்தை, சிறு நிலச்சுவான்தார்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்பதற்காக விவசாயிகள் பாதிக்கக்கூடிய முறையில் அவர் களுக்குப் பங்கு போட்டுக் கொடுக்காமலிருந்தால்தான் இதை வெற்றி கரமாக நடத்த முடியும். சிறு நிலச்சுவான்தார்கள் சொந்த சாகுபடி க்கு நிலத்தை எடுத்துக்கொள்ளக்கூடிய முறையில் சட்டம் திருத்தப்பட் டால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் நிலத்தை இழக்க நேரிடும். இந்த மூன்று வருஷ அவகாசத்தில் நிலப் பிரபுக்கள் தங்கள் நிலத்தை குடும் பத்தில் இருக்கக்கூடிய பலபேர்களுக்கும் 10 ஏகரா வீதம் பங்கு போட்டு வைத்திருக்கிறார்கள். பல நிலப் பிரபுக்கள்கூட சிறு நிலச்சுவான்தார் என்று சொல்லிக்கொண்டு சொந்த சாகுபடிக்கு வேண்டும் என்று விவசாயிகள் கையில் இருக்கக்கூடிய நிலத்தை பிடுங்கிக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படும். ஆகவே இந்த அளவு காலதாமதம் கூடாது. அடுத்து வரக்கூடிய திருத்த மசோதாவானது பூரணமாக இருக்க வேண்டும். நில உடமைக்கு வரம்பு கட்டவேண்டுமென்பதை வற்புறுத்திக் கூறு கிறேன். இதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன என அமைச்சர் அவர்க கள் சொன்னால், இம்மாதிரி பொதுவான முக்கியமான விஷயங்களில் எதிர்க்கட்சிகளின் உதவி வேண்டுமென்று கருதினால், எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறலாம். எதிர்க்கட்சித் தலைவர்களையும் மற்ற முக்கியஸ் தர்களையும் கூட்டிவைத்துப் பேசி சங்கடங்கள் என்னென்ன இருக்கின்றன என்பதை ஆராய்ந்து முடிவு செய்யலாம். எல்லோரும் ஒப்புக்கொள் ளக்கூடிய முறையில் திருத்தங்களைக் கொண்டுவரலாம். அம்மாதிரி ஆலோ சனைக்குப் பிறகு கொண்டுவரப்படும் மசோதாவிற்குச் சக்தி அதிகமாக இருக்கும். நல்ல முறையில் அமுல் நடத்துவது சாத்தியமாகும். ஆகவே, இந்த மசோதாவை அப்படியே நிறைவேற்றிக்கொண்டாலும் கூட, அடுத்து வரக்கூடிய மசோதாவை துரிதமாகக் கொண்டுவரவேண்டும், இந்த மசோதாவைக் கொண்டுவருவதற்கு முன்பு எல்லாக் கட்சியினர்களின் அபிப் பிராயங்களையும் கேட்கவேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டு, என்னு டைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : கனம் சபாநாயகர் அவர் களே, இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்ற திருத்தத்தை நான் ஒத்துக்கொள்ளுவதற்கில்லை. அதற்கான காரணங்களை விளக்குகிறேன். இது மிக சின்னஞ்சிறிய மசோதா. இதிலே இருப்பது மூன்றே மூன்று பிரிவுகள்தான். முதலாவது பிரிவு மசோதாவின் டைடில். அதோடு அது போய்விடுகிறது. இரண்டாவது பிரிவில்தான் இந்தச் சட்ட த்தை மூன்று மாதங்கள் நீடிக்கவேண்டுமென்று இருக்கின்றது. அதை நான் ஒரு வருஷமாக மாற்றவேண்டுமென்று திருத்தம் கொடுத்திருக்கி றேன். மூன்றாவது பிரிவு புதியதாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒரு ஆர்.டி.ஓ ஏற்கனவே 145, Cr.P.C. பிரகாரம் ஒரு தீர்ப்புக் கொடுத் திருந்தால் இது வக்கீல்களுக்கு நன்றாகத் தெரியும்—பிற்பாடு இந்த Cultivating Tenants Prot ction Act பிரகாரம் ஏதாவது பெடிஷன் கொடுக்கப்பட்டால், அது அதே ஆர்.டி.ஓ. வுக்குப் போனால் அவ்வளவு சரியல்ல. ஏனென்றால் அவர் மனது ஒருவிதத்தில் பண்படுத் தப்பட்டிருக்கிறது. அது எப்பொழுதும் அவரை உறுத்திக்கொண்டிருக்கி றது. ஆகையால் அவரே இந்த பெடிஷன்களையும் விசாரிக்கக்கூடாது. வேறு புதிய ஆர்.டி.ஓ. இதை விசாரிக்கவேண்டுமென்று திருத்தம்

கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் இதை அவர் புதியதாக கவனிப்பார். இந்த ஷரத்து மிகவும் அவசியமானது என்று கருதி இதைச் சேர்த்திருக்கிறோம். ஏன் இந்தத் திருத்தம் மாத்திரம் சேர்க்கப்பட்டிருக்கிறது, மற்ற திருத்தங்களெல்லாம் சேர்க்கப்படவில்லை என்று சொன்னார்கள். மற்ற திருத்தங்களெல்லாம் அவ்வளவு சுலபம் அல்ல. இந்தத் திருத்தம் ரொம்ப அவசியம். இது மனிதனுடைய முக்கியமான உரிமையை பாதிக்கிறது. ஏற்கனவே விசாரித்த ஆபீஸரே மறுபடியும் விசாரித்தால், நியாயம் சரியாகக் கிடைக்காது. ஆகவேதான் இந்த புது ஷரத்தை இப்பொழுது இந்த மசோதாவில் சேர்த்திருக்கிறோம். அவ்வளவுதான் இந்த மசோதாவில் இருப்பது. மூன்று பிரிவுகளைக் கொண்ட இந்த மசோதாவை பொறுக்குக் கமிட்டிக்கு அனுப்பவேண்டுமென்று சொல்லுவது நியாயமல்ல என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதோடுகூட, இந்த மசோதாவைப் பற்றி பேசும்போது அநேக அங்கத்தினர்கள் மற்ற விஷயங்களெல்லாம் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அதாவது, இந்தச் சட்டம் ஏற்பட்டு, அது நடைமுறையில் நடந்துவருவதிலே பல கஷ்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது அங்கத்தினர்கள் சில கஷ்டங்களைப் பற்றி சொன்னார்கள். இன்னும் பல கஷ்டங்கள் இருக்கின்றன. எனக்குத் தெரிந்த சில கஷ்டங்கள் இருக்கின்றன. ஆபீஸர்களும், போர்டும் சில கஷ்டங்களை எடுத்துச் சொன்னார்கள். இம்மாதிரி கஷ்டங்களெல்லாம் இருப்பதனால்தான், இந்தத் திருத்தங்களை உடனடியாகக் கொண்டுவர முடியவில்லை.

நாங்கள் காலதாமதம் செய்கிறோம் என்று ஒரு அங்கத்தினர் சொன்னார். நாங்கள் காலதாமதம் செய்யக்கூடாது, 3 மாதங்கள் போதும் என்றுதான் முதலில் நினைத்தோம். ஆனால் அது இவ்வளவு சீக்கிரம் முடியாது. பல பிரச்னைகள் எழுகின்றன என்று தோன்றியதால் மறுபடியும் ஒரு வருஷத்திற்கு இந்த சட்டத்தை நீடிக்கவேண்டுமென்று திருத்தம் அமைக்க வேண்டியிருந்தது. கனம் அங்கத்தினர் ஒருவர் கூறினார் "இதை ஏன் முன்னாலேயே கொண்டுவரக்கூடாது? இவ்வளவு நெருக்கடியான நிலைமையில்தான் கொண்டுவரவேண்டுமா? நிர்ப்பந்தமான கட்டத்தில் கொண்டுவந்து ஒரு வருஷம் நீடிக்கவேண்டுமென்று கேட்கிறார்களே? டிபார்ட்மெண்டு தூங்குகிறதா?" டிபார்ட்மெண்டு ஒன்றும் தூங்கவில்லை. டிபார்ட்மெண்டு இதை கவனித்துக் கொண்டு வருவதால்தான் புதுப்புது பிரச்னைகள் எழுகின்றன. அதையெல்லாம் ஆராய்ந்து அதற்கு தக்க பரிகாரம் தேடவேண்டியிருக்கிறது. இதிலிருந்தே டிபார்ட்மெண்டு இதை அடிக்கடி கவனித்து வருகிறார்கள் என்பது தெரியவரும். ஆகையால் தூங்குகின்ற சமாசாரம் ஒன்றுமில்லை. எவ்வளவு சீக்கிரம் கொண்டுவரமுடியுமோ அதற்காக எல்லா பிரயாசைகளையும் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

சிறு நிலச் சுவான்தார்களுக்கும் ஓரளவுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். அவர்களுக்கு எந்த வகையிலே கொடுப்பது, இம்மாதிரியான பிரச்னைகளெல்லாம் இருக்கின்றன. சில விதவைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு நிலமேதான் கதி. நிலத்தையே நம்பி அவர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். அவர்களுக்கு வேறு வழியில்லை. இன்னும் இம்மாதிரி வேறு சிலரும் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நியாயமான முறையில் ஒரு பரிகாரம் தேடவேண்டும். அவர்களுடைய வாழ்க்கை பாதிக்காத வகையிலும் மற்ற டெனண்டுகளுக்கும் பாதகம் ஏற்படாத வகையிலும் ஒரு சூழ்நிலை அமைக்கவேண்டும். அதற்காகத்தான் கொஞ்சம் தாமதம் ஆகிறது.

சட்டம் செய்வதிலே இன்னொன்று கவனிக்கவேண்டும். எவ்வளவு பெரிய மேதாவிகள் சேர்ந்து சட்டம் செய்தாலும் கூட, அதில் ஒரு கஷ்டமும் ஏற்படாமல் உலகத்தில் எங்குமே இருந்ததில்லை. சட்டம் அமுல்

செய்யப்படும்பொழுது தான் கஷ்டங்கள் தெரிகின்றன. அதனால்தான் "கேஸ் லா" பிரமாதமாகிக்கொண்டு வருகிறது. ஒரு வருஷத்தில் கொடுக்கப்பட்ட தீர்ப்பு வரும் வருஷத்தில் இருப்பதில்லை. அது மாறிக்கொண்டே போகிறது. கோர்ட்டுகளில் நிறைய கேஸ்கள் வந்துகொண்டிருக்கின்றன. வக்கீல்களுக்கும் நிறைய வேலை இருந்துகொண்டிருக்கிறது. "கேஸ் லா" பெரிதாகிக்கொண்டே வருகிறது. துருவித் துருவி ஆராய்ந்து சட்டம் செய்தாலும் அதை அமுல் நடத்தும்பொழுது ஏதாவது கஷ்டம் ஏற்படத்தான் செய்கிறது. அதை நாம் தவிர்க்க முடியாது. எல்லாவற்றிற்கும் நாம் முதலிலேயே சட்டத்தில் பந்தோபஸ்து செய்துவிட முடியாது. நடைமுறையிலே பல கஷ்டங்கள் ஏற்படுவதை நாம் பார்க்கிறோம். அதற்கெல்லாம் தகுந்த முறையில் நாம் பரிகாரம் தேடி திருத்தி அமைக்க வேண்டியிருக்கிறது. பின்பு வரும் மசோதா கட்டாயம் பொறுக்குக் கமிட்டிக்கு விடப்படும். பொறுக்குக் கமிட்டியில் அங்கத்தினர்கள் தங்களது ஆலோசனைகளை சொல்லலாம். பிறகு எந்த வகையிலே எந்த அளவில் திருத்தங்களை அமைக்கலாம் என்று யோசித்து திருத்தங்களைச் செய்யலாம். இந்தச் சட்டத்தின் காலத்தை நீடிக்கவேண்டுமென்ற ஒரு கருத்துத்தான் இந்த மசோதாவில் இருப்பது. ஆகையால் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். பின்னால் கூடிய சீக்கிரம் வரப்போகின்ற மசோதாவில் கஷ்டங்களையெல்லாம் ஆராய்ந்து பார்த்து, நடுநிலைமையிலிருந்து நியாயம் வழங்கக்கூடிய முறையிலே சீர்தூக்கிப் பார்த்து அதை நல்ல வகையிலே அமைக்கலாம். பொறுக்குக் கமிட்டிக்கு இந்த மசோதாவை அனுப்பவேண்டுமென்ற திருத்தத்தை நான் ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை என்பதை சொல்லிக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI N. K. PALANISAMI: கனம் மந்திரி அவர்கள் பின்னால் திருத்திக்கொள்ளலாம் என்கிறார்கள். அதனால், நான் என் திருத்தத்தை வற்புறுத்தவில்லை.

The amendment was by leave withdrawn.

SRI A. VEDARATHNAM: கனம் கல்யாணசுந்தரம் அவர்கள் பேசியபோது, 300-க்கு அதிகமான புகார்கள், விண்ணப்பங்கள் வந்து இருப்பதாகச் சொன்னார்கள். அது திருச்சி ஜில்லாவில் 28 கிராமங்களைச் சேர்ந்தது அல்லவா? அப்படி தஞ்சை ஜில்லாவிலிருந்து, அதே மாதிரி விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டும்.

MR. SPEAKER: How can the hon. Member reply to it? Only the Hon. Minister can reply to it. I have no objection to the Hon. Minister replying to it.

THE HON. SRI M. A. MANICKAVELU: இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்படாத ஒன்றை அங்கத்தினர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அதற்கு இங்கே விளக்கம் சொல்லுவதற்கில்லை. (சிரிப்பு.)

MR. SPEAKER: The question is—

'That the Madras Cultivating Tenants Protection (Amendment) Bill, 1958 (L.A. Bill No. 26 of 1958) be taken into consideration'.

The motion was put and carried and the Bill was taken into consideration.

17th September 1958]

Clause 2.

MR. SPEAKER: The motion is—

'That clause 2 do stand part of the Bill.'

THE HON. SRI M. A. MANICKAVELU: Sir, I move the following amendment:—

'*For* clause 2, *substitute* the following clause, namely:—

"2. *Amendment of section* 1, *Madras Act XXV of* 1955.—In sub-section (3) of section 1 of the Madras Cultivating Tenants Protection Act, 1955 (Madras Act XXV of 1955) (hereinatfer referred to as the principal Act), for the words 'for a period of three years', the words 'for a period of four years' shall be substituted."

The amendment was put and carried.

Clause 2, as amended, was put and carried.

Clause 3.

MR. SPEAKER: The motion is—

'That clause 3 do stand part of the Bill.'

SRI R. SRINIVASA IYER: இந்த விஷயத்தில், என் திருத்தம் ஒரு சிறிய விஷயந்தான். மற்ற அங்கத்தினர்கள், ஒரு விதமாக இதை . .

MR. SPEAKER: Let the hon. Member first move his amendment. It will have to be seconded.

* SRI R. SRINIVASA IYER: Sir, I move—

'In the proposed sub-section 6 (*c*) (i) line 24 *for* words "The High Court" *substitute* the words "The District Judge or Subordinate Judge having jurisdiction over the land concerned", and in the proposed section 6 (*c*) (2) in line 30 *for* the words "who thereafter holds the inquiry", *substitute* the words "to whom the application or other proceeding is transfered".'

The amendment was duly seconded.

SRI S. M. ANNAMALAI: Sir, I move—

'In sub-clause 2, *after* the words "when it was transferred" *add* the words "and disposed of within three months".'

The amendment was duly seconded.

MR. SPEAKER: Now the clause and the amendments are before the House for discussion.

SRI R. SRINIVASA IYER: Sir, new Section 6-C says—

'(1) On the application of any of the parties and after notice to the parties and after hearing such of them as desire to be heard, or of its own motion without such notice, the High Court may at any stage transfer any application or other proceeding under this Act pending before any Revenue Divisional Officer in any district for disposal to any other Revenue Divisional Officer in the same district.

(2) Where any application or other proceeding has been transferred under sub-section (1), the Revenue Divisional Officer who thereafter holds the inquiry may, subject to any special directions in the case of an order of transfer, either hold the inquiry *de novo* or proceed from the point at which the said application or other proceeding stood when it was transferred.'

Sir, in my amendment I want that for the words "The High Court", the words "The District Judge or Subordinate Judge having jurisdiction over the land concerned" should be substituted. This is intended for the benefit of both the parties so that they may not spend a lot of money over any trainage for going to the High Court to file a Transfer petition. It will be a original application. I believe, the court-fee for an original application will be Rs. 25. It will be an original application for transfer of the exercise of the original civil jurisdiction of the High Court. Therefore, the proper thing will be to give the jurisdiction to the District Judge or Subordinate Judge. Sir, in the Tanjore district, for example, the District Judge has got territorial jurisdiction over only one taluk, Pattukottai. In all other taluks like Mannargudi, Arantangi and Tanjore, the Subordinate Judge has got the original jurisdiction of the principal Civil Court. Whoever has got the original jurisdiction of the principal Civil Court, will have the power of transfer. I am aware that in the original Act, revision petition can go to the High Court but there is no power of appeal. The question of revision is something different from transfer. Therefore, there should be a proper provision to enable the party affected to go to the District Judge. My amendment is intended to benefit the cultivating tenants so that they may not spend a lot of money for filing a Transfer petition in the High Court. Of course, there is a suggestion that the District Collector should be given the power of Revisional jurisdiction but it is not possible for us to amend the Original Act for that purpose. Therefore, I have not suggested it. But so far as the question of revision is concerned, I shall be glad if the Government can bring forward a small amending Bill. So far as transfer is concerned, I do not know why the High Court is given that power. That power should be vested in the District Judge or Subordinate Judge, as is followed in the Criminal Procedure Code.

Regarding the other amendment, it is only the R.D.O. to whom the application or other proceedings is transferred, who will make the inquiry. Therefore, I have proposed in my amendment the words 'to whom the application or other proceeding is transferred'. It is only intended to make the position clear. For instance, if a case is transferred from the Revenue Divisional Officer 'A' to the Revenue Divisional Officer 'B', the latter will be the person who will either proceed from the stage where it was left or start *de novo*. A similar procedure is followed in the Criminal Procedure Code where the maigstrate to whom it is transfered can start *de novo* or start from the place where it was left before a charge was framed. This is all I want to say about my amendment.

17th September 1958]

